

தவறியது ஐரோப்பா 9



பாக். நாடாளு மன்றம் முடிவு 10

ஆசாமில் சரணடைவு 11



அடிலெய்டில் அனல் 24




விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 61

வள்ளுவர் ஆண்டு 2043 தை 12 வியாழக்கிழமை (26/01/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


### ஆபிரிக்கர்களின் வாரிசுகளா இலங்கையர்?

ஆபிரிக்கர்களின் வழித் தோன்றல்கள்தான் இலங்கையர்கள் என்று தொல்பொருள் ஆய்வாளர்களில் ஒரு சாரார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான மேலதிக ஆய்வுகள் இந்த வருடம் இலங்கையில் இடம்பெற உள்ளன. 13 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஆசியாவுக்கு வந்த ஆபிரிக்கர்கள் குழு ஒன்றின் வாரிசுகள்தான் இலங்கையர்கள் என்று தொல்லியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் இலங்கையில்

இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் டாக்டர் மார்த்தி நதலிகாவ இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் நேற்று மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரைச் சந்தித்து இரு நாட்டு உறவுகள் குறித்து விரிவாகப் பேசியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### தேசிய பிரச்சினைக்கு 13 + தீர்வாகாது

காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பரவலாக்குவதோ 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான அதிகாரப் பரவலாக்கத்தை அமுல்படுத்துவதோ தேசியப் பிரச்சினைக்கு தீர்வாகாது என ஜே.வி.பியிலிருந்து பிரிந்த மக்கள் போராட்ட இயக்கம் கூறியுள்ளது. தமிழ் மக்கள் தமது உரிமையைக் கோருவதற்கான உரிமையை தமது அரசியல் இயக்கம் ஏற்றுக் கொள்கிறது எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

### அதிவேக வீதியில் தனியார் பஸ் சேவை

தெற்கு அதிவேக வீதியில் நாளை முதல் தனியார் பயணிகள் பஸ் சேவை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கென இரு தனியார் பஸ்களுக்குப் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதெனத் தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

### விபத்துகள் 86

இலங்கையின் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திறக்கப்பட்டு மூன்று மாதங்களேயான நிலையில் இதுவரை 86 வாகன விபத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இம் மாதத்தில் மட்டும் விபத்துகள் சடுதியாக அதிகரித்துள்ளன. அதிவேக நெடுஞ்சாலையில் போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப் பிடிக்காமல் வாகனம் செலுத்திய காரணத்திற்காக இதுவரை 9070 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவற்றுள் இவ் ஆண்டு மட்டும் 999 பேருக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பருத்தித்துறையில் 17 வயது மாணவி கடத்திச் செல்லப்பட்டுப் படுகொலை

### வீட்டுக்கு அருகே சடலம் கண்டுபிடிப்பு

எஸ்.ஹரிஸ்

பருத்தித்துறை, ஜன. 26

பருத்தித்துறை சக்கோட்டைப் பகுதியில் நேற்று மாலை 17 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து நேற்றிரவு அந்தப் பகுதியில் பெரும் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

பருத்தித்துறை சக்கோட்டையைச் சேர்ந்த இருதயநாதர் மேரி டிலக்சனா (வயது 17) என்ற மாணவியே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அல்வாய் வடக்கு றோ.க.த.க. வில் கல்வி பயிலும் இந்த மாணவியின் சடலம் நேற்று இரவு அவரது வீட்டுக்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் மேலும் கூறினர்.

சக்கோட்டை பழைய வேதக்

27

### ஊடக சுதந்திரம் இலங்கைக்கு 163

பிரிட்டனைத் தலைமையகமாக கொண்ட எல்லைகளற்ற ஊடகவிலாளர் அமைப்பினால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் ஊடக சுதந்திரம் குறித்த பட்டியலில் இந்த ஆண்டில் இலங்கை மேலும் பின்தள்ளப் பட்டுள்ளது.

2011/2012ஆம்

27

# சர்வதேச போர்க்குற்ற விசாரணை அமெரிக்கா உடன் வலியுறுத்தாது

## இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேறும் சாத்தியம் குறைவு

வோஷிங்ரனிலிருந்து உதயன் பிரதிநிதி

வோஷிங்ரன், ஜனவரி 26

ஜெனீவாவில் அடுத்த மாத இறுதியில் ஆரம்பமாக உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கை மீது சர்வதேச போர்க் குற்ற விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்துவதில் அமெரிக்கா தீவிரம் காட்டாது என்று வோஷிங்ரனில் இராஜதந்திர வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. பாதிக்கப்பட்ட தமிழர்களே சர்வதேச போர்க்குற்ற விசாரணை ஒன்றைக் கேட்காத நிலையில் அத்தகைய விசாரணை ஒன்றுக்கு அமெரிக்கா உடனடியாக அழுத்தம் கொடுக்கக்கூடாது என்று அமெரிக்கராஜாங்கத் திணைக்களத்தின் அதிகாரிகளில் பலரும் ஆலோசகர்களில் பலரும் ஆலோசனை கூறியிருக்கிறார்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற மேற்கு நாடுகள் முயற்சிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. அதற்கான முயற்சிகளைச் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபைபோன்ற மனித உரிமை அமைப்புக்கள் மேற்கொண்டு வருகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவி பிள்ளையும் (நவநீதம்பிள்ளை) அடுத்த மாதத்தில் இலங்கைக்கு மேற்கொள்ள இருந்த தனது

27

## காணி, பொலிஸ் அதிகாரங்களை தமிழ் மக்கள் கோரவில்லை – பஸில்

கொழும்பு, ஜன. 26

''வடக்கு, கிழக்கு மக்கள் காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கோரவில்லை. அவர்கள் தமக்குச் சொந்தமாகக் காணிகளையும், பொலிஸாரின் பாதுகாப்பையும் தான் கேட்கின்றனர். இந்தச் சலுகைகளை வழங்குவதற்கு அரசு தயாராகவே உள்ளது'' - என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினூடாகவே பிரச்சினைகள் பரிசீலிக்கப்படவேண்டும். இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாக ஊடகவியலாளரொருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்

27

## மக்களின் கோரிக்கையையே கூட்டமைப்பு பிரதிபலிக்கிறது

### பஸிலுக்குச் செல்வம் சாட்டையடி

கொழும்பு, ஜன. 26

''எமது மக்களுக்குத் தேவையான அதிகாரங்களையும், உரிமைகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டிய கடப்பாடு மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் எமக்கு உள்ளது. மக்களின் கோரிக்கைகளைப் பிரதிபலிக்கும் வகையிலேயே எமது செயற்பாடுகள் உள்ளன என்பதை இலங்கை அரசு புரிந்துகொள்ள வேண்டும்'' - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் கூற்றுக்குப் பதிலடி கொடுக்

27

## பண்டத்தரிப்பில் நேற்றுப் பரபரப்பு இரு மனித எலும்பு எச்சங்கள் மீட்பு

தி.அமுதன்



யாழ்ப்பாணம், ஜன. 26

பண்டத்தரிப்பில் நேற்று இரு மனிதர்களின் எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டன. இராணுவத்தினரின் முன்னாள் மண் அணைக்கு அருகாக இருந்த கிணறு ஒன்றினுள் இவை காணப்பட்டன.

பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் இளவாலை - பண்டத்தரிப்பு பிரதான வீதியில் 'நேர்ச்சவடி' என்ற இடத்தில் இருந்து

27

## காணாமற்போன யுவதி கொல்லப்பட்டாரா?

### மனித எச்சங்கள், தடயங்கள் மீட்பு



யாழ்ப்பாணம், ஜன.26

மூன்று மாதங்களுக்கு முன்னர் காணாமற்போன யுவதி ஒருவரின் மண்டையோடு மற்றும் எலும்புக் கூடு என்பன நேற்று சாவகச்சேரி தனங்கிளப்பு பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இதேயிடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் அற்புத மலர் (வயது-24) என்பவரே இவ்வாறு காணாமற்போய் பின்னர் எலும்புக் கூடாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

தனங்கிளப்புப் பகுதியில் களப்புடன் அண்மித்த வயற்கரையிலிருந்தே இந்த

27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் 'கறுப்பு ஜனவரி'

## ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்; இறுதி நேரத்தில் இடமாற்றம்




கொழும்பு, ஜன. 26

ஊடகங்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளைக் கண்டித்தும் அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அரசை வலியுறுத்தியும் நேற்றுப் பெரும் எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னதாக இந்த ஆர்ப்பாட்டத்தைக் கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தைக் குழப்புவதற்காக காடையர்கள் குழுவொன்று அந்த இடத்தில் வந்திருப்பதாகத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் லிப்டன் சதுக்கத்திற்கு மாற்றப்பட்டது.

'கறுப்பு ஜனவரி' எனப் பெயரிடப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் ஊடகவியலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்குமாறு அரசிடம் வலியுறுத்துவதற்காகவே ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் காடையர்களுடன் சண்டையிடுவதற்காக அல்ல என்றும் ஏற்பாட்டுக் குழுக்களில் ஒன்றான முஸ்லிம் மீடியா போரத்தின் உபதலைவர் தாஹா முஸம்மில் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த வருடங்களில் ஊடகங்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. ஊடகவியலாளர் எக்னலிகொட கடத்தப்பட்டிருந்தார்; லங்கா ஈ நியூஸ் நிறுவனமும், சிரச நிறுவனமும் தாக்கப்பட்டன. இவ்வாறு பல தாக்குதல்கள் இடம்பெற்றன.

இந்தச் சம்பவங்கள் மற்றும் கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக முறையான விசாரணைகள் எவையும் நடத்தப்படவில்லை.

ஜனவரி மாதத்தில்தான் அதிக சம்பவங்கள் இடம்பெற்றன. இதனால் 'கறுப்பு ஜனவரி' என இந்த ஜனவரியை நாம் பிரகடனப்படுத்தி ஆர்ப்பாட்டத்தை நடத்தினோம். ஒவ்வொரு வருடமும் ஊடகவியலாளர்களின் உரிமையை வலியுறுத்தி அமைதியான போராட்டங்கள் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இந்த ஆர்ப்பாட்டத்தை நாம் புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தோம். ஆர்ப்பாட்டத்தை குழப்புவதற்கு காடையர்கள் குழுவொன்று அங்கு நிற்பதாக எமக்குத் தகவல் கிடைத்தது. இதனால் நாம் லிப்டன் சதுக்கத்திற்கு ஆர்ப்பாட்டத்தை இடமாற்றி மிகவும் அமைதியான முறையில் போராட்டத்தை நடத்தினோம்.

காடையர்களுடன் போராடும் ஆற்றலுடன் நாம் இல்லை. அதற்காக நாம் ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. எமது பிரச்சினைகளை அரசு அடையாளம் கண்டு ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே எமது கோரிக்கை.

எமது பிரச்சினைகளை இந்த ஆர்ப்பாட்டத்தின் ஊடாக நாம் அரசுக்கு மிகவும் தெளிவாகத் தெரிவித்துள்ளோம். அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என அரசை கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

(உ-சி)

# பிஸ்ரல் கொள்ளையர் கைவரிசை முரசுமோட்டையில் 20 பவுண் அபேஸ்

## இறந்தவரின் நினைவான மோதிரத்தை விடவும் இரங்கவில்லை

கிளிநொச்சி, ஜன.26

கிளிநொச்சி, முரசுமோட்டை, சேத்துக்கண்டி முருகன் கோவிலுக்கு முன்பாகவுள்ள அந்தணர் வீடு ஒன்றில் 'பிஸ்ரலுடன்' புகுந்த முகமூடிக் கொள்ளையர்கள் தங்க நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

கத்தி, கைத்துப்பாக்கி (பிஸ்ரல்) என்பவற்றுடன் முகத்தை கறுத்தத் துணியால் மறைத்துக் கட்டிய முகமூடிக் கொள்ளையர்கள் அந்தணர் ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்தனர்.

வயது முதிர்ந்த தாய் மற்றும் மகனின் கழுத்தில் கத்தியை வைத்து வீட்டில் இருக்கும் நகை மற்றும் பணத்தை தரும்படி அவர்கள் மிரட்டினர்.

பயந்துபோய் செய்வதறியாது நின்ற அவர்கள் தம்மிட மிருந்த 20 பவுண் நகை மற்றும் 3 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையர்களிடம் கொடுத்துள்ளனர்.

அப்போது, போரின் போது உயிரிழந்த தனது சகோதரனின் மோதிரத்தை யாவது தங்களிடம் தந்து விட்டுச் செல்லும்படி அந்தணர் கொள்ளையர்களிடம் கெஞ்சிக் கேட்டார். எனினும் கொள்ளையர்கள் இரங்கவில்லை. ''நாங்களும் உங்களைப் போலவே போரில் எல்லாவற்றையும் இழந்தவர்கள் தான்'' என்று சுத்தத் தமிழில் கூறி அந்த மோதிரத்தையும் விட்டுவைக்காது எடுத்துச் சென்றனர்.

அத்தோடு நிற்காமல் வீட்டில் இருந்தவர்களை ஓர் அறைக்குள் வைத்து பூட்டி திறப்பையும் எடுத்துச் சென்றுவிட்டனர் கொள்ளையர்கள்.

மேற்படி சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ங-10-6)

# பட்டப் பகலில் கூரை பிரித்து தங்கநகை, பணம் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன.26

பட்டப்பலில் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 2 லட்சம் ரூபா பெறுமதியான தங்கநகை மற்றும் பெருந்தொகை பணம் ஆகியவற்றை அபகரித்துக் கொண்டு தப்பிச்சென்றனர்.

இந்த துணிகர திருட்டுச் சம்பவம் நேற்றுமுன்தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி வீதியில் உள்ள மா. பவநேசன் என்பவரது வீட்டில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

வீட்டில் ஆண்கள் இல்லாததைப் பொருட்படுத்தி திருடர்கள் கூரையை பிரித்து உள்ளே இறங்கி இந்த திருட்டை மேற்கொண்டுள்ளனர். வீட்டில் உள்ள கணவன், மனைவி இருவரும் அரச உத்தியோகத்தர்கள். அவர்கள் பணிக்கு சென்றுவிட்டார்கள். பிள்ளைகளும் பாடசாலைக்கு சென்று விட்டனர். இதனை அவதானித்து சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே திருடர்கள் வீட்டுக்குள் நுழைந்து திருட்டில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீட்டார் வீடு திரும்பிய போது உள்ளே இருந்த அலுமாரிகள் திறக்கப்பட்டு அவற்றுள் வைக்கப்பட்டிருந்த உடு புடைவைகள் அனைத்தும் நிலத்தில் சிதறிக்கிடந்தன அத்துடன் கூரையோடும் கழற்றப்பட்டிருந்தது. இதன் பின்னரே திருட்டுப் போன சம்பவம் அவர்களுக்கு தெரிய வந்தது. இந்தத் திருட்டு தொடர்பாக வீட்டு உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

(த-17)

# குருநகர் மீனவர் மூவருக்கு பிணை கோரி மனு தாக்கல்

யாழ்ப்பாணம், ஜன. 26

போதை வஸ்துகள் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் யாழ். குருநகர் மீனவர் சார்பில் யாழ். மேல் நீதிமன்றில் பிணைகோரித் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு அரச சட்டவாதியின் ஆட்சேபனைகளுக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இலங்கைக் கடற்பரப்பில் கடந்த நவம்பர் 28 ஆம் திகதி அன்று இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 3 மீனவர்களும் போதை வஸ்துகள் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இவர்களுக்கு பிணை கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முத்துராசா கமல் கிஸ்ரியன் கீர்த்திராஜா, கில்மெற்றாக் மற்றும் ஞானப்பிரகாசம் துஷாந்தன் ஆகியோரே குருநகரைச் சேர்ந்த மீனவர் ஆவர்.

இவர்களுடன் தமிழ்நாடு இராமேஸ்வரத்தைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் 5 பேருமாக 8 பேர் கடற்படையினரால் கற்கடதீவுக்கு அருகில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

இலங்கை மீனவர்கள் மூவரும் தமது இயந்திரப் படகில் மீன் பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அங்கு சென்ற கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகவும் அதே கடல் பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் ஐவரையும் சேர்த்து காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் பிணை மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பிணை மனுக்கள் சம்பந்தப்பட்ட குருநகர் மீனவர்களின் மனைவிமாரால் சட்டத் தரணி சர்மினி விக்னேஸ்வரன் ஊடாக தாக்கல் செய்யப்பட்டன. தங்களிடம் இருந்து எந்தவொரு போதைப் பொருளும் கைப்பற்றப்பட வில்லை எனவும் இந்த வழக்கில் ஏனைய சந்தேக நபர்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்கள் 5 பேரையும் முன்னர் தமக்குத் தெரியாது என்றும் இவர்களது பிணை மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் போதைவஸ்துக்கள் சட்டத்தின் கீழ் கடந்த மாதம் மூன்றாம் திகதி முன்னிலைப்படுத்தப்பட்ட இந்த மூவரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 1700 கிறாம் நிறையுள்ள ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தாக இவர்களுக்கு எதிராக குற்றம் சாட்டப்படுள்ளதாகவும் சந்தேக நபர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

20 லட்சம் ரூபா தரப்பட்டால் மூவரையும் விடுதலை செய்ய முடியுமெனவும் வாக்குறுதி தரப்பட்டது. மூவரும் அதனை நிராகரித்ததனாலேயே பொலிஸ் நிலையத்தில் மூவரும் ஒப்படைக்கப்பட்டனர் பின்னர் என அவர்களது பிணை மனுக்களில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடலில் மிதந்து கொண்டிருந்த பொதியொன்றை கடற்படையினர் கண்டெடுத்ததையடுத்து கடற்படையினர் குருநகர் மீனவர்களின் இயந்திரப் படகில் ஏறி அவர்களைக் கட்டிப்போட்டதாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பிணை மனுக்களை ஆதரித்துச் சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் ஆஜரானார். பிணை மனுக்களில் எதிர்மறை மனுதாரராகக் குறிப்பிடப்பட்டிருக்கும் காங்கேசன்துறை தலைமைப் பொலிஸ் அதிகாரி மற்றும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகியிருந்த அரச சட்டவாதி வி.திருக்குமரன் பிணை மனுக்களைத் தாம் ஆட்சேபிப்பதாக நீதிமன்றில் தெரிவித்தார்.

எழுத்து மூலமான ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்வதற்கு அவர் கால அவகாசம் கோரினார். எனினும் குடும்பத் தலைவர்களான சந்தேக நபர்கள் விளக்கமறியலில் இருப்பதால் அவர்களின் குடும்பங்களின் நிலைமையைக் கவனத்தில் கொண்டு குறுகிய தவணை வழங்குமாறு கோரப்பட்டதையடுத்து, எதிர்வரும் முத [illegible] ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்ட நீதிவான் வழக்கை ஒத்திவைத்தார். (த-4)

# மரண தண்டனை

கொழும்பு, ஜன.26

போதைப் பொருள் குற்றச்சாட்டில் கைதான மருதானை பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

3 கிறாம் ஹெரோயினைத் தன்வசம் வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டு, நிரூபிக்கப்பட்டுள்ள நிலையிலேயே சந்தேக நபருக்கு இத் தண்டனைவழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

# உறுப்பு நாடுகளை வளைத்துப்போட இலங்கை தீவிர பிரயத்தனம்

கொழும்பு, ஜன.26

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டுவரப்படுவதை முறியடிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு முக்கிய அமைச்சர்களை அனுப்பி ஆதரவு கோரவுள்ளார் எனத் தெரியவருகிறது.

இந்தத் திட்டத்தின்படி, பொது நிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரட்ண தலைமையிலான குழுவொன்று தென் அமெரிக்க நாடுகளான சிலி மற்றும் உருகுவே ஆகியவற்றுக்குச் செல்லவுள்ளது.

மற்றொரு தொகுதி உறுப்பு நாடுகளைக் கவனிக்க, ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தலைமையிலான குழு பயணமாகவுள்ளது.

தற்போது டில்லி சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், எதிர்வரும் 29 ஆம் திகதி இரு ஆபிரிக்க நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேராவும் மற்றொரு குழுவுக்குத் தலைமை தாங்கிச் செல்லவுள்ளார்.

அதேவேளை, மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் சிங்கப்பூர், மியான்மர் ஆகிய நாடுகளுக்குச் செல்லவுள்ளார்.

பாகிஸ்தானுக்கான அவரது பயணம் இன்னமும் உறுதிசெய்யப்படவில்லை.

இந்தப் பயணங்களின் போது நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு இலங்கையின் உயர்மட்டக் குழுக்கள் விளக்கமளிக்கவுள்ளன.

அத்துடன் தற்போது மேற்கொள்ளப்படும் நல்லிணக்க முயற்சிகள் குறித்தும் இந்தக் குழுக்கள் விவரித்து கூறவுள்ளன.

சனல்-4 குற்றச்சாட்டுக்களை முறியடிக்கும் வகையிலான பரப்புரைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படவுள்ளது.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எத்தனை காலம் நீளும் இந்த இழுத்தடிப்பு நாடகம்?

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பதில் தனக்கு அதீத அக்கறை உண்டு என்பதனை வெளிக்காட்டுவதில் அரசாங்கம் பலே கில்லாடித் தனத்துடன் செயற்பட்டு வருகிறது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முழு வலுவும் தன்னிடம் இருந்த போதிலும், அதனைப் பூரணமாகவோ, தக்கவாறோ பயன்படுத்தாமல் காலத்தை வாங்கி காரியத்தை இழுத்தடித்துச் செல்கிறது.

சரி, போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் நியாயமான தீர்வு குறித்து நினைக்கவும் கூடாது என்ற வன்மம் அரசுக்கு இருந்திருக்கலாம். ஆனால், அமைதியும் சமாதானமும் மலர்ந்திருக்கும் இக்காலத்தில், கடந்த சுமார் இரண்டரை ஆண்டு காலமாக அரசு உகந்த தீர்வைக் காண்பதில் உரிய கவனம் செலுத்தாமல், சறுக்கி வருகிறது.

நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் கிடைத்த மென்போக்கான அழுத்தங்களின் பின்னரே அரசு இது விடயத்தில் தனது பார்வையைச் செலுத்தியது. இன்னமும் கூட, அது அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக இல்லை. உள்நாட்டுக்கும் சரி, சர்வதேசத்துக்கும் சரி, தான் மிகுந்த விருப்பத்துடனேயே செயலாற்றிக் கொள்கிறது என்று காட்டிக்கொள்வதே அதன் இப்போதைய இயல்பாகி விட்டது.

போர்க் குற்றம் என்ற பொறிக்குள் விழாமல் தப்பித்துக்கொள்வதற்கு, இனப்பிரச்சினைத் தீர்வில் அக்கறை உள்ளதாகக் காட்டிக் கொள்ள வேண்டிய தேவையும் அவசியமும் இருப்பதால், அடிக்கடி அதனை விரிந்த விழிகளுடன் அரசு பார்க்கிறது. அவ்வளவு தான்.

ஆனாலும், சணம் பித்தம், சணம் வாதம் என்ற நிலையில் தொங்கிக் கொண்டிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தித் தீர்வுக்கான அத்திபாரத்தை இடுதல், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்து அதனூடு தீர்வுக்கான படிமுறையை வகுத்தல், மூதவையை (செனேற் சபை) நிறுவி சிறுபான்மையினருக்கான உரிமைகளை உறுதி செய்தல் என்று சோடனைகளைப் பலவிதங்களில் மாற்றி மாற்றிக் கட்டிக் கொள்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களை நிதானத்துடன் மேற்கொள்ளாமல், செட்டியாரின் செட்டுத் தனம் போன்ற போக்குடன் செயற்பட்டுக் காலத்தை வாங்கும் அரசின் தந்திரம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதனை இங்கு விரித்து எழுத வேண்டியதில்லை.

ஆகக் கடைசியாக, நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் தனது முடிவை முதன்மைப்படுத்தி, அதில் பங்கு கொள்ளுமாறு ஏனைய கட்சிகளிடம் 'மன்றாடி' வருகிறது. ஆனால் பிரதான கட்சிகளோ, முதலில் சிறுபான்மை இனக் கட்சிகளுடன் பேச்சு நடத்தி ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னர், அதனை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் ஆராய்ந்து, ஒரு முடிவுக்கு வருவதே சரியான, உகந்த மார்க்கம் என்று இடித்துக் கூறுகின்றன.

இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு அதுவே உகந்த வழி என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பன வலியுறுத்தி வருகின்றன.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு தரப்பும் ஒவ்வொரு கதை சொல்லிக் கொண்டிருக்கின்றது. இது விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டைக் காணமுடியவில்லை–

அரசியல் தீர்வை முன்வைப்பது குறித்து, தனது உறுதியான நிலைப்பாட்டை அரசு பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் –

ஜனாதிபதி கூறும் 13+ திட்டத்தின் பிரகாரம் எந்த வகையான தீர்வு முன்வைக்கப்படும் என்பதனை நாட்டுக்கும் மக்களுக்கும் அவர் விளக்க வேண்டும். அது விடயத்தில் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவது அவசியம்–

அரசு உடனடியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி, அதன் ஊடாக அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பது இன்றியமையாதது –

அவ்வாறன்றி, காலத்தைக் கடத்தும் நோக்குடன் அரசு செயற்பட்டால், நாட்டில் மீண்டும் விபரீதமான விளைவுகள் உண்டாகக் கூடிய அச்சுறுத்தல் காணப்படுகிறது. அதற்கு இடமளிக்காமல் அரசு விரைந்து செயற்பட வேண்டும் – என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா வலியுறுத்தி உள்ளார்.

வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சிகளுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளின் போது எட்டப்படும் இணக்கப்பாட்டை பரிசிலிப்பதாகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமையவேண்டும் -

இதற்கு முன்னர்,

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு அமைக்கப்பட்ட குழுக்களுக்கு நேர்ந்த கதியைக் கருத்தில் கொள்ள வேண்டும். கடந்த கால படிப்பினைகளை உணர்ந்து கொண்டு செயற்பட்டால் மட்டுமே, பிரச்சினையைத் தீர்க்க முடியும் - என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹஸன் அலி அர்த்த புஷ்டியுடன் கருத்து வெளியிட்டுள்ளார்.

அர்த்தம் நிறைந்த இத்தகைய கருத்துக்களை அரசாங்கம் சீரணித்துக்கொள்ளும் என்றோ, அத்திசையில் செயற்படும் என்றோ எதிர்பார்க்க முடியவில்லை. அரசமைப்புச் சட்டத்தின் பதின்மூன்றையோ, 13 + ஐயோ நடைமுறைப்படுத்தும் விருப்பம் இன்னமும் அதனிடம் காணப்படவில்லை.

இவற்றைக் குறுக்காலே வெட்டிவிடும் வகையில், காணி, பொலிஸ் அதிகாரங்களை வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு வழங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அடம்பிடிக்கிறது அரசு.

தனது அந்தப் பாட்டுக்கு பக்கப்பாட்டு பாடுவதற்கு, தீவிர இனவாதப் போக்குள்ள தெற்கின் இனவாதக் கட்சிகளை அரவணைத்து வைத்துக் கொண்டிருக்கிறது.

கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு என்ற நிலையை இலங்கை அரசு என்றோ ஒரு நாள் எய்த வேண்டி வந்தால்,

ஏதோ ஒரு வகையில் சர்வதேச அழுத்தம் தேவையென்ற நிலையே உருவாகும்.

இனப்பிரச்சினைக்கு அரசு நியாயமான தீர்வு வழங்கவில்லை என்ற காரணத்தை உள்ளார்ந்து வைத்துக்கொண்டு, தத்தமது அரசியல், பொருளாதார நலன்களை நிலைநிறுத்துவதற்கு சர்வதேச சக்திகள் மறைமுகமாக உள்ளே நுழைய முயற்சிக்கக் கூடும்.

வெள்ளம் வந்த பின்னர் அணைகட்ட முடியுமா? அதற்கு முன்னரே தடுக்க வேண்டும் என்றாவது அரசு நினைக்கலாகாதா?

# 'மிஹின் எயார்' நிறுவனத்துக்கு இலங்கை வங்கி 25 கோடி ரூபா

கொழும்பு, ஜன.26

'மிஹின் எயார்' விமானசேவை நிறுவனத்துக்கு இலங்கை வங்கியிடமிருந்து 25கோடி 22 லட்சத்து 73 ஆயிரத்து 55 ரூபா செலவினமாகப் பெறப் பட்டுள்ளதாக சிவில் விமான சேவைகள் அமைச்சர் பியங்கர ஜயரத்ன நாடாளுமன்றத்தில் வைத் துத் தெரிவித்தார்.

இந்த விமான சேவை நிறுவனத்துக்கு ஆரம்ப முதலீடு 25 கோடி ரூபா எனவும் இன்றைய அளவில் அதன் வசமுள்ள மொத்த முதலீட்டுத் தொகை 555 கோடியே 70 லட்சத்து 30 ஆயிரத்து 810 ரூபா எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் 2010, 2011 ஆம் ஆண்டுகளில் 'மிஹின் எயார்' விமான சேவைகள் நிறுவனமானது 305 கோடியே 83 லட்சத்து 39 ஆயிரத்து 751 ரூபாவை இலாபமாகப் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் ஜயரத்ன தெரிவித்தார்.

அந்த ஆண்டுகளில் 5லட்சத்து 86 ஆயிரத்து 337 பயணிகள் பயணங்களை மேற்கொண்டுள்ளதுடன் 2 ஆயிரத்து 834 மெற்றிக் தொன் பொருள்கள் 'மிஹின் எயார்' விமான சேவையின் மூலம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவினால் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த போதே அமைச்சர் இத் தகவலைத் தெரிவித்தார். (த-22)

# அளவுக்கதிகமான பரசிற்றமோல் மரணத்தை விளைவிக்கும்

கொழும்பு,ஜன.26

இலங்கையில் மருந்துகள் விஷமாவதால் ஏற்படும் உயிரிழப்புக்களில் பெரும்பாலானவை அளவுக்கு அதிகமான பரசிற்றமோல் பாவனையால் ஏற்படுவதாக மருந்துகள் அதிகார சபையின் பணிப்பாளர் ஹேமந்த பெனரகம தெரிவித்துள்ளார்.

வலி நிவாரணி எனப் பல்வேறு வர்த்தகப் பெயர்களில் சந்தை களில் மருத்துவர்களின் சிபாரிசு இன்றி பரசிற்றமோலைப் பெறக் கூடியதாக உள்ளமையே இதற்கு பிரதான காரணம் எனவும் அவர் கூறினார்.

மருத்துவரின் சிபார்சுக்கு அமைய 6 மணித்தியாலயங்களுக்கு ஒரு தடவை மற்றும் நபரொருவரின் நிறைக்கு அமைய இரண்டு எனவும் பிரமாணம் விதிக்கப்பட்டாலும் அநேகமானோர் தமது எண்ணப்படி இதைப் பயன்படுத்துகின்றமையே பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதாவும் பணிப்பாளர் மேலும் கூறினார்.

1984 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க மருந்துகள் சட்ட விதிகளுக்கு அமைய பரசிற்றமோல் மற்றும் விற்றமின் 'ஏ' யைக் கொண்டுள்ள மருந்துகளை மக்களுக்கு விநியோகிக்கும் போது இந்த மருந்தை அளவு பரிமாணத்துக்கு அதிகமாகப் பயன்படுத்துவது ஆபத்தானது எனக் குறிப்பிடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எனவே தற்போது பரவி வரும் காய்ச்சலுக்கு பரசிற்ற மோல் மருந்தைப் பெறும் போது, மருத்துவ சிபார்சுக்கு அமைய அதைப் பயன் படுத்துமாறு மருத்துவர் பெனரகம தெளிவுபடுத்தியுள்ளார்.

(த-22)

# நாமலுக்கு பிரதியமைச்சர் பதவி?

யாழப்பாணம்,ஜன.26

ஜனாதிபதியினால் திட்டமிடப்பட்டிருந்த அமைச் சரவை மாற்றம் கைவிடப்பட்டுள்ள போதிலும் நாமல் ராஜபக்ஷவுக்குப் பிரதியமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாக அரச வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

அமைச்சரவை மாற்றம் தொடர்பாக முன்கூட்டியே ஊடகங்களில் வெளியான தகவல்களை அடுத்து கடந்த 17 ஆம் திகதி இடம்பெறவிருந்த அமைச்சரவை மாற்றத்தை ஒத்திவைப்பதற்கு ஜனாதிபதி முடிவு செய்திருந்தார்.

எவ்வாறான போதிலும் நாமல் ராஜபக்ஷ, ஹேமாலி குணசேகர, மனுஷ்ய நாணயக்கார போன்ற அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிய வருகின்றது.

சோதிடர்களின் ஆலோசனைகளுக்கு அமைய ஜனாதிபதிக்கே உரிய சுப எண்ணை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவை மாற்றத்துக்கான திகதி குறிப்பிடப்பட்டிருந்தாலும் ஊடகங்கள் ஊடாக அது வெளிச்சத்துக்கு வந்தமையால் அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டுள்ளது. (த-22)

# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு விரைவில் அடையாள அட்டைகள்

யாழப்பாணம்,ஜன.26

உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களுக்கு உரிய அடையாய அட் டையை உள்ளூராட்சி ஆணை யாளர் பெற்றுக் கொடுத்து அதற்கான விவரத்தை அனுப்பிவைக்க வேண்டும் என உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா அறிவித்துள்ளார்.

தேர்தல் இடம்பெற்று வர்த்தமானியில் உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் வெளியாகியவுடன் இவர்களுக்கான அடையாள அட்டை வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

தலைவர்களுக்கான அடையாள அட்டைகள் உள்ளூராட்சி ஆணையாளர்களினாலும் உறுப்பினர்களுக்கான அடையாள அட்டை சபையின் தலைவரினாலும் வழங்கப்பட வேண்டும். இவற்றைக் காலதாமதமின்றி உடன் வழங்கி அதற்கான அறிக்கையை அனுப்பி வைக்குமாறு அமைச்சர் அதாவுல்லா கேட்டுள்ளார்.

(த)

# வருமான வரிப் பரிசோதகர் பரீட்சையின்றி உள்ளீர்ப்பு

யாழ்ப்பாணம்,ஜன.26

மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தற்போது வருமான மேற்பார்வையாளர்களாக உள்ள அனைவரும் வருமான வரிப் பரிசோதகர்களாக பரீட்சையின்றி உள்வாங்கப்படவுள்ளனர்.

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மரியதாசன் ஜெகூ இந்த அறிவித்தலை சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதேநேரம் உள்ளூ ராட்சி சபை வருமான மேற்பார்வையாளர் பதவிக்குரிய புதிய நியமனங்கள் எதனையும் மேற்கொள்ளவேண்டாம் எனவும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

(த)

# நிகழ்வுகள் இன்று

**பொதுக் கூட்டம்**

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் சி.பூபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. அருந்தவநாதன் கலந்துகொள்வார். (ம-207)

**மாதாந்த கூட்டம்**

யாழ். மாநகர சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான முதலாவது மாதாந்தக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

**பரிசளிப்பு விழா**

யாழ்.பிராந்திய பயிற்சி நிலைய 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆண்டு வரையான பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகப் பயிலுனரின் ஏற்பாட்டில் "ஒழுங்கற்ற முறையில் குப்பை கொட்டுவதைக் குறைத்தல்" எனும் தலைப்பிலான நிகழ்ச்சித் திட்டத்தின் பரிசளிப்பு விழா பிற்பகல் 4.30 மணிக்கு உடுவில் கற்பகப் பிள்ளையார் கோயில் முன்றிலில் இடம்பெறவுள்ளது. பொதுச் சுகாதாரப் பரிசோதகப் பயிலுனர் வ. அபிராஜ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், கௌரவ விருந்தினராக உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி அ.ஜெயகுமரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறும்.

(ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடிய சுடலையைத் திறப்பதா? கொடிகாமம் மக்கள் கொதிப்பு

தென்மராட்சி, ஜன. 26

தனியார் ஒருவரின் காணியில் அமைந்திருந்த கெற்பேலி மத்திய மயானத்தை தென்மராட்சிப் பிரதேச செயலர் மூடியபோதும் மீண்டும் அதனைக் கொடிகாமம் பொலிஸார் திறக்க முயற்சித்துவருகின்றனர். இதனால் பொது மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

கெற்பேலிப் பகுதியில் நான்கு மயானங்கள் உள்ளன. கெற்பேலியின் தெற்குப் புறமாக கடற்கரையுடன் அண்டிய பகுதியில் இருந்த மயானம் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்தது. இதனால் அந்தப் பகுதி மக்கள் தற்காலிகமாக கெற்பேலி மத்தியில் ஒரு மயானத்தை அமைத்து பயன்படுத்தி வந்தனர். குறித்த மயானம் அரசினால் பொது மக்களுக்காக வழங்கப்பட்ட குடியிருப்பு காணியொன்றிலேயே அமைக்கப்பட்டிருந்தது.

2008ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் இயல்பு நிலை திரும்பிய பின்னர் கெற்பேலி மத்தி குடியிருப்பு காணியில் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கினர். எனினும் தற்காலிகமாக மயானம் அமைக்கப்பட்ட காணியில் அதன் உரிமையாளர் குடியமர முற்பட்டபோது சிலர் அதனைத் தடுத்தனர். இது குறித்து அவர் கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலரிடம் முறையிட்டார்.

பிரதேச செயலர் இந்த விடயம் தொடர்பாக குறித்த பகுதி கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் கடந்த வருடம் கலந்துரையாடினர். அதன் பின்னர் தற்காலிகமாக அமைக்கப்பட்ட மயானத்தை மூடியதோடு, அந்தக் காணிக்குரிய குடியிருப்பாளரை அங்கு குடியமரவும் அனுமதித்தார்.

**மூடப்பட்ட மயானத்தை மீளத் திறப்பதற்கு பொலிஸார் எடுத்துவரும் முயற்சி அப்பகுதியில் உள்ள பொது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.**

அத்துடன் படைத்தரப்பினருடன் கலந்துரையாடி அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் சிக்கியிருந்த மயானத்தை மீளவும் மக்கள் பயன்படுத்த அனுமதி பெற்றுக் கொடுத்தார்.

இந்த நிலையில் மூடப்பட்ட மயானத்தை திறக்க கடந்த வாரம் பொலிஸார் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கை அப்பகுதியில் உள்ள பொது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (ங-207)

## 13பிளஸ்: அரசுக்குள் முறுகல்

கொழும்பு, ஜன. 26

தேசிய இனப்பிரச்சினைக்கு 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வை வழங்குவதற்குத் தயார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்ததையடுத்து, அரசில் அங்கம் வகிக்கும் கடும்போக்குடைய பங்காளிக் கட்சிகள் அதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருவதால் அரசுக்குள் கடும் முறுகல்நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜ. பக்ஷ, அரசின் பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடாமல் 13 பிளஸ் குறித்து இந்திய அமைச்சரிடம் உறுதிமொழி வழங்கியதால், அதிருப்தியடைந்துள்ள கடும்போக்குடைய அமைச்சர்கள், அது குறித்தான தமது நிலைப்பாட்டை அரச தலைமையிடம் நேரில் தெரிவிக்கவுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் செனட்சபை அமைக்கும் திட்டத்தை வரவேற்றுள்ள இந்த கடும்போக்குடைய பேரினவாதக் கட்சிகள், மஹிந்த சிந்தனையில் இவ்வாறானதொரு திட்டம் உள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளன.

13 பிளஸை கடுமையாக எதிர்க்கும் அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், அரசு ஒருபோதும் இவ்வாறான தீர்மானத்தை தன்னிச்சையாக எடுக்கக்கூடாது என நிபந்தனை விதித்துள்ளனர் எனவும் அறியமுடிகின்றது.

எனவே, இந்த விடயங்கள் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ, விரைவில் அரச தரப்பினருடன் முக்கிய சந்திப்பொன்றை நடத்தவுள்ளார் எனத் தெரியவருகிறது. (உ-சி)

## கிட்டுவின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள்

இந்துமா கடலில் வீரகாவியமான கேணல் கிட்டு உட்பட பத்து வீரர்களின் நினைவேந்தல் நிகழ்வு பிரான்ஸ் மற்றும் சுவிஸ் நாடுகளில் அனஷ்டிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் பாரிஸில் தமிழர் நடுவத்தின் பணிமனையில் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன.

சுவிஸ் நாட்டில் ரிக்கன்பேச் நகரில் நினைவு வணக்க நிகழ்வுகள் நடைபெற்றன. தொடர்ந்து எழுச்சி நிகழ்வுகளும் உரைகளும் நிகழ்த்தப்பட்டன.

(10)

## நிரந்தர வீடுகள்

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராம மக்கள் நிரந்தர வீடுகள் வழங்க வேண்டு மெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் அரச காணியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்கின்ற 16 குடும்பங்கள் தாம் குடியிருக்கும் காணியில் நிரந்தர வீடுகள் வழங்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைச்சி பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 30 ஆண்டுகளுக்கு மேலாக தாம் வாழும் காணியில் நிரந்தர வீடுகள் வழங்கி நல்ல எதிர்காலத்தை உருவாக்கித் தருமாறு இவர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து ஸ்கந்தபுரம் அரச காணியில் உள்ள 16 குடும்பங்களின் நிலை தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தபடும் என அங்கு தெரிவிக்கப்பட்டது. (க-6-410)

## முல்லையில் கடற்றொழில் பாதிப்பு

அக்கராயன்,ஜன.26

முல்லைத்தீவுக் கடலில் இந்திய றோலர்களின் அத்துமீறல் காரணமாக இறால் பிடிக்கும் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நவம்பர், டிசெம்பர் மாதங்களில் கடல் கொந்தளிப்புக் காரணமாக முல்லைத்தீவுக் கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடுவதில்லை. ஆனால் இந்திய றோலர்கள் கரைக்கு அண்மித்த பகுதியில் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இதன் காரணமாக இறால் பிடிக்கும் தொழில் பாதிப்படைந்துள்ளது. இதனால் இந்த உற்பத்தியும் தடைப்பட்டுள்ளது எனக் கடல்தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு இந்திய கடற்தொழிலாளர் களின் அத்துமீறல்களும் இலங்கைக் கடற்படையினரின் பாரபட்சமான செயல்களுமே காரணமாக உள்ளன என கடற்றொழிலாளர்கள் தெரிவிக் கின்றனர்.

அத்துமீறும் இந்திய கடற்தொழிலாளர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதில் கடற்படை தவறுவதாகவும் அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.(க-410)



கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் நடைபெற்ற கால்கோல் விழாவில் இடம்பெற்ற கரகாட்ட நிகழ்வு.

## தமிழக மீனவர் 43 பேர் புல்மோட்டையில் கைது

இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழகத்தைச் சேர்ந்த 43 மீனவர்கள் புல்மோட்டைக் கடல் பகுதியில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு திருகோணமலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்ககப்பட்டுள்ளனர். இவர்கள் வந்த ஆறு மீன்பிடிப்படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நாகப்பட்டிணம் அக்கரைப்பேட்டைப் பகுதியைச் சேர்ந்த இவர்கள் புல்மோட்டை பிரதேசத்தின் வடக்குக் கடல் பரப்பில் சட்டவிரோதமான முறையில் மீன் பிடித்தார்கள் எனக் கூறப்படுகின்றது.

தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கையின் வடபகுதிக் கடற்பரப்பில் சட்ட விரோதமான முறையில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் என்று குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இப்போது கிழக்கு கடற்பரப்பிலும் தமிழக மீனவர்களின் ஆக்கிரமிப்பு அதிகரித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

திருகோணமலையில் கைது செய்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் யாரையும் சந்திக்க செய்தியாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. கைது செய்யப்பட்ட மீனவர்கள் நாளை விடுவிக்கப்படுவர் என மற்றுமொரு செய்தி தெமரிவித்துள்ளது.

## ஊர்சுற்றும் போட்டி

கிளிநொச்சி கண்டாவளை ம.வியின் இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு ஊர்சுற்றும் போட்டியொன்று நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளை மகாவித்தியாலயத்தின் இந்த ஆண்டுக்கான இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு ஆண், பெண்களுக்கான ஊர்சுற்றும் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை காலை வெளிக்கண்டல் சந்தியில் இருந்து ஆரம்பமாகியது. சங்கத்தடி, மானடித்தகுளம் வரை சென்று பாடசாலை முன்றலில் முடிவடைந்துள்ளது.

ஆண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை உ.ஜனுபம், இரண்டாவது இடத்தை மா.மதனும், மூன்றாமிடத்தை மா.நிசாந்தனும் பெற்றுக் கொண்டனர்.

பெண்களுக்கான போட்டியில்முதலாமிடத்தைவை.அனுசாவும், இரண்டாம் இடத்தை சி.சிலாஜினியும், மூன்றாவது இடத்தை இ.மகிராவும பெற்றனர். (க-6)

# கைக்கெட்டியும் திட்டங்கள் வாய்க்கு எட்டவில்லையே

## நிரந்தரக் காணி இன்மையால் வன்னி மக்களின் அவலம்

மன்னார், ஜன.26

நிரந்தரக் காணிகள் இல்லாததால் வன்னி மக்களுக்கு கைக்கெட்டிய திட்டங்கள் பலவும் வாய்க்கெட்டாமல் போய்விடுகின்றன. எனவே காணிகளுக்கான ஆவணங்கள் இல்லாத குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகளையும் கழிப்பறைகளையும் வழங்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

''காணிகளைப் பகிர்ந்தளிப்பதற்கும் காணி ஆவணங்களை வழங்குவதற்கும் தாமதங்கள் ஏற்படு கின்றன. எனவே அரச மற்றும் பொதுக் காணிகளில் கடந்த பல ஆண்டுகளாக வசித்து வரும்குடும்பங்களின்தேவைகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்காலிக வீடுகளையும், கழிப்பறைகளையும் வழங்க வேண்டும்'' என்று நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**காணி தொடர்பான பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க முடியாது. எனவே மக்களின் வாழ்வாதார உதவிகளை காணிகளைக் காரணம் காட்டி நிறுவனங்கள் தட்டிக்கழிக்கக் கூடாது**

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் காணிகள் இன்றி நீண்ட காலமாகத் தனியார் காணிகளிலும் அரச காணிகளிலும் தங்கியுள்ளவர்களுக்கு காணிகளையோ அல்லது காணி [illegible]களையோ அரசால் வழங்க முடியாத நிலையே காணப்படுகின்றது. இந்த நிலையில் சொந்தக் காணி இல்லாத காரணத்தால் அதிக குடும் பங்களுக்கு தற்காலிக வீட்டுத் திட்டங்களோ அல்லது வாழ்வாதார உதவி களோ கிடைப்பதில்லை யென்று கடந்தவெள்ளிக்கிழமை நடைபெற்ற கரைச்சிப் பிரதேசஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரி விக்கப்பட்டது.

இதையடுத்துக் காணி தொடர்பான பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க முடியாது என்றும், தற்போது அனைத்தையும் இழந்து மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தையும் வாழ்விட வசதிகளையும் கருத்தில் கொண்டு அடிப்படைத் தேவைகளை வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்காலிக வீடுகளையும் தற்காலிக மல சல கூடங் களையும் வழங்க வேண்டு மென்றும் மாவட்டஅபிவிருத்திக்குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சந்திரகுமார் தெரி வித்துள்ளார்.

அக்கராயன்குளம் பகுதியில் உள்ள அரச காணியில் வசிக்கும் 20 வரையான குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகளை வழங்குவதற்குக் கிராம அலுவலர்அனுமதிக்க வில்லையென அந்தப் பகுதிக் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டதையடுத்து அவர்களுக்கு உடனடியாகத் தற்காலிக வீடுகளையும் வழங்குமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ந்தது பிரச்சினை

யாழ்ப்பாணம், ஜன.26

வலி. மேற்கில் உலக தரிசன நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் 2000 லீற்றர் கொள்ளளவு உடைய பெரிய நீர்த்தாங்கி நேற்றுமுன் தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 11 மாதங்களுக்கு முன்னர் வடக்கு மாகாண ஆளுநரால் அடிக்கல் நடப்பட்ட நீர்த்தாங்கி திட்டமே நேற்று முன்தினம் பல இழுபறிகளுக்கு மத்தியில் திறந்து வைக்கப்பட்டு தண்ணீர் தாகம் தீர்க்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தை வலி. மேற்கு சமூகம் முழு மனதோடு ஏற்றுக் கொண்டுள்ள தாக வலி.மேற்குப் பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வுக்கு வலி. மேற்குப் பிரதேச சபை தலைவி திருமதி நா.ஐங்கரன் தலைமை தாங்கினார்.



**பணிகள் முடிவுற்று 11 மாதங்களாகி விட்ட பின்பும் திறக்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்த அராலி தண்ணீர்த் தாங்கி ஒரு வழியாகத் திறந்து வைக்கப்பட்டது**

பிரதம விருந்தினர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வடக்கு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதன், வலி. மேற்குப் பிரதேச செயலர் ம.சோதிநாதன், உலக தரிசன நிறுவன அதிகாரி எஸ். றொசாரியோன், வலி. மேற்குப் பிரதேச சபையின் அனைத்து உறுப்பினர்கள், பிரதேச சபை அதிகாரிகள், சாவகச்சேரி நகரசபை செயலாளர் சு.புத்திசிகாமணி உட்படப் பலர்கலந்துகொண்டனர்.

இறுதியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் இணைந்து தண்ணீரை வைபவ ரீதியாகத் திறந்து விட்டனர். (ம)

# 60 ஆண்டு கால சேவை அரைகுறையாக மாறியது

யாழ்ப்பாணம், ஜன.26

சுன்னாகம் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் கடந்த அறுபது ஆண்டுகளாக காலையும் மாலையும் தனது சேவையை வழங்கி வந்தது.

ஆனால் கடந்த டிசெம்பர் மாதம் தொடக்கம் மாலையில் இருமணிநேரம் மட்டுமே இந்த ஆரம்ப மருத்துவ நிலையம் இயங்கி வருகின்றது.

இங்கு கடமையாற்றிய வைத்தியர் ஒப்பந்த அடிப்படையில் 70 வயது வரை கடமையாற்றியவர். தற்போது 70 வயதுக்கு மேற்பட்டவர்களைக் கடமையிலிருந்து நிறுத்தியமையால் அந்த வைத்தியருக்குப் பதிலாக இணுவில் வைத்திய சாலையில் கடமைபுரியும் வைத்தியர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் காலையில் இணுவிலிலும் மாலையில் சுன்னாகத்தில் இருமணி நேரமும் கடமையாற்றுகின்றார்.

இதனால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

**சுன்னாகம் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் இரு நேர சேவைக்குப் பதில் இப்போது இருமணி நேர சேவையே வழங்குகிறது**

காலையும் மாலையுமாக 150 இற்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுச் செல்லும் இந்த வைத்திய நிலையத்தில் மாலையில் மட்டும் அதுவும் இருமணிநேரம் சிகிச்சையளிக்கப்படுவதால் பலர் ஏமாற்றத்தோடு திரும்பிச் செல்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து மக்களின் குறைதீர்க்க முன்வரவேண்டும் என்று பாதிக்கப்பட்டோர் கோரிக்கை விடுகின்றனர். (ம-ரி)

# வீதியோரங்களில் மாமிசக் கழிவுகள்

கொழும்புத்துறை,ஜன.26

கொழும்புத்துறை விதானையார் ஒழுங்கைப் பகுதியில் வீசப்படும் மாமிசக் கழிவுகளால் துர்நாற்றம் வீசுவதுடன் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளும் நுளம்புப் பெருக்கமும் ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியோரங்களில் கொட்டப்படும் குப்பை கூளங்களுடன் மாடு, கோழி போன்ற பிராணிகளின் உடற்பகுதி எச்சங்களும் வீசப்படுகின்றன. அவற்றை நாய்கள், பறவைகள் இழுத்து வீதிகளில் சிந்துவதால் துர்நாற்றம் வீசுகிறது.

இதனால் இந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பெரும் சிரமம் அடைகின்றனர்.

**சட்டவிரோதமாக இறைச்சி வெட்டுவோர் கழிவுகளை இங்கு கொட்டுகின்றனர்**

ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் போயா நாள்களில் சட்டவிரோதமாக மிருகங்களை இறைச்சிக்காக வெட்டி விற்பனை செய்வோரே இந்தப் பகுதியில் மாமிசக் கழிவுகளை வீசிவிட்டுச் செல்வதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறான செயற்பாடுகள் குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (ம-135)

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு நவீன உபகரணங்கள்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குகொழும்பு தெற்கு றோட்டறிக் கழக மும் கொழும்பு அபேட்ஸ் மன்றமும் இணைந்து நோயாளர்களுக்கான நவீன வசதி கொண்ட கட்டில்கள், மெத்தைகள், சக்கர நாற்காலிகள் என்பவற்றைக் கையளித்துள்ளன.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனிடம் இவை வழங்கப்பட்டன. இதன்போது சுகாதார சேவைப் பணிப்பாளர் கருத்துக் கூறுகையில்:

பல வருடங்களாக இடம் பெயர்ந்து அடிப்படை வசதி களற்ற நிலையில் செயற்பட்டு வந்த இந்த வைத்தியசாலை, இப்போது தனது சொந்தக் கட்டடத்தில் பல வசதிகளையும் தேவைகளையும் எதிர்பார்த்து இயங்கி வருகிறது. இந்தவேளையில் நோயாளர்களுக்கு உடனடித் தேவையான நவீன வசதிகள் கொண்ட இந்த உபகரணங்களை வழங்கியமை பாராட்டத்தக்கது என்றார்.

இந்த நிகழ்வில் கொழும்பு தெற்கு றோட்டறிக் கழகத் தலைவர் ரமணா மற்றும் மாவட்டச்செயலாளர் மருத்துவர் பத்மநாதன் மற்றும் வைத்திய அத்தியட்சகர் அ.ஜெயக்குமாரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-36-ரி)

# மானிய அடிப்படையில் உதவிகள் வழங்கல்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு மானிய அடிப்படையில் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் முதற்கட்டமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.

50 வீத மானிய அடிப்படையில் வழங்கப்படும் இந்த உதவியில் நீரிறைக்கும்இயந்திரங்கள்வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இந்த உதவியைப் பெற விரும்புவோரை நல்லூர் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார். (ம-7)

# பாதிரியார் உட்பட மூவர் மீது வழக்கு

### அதிக சத்தத்துடன் பாடல்கள் ஒலிபரப்பியமையே காரணம்

யாழ்ப்பாணம்,ஜன.26

அதிக சத்தத்துடன் பாடல்களை ஒலிபரப்பி வழிபாடு இடம்பெறுவதால் தினமும் இடையூறு ஏற்படுவதாக மூவருக்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் மா.கணேசராஜா அருகிலிருப்பவர்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது எனக் கூறி மூவரையும் பிணையில் விடுவித்ததுடன் வழக்கையும் ஒத்தி வைத்தார். இந்த வழக்கு எதிர்வரும் 31 ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பாதிரியார் ஒருவர் உட்பட மூவருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அரியாலையில் வசித்து வரும் குடும்பப் பெண் ஒருவரே இந்த வழக்கைத் தாக்கல் செய்தார்.

பாதிரியார் அதிக சத்தத்துடன் பாடல்களை ஒலிபரப்பி வழிபாடு செய்வதால் பக்கத்து வீட்டிலுள்ள தாம் பெரும் இடையூறுகளை எதிர் கொள்வதாக மன்றில் முறைப்பாடு செய்யப்பட்டது.

நீண்ட நாள்களாக இந்த நடவடிக்கை தொடர்வதால் தமக்கு இடையூறாக இருப்பதாகவும் கூறினார்.

இதன்போது பிறருக்கு இடையூறு ஏற்படும் வகையில் எந்தவிதமான வழிபாடுகளும் அமையக் கூடாது எனவும் எதிர்காலத்தில் உரிய முறைப்படி செயற்படுதல் வேண்டும் எனவும் கூறி நீதிவான் அவர்கள் மூவரையும் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் வழக்கை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (ம-4)

# ரயில் நிலையக் கட்டடத்தில் இரும்பு திருடும் கும்பல்

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ்.ரயில் நிலையக் கட்டடப் பகுதியில் பழைய இரும்புகளை உடைத்து எடுத்த கும்பல் ஒன்று அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வந்துள்ளதாவது:

யாழ்.ரயில் நிலைய கட்டடம் மற்றும் விடுதிப் பகுதிகளில் உள்ள இரும்பு கேடர்களை திருட்டுக் கும்பல் ஒன்று உடைத்துச் செல்ல முற்பட்டுள்ளது.

இதனை அறிந்து அங்கு விரைந்து சென்ற ரயில்வே திணைக்களப் பணியாளர்கள் சிலர் அந்தக் கும்பலை அங்கிருந்து விரட்டியடித்தனர்.

**அபிவிருத்தி இடம்பெறும் வேளையில் தொடரும் திருட்டுக்களால் விசனம்**

ரயில் பாதைப் புனரமைப்புப் பணிகள் இடம் பெறவுள்ள நிலையில் அதற்கான ஆரம்ப கட்டடப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்வது விசனமளிப்பதாக ரயில்வே திணைக்கள அதிகாரிகள் கூறுகின்றனர். (ம-17)

# வடக்கில் குடாநாட்டிலேயே அதிகூடிய வாகனங்கள்

யாழ்ப்பாணம், ஜன.26

வடமாகாணத்தில் யாழ்.மாவட்டத்திலேயே அதிகூடியளவு வாகனங்கள் பாவனையில் இருப்பதாக வடமாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனப் பாவனை கடந்த 5 ஆண்டுகளாக வடமாகாணத்தில் அதிகரித்துச் செல்லும் நிலைமையே காணப்படுகின்றது.

கடந்த 2011 ஆம் ஆண்டுக்கான புள்ளி விவரங்களிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ்.மாவட்டத்தில் 77 ஆயிரத்து 859 வாகனங்களும் வவுனியா மாவட்டத்தில் 25 ஆயிரத்து 709 வாகனங்களும் மன்னார் மாவட்டத்தில் 8 ஆயிரத்து 913 வாகனங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 474 வாகனங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 989 வாகனங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இவற்றுள் மோட்டார் சைக்கிள், ஓட்டோ, மோட்டார் கார், உழவு இயந்திரங்கள், மோட்டார் லொறி, மினிபஸ், இரட்டை தேவை வாகனங்கள், தனியார் வாகனங்கள், அரச வாகனங்கள், அம்புலன்ஸ் என்பவையே இவ்வாறு கணக்கிடப்பட்டுள்ளன. (ம-15)

# மிதிவெடி அகற்றப்பட்டும் குடியமர அனுமதியில்லை

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மிதிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் இது வரையிலும் அந்தப் பகுதிகளில்மக்கள்மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

[illegible] டங்கும் சில்லாலை வடக்கு (ஜே/148), மாதகல் மேற்கு (ஜே/152), மாதகல் கிழக்கு (ஜே/150), மாரீசன்கூடல் (ஜே/154) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலேயே மிதிவெடி அகற்றப்பட்டுள்ளன. எனினும் மக்கள் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக் கப்படவில்லை. இதில் மாதகல் [illegible] கரையோ[illegible] மற்றும் நிலப் பகுதிகளிலும் மக்கள் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக் கப்படவில்லை. ஏனைய இடங்களில் கடற்கரையோர மான பகுதிகளில் மாத்திரம் மக்கள் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.இந் தப் பகுதிகள் முன்னுரிமை அடிப்படையில் இனங்காட்டப்பட்டு மிதிவெடி அகற்றல் செயற்பாடுகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டன.

குறித்த கிராம சேவகர் பிரிவுகளில் பூரணமாக மிதிவெடி அகற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கையளிக்கப்பட்டது. இருப்பினும் இது வரையில் குறித்த பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறப்படுகிறது. (ம-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

## மத்திய வங்கியின் வடபிராந்தியக் கிளை துரிதம்

யாழ்ப்பாணம், ஜன.26
வடமாகாணத்தில் முதலீட்டையும் உற்பத்தியையும் அதிகரிக்கும் நடவடிக்கைகளை இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய கிளை மேற்கொண்டுள்ளது.

இதற்காக இங்குள்ள முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள், வங்கியாளர்கள், அரச நிறுவனத்தினர் மற்றும் பல்கலைக்கழகத்தினர் ஆகியோரை இணைத்து இந்த அதிகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் வாழ்க்கைச் செலவு கூடிய மாவட்டமாக யாழ்ப்பாணம் கணிக்கப்பட்டுள்ளதுடன் மொத்த தேசிய உற்பத்திக்கான மாகாண ரீதியான பங்களிப்புக் கணிப்பில் கடைசி இடத்தில் வடமாகாணம் உள்ளது.

இவை வடமாகாணத்தில் உற்பத்திப் பெருக்கத்துக்கான தேவையின் முக்கியத்துவத்தையும் பல்துறை முதலீடுகளுக்கான அவசியமான காலம் உருவாகியுள்ளதையுமே எடுத்துக்காட்டுகின்றது.

**வடமாகாணத்தில் முதலீட்டையும் உற்பத்தியையும் அதிகரிக்கும் நிலையில் உற்பத்தியின் அடுத்த கட்டமாக ஏற்றுமதி தொடர்பிலும் சிந்தித்து விரைந்து நடவடிக்கைகள் மேற் கொள்ள வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.**

இந்த நிலையில் முதலீட்டையும் உற்பத்தியையும் தூண்டும் முகமாக பல்கலைக்கழக வளவாளர்களும் தொழில் நிபுணர்களும் உள்ளூர் வளங்களையும் சாத்தியப்பாடுடைய முதலீட்டு வாய்ப்புகளையும் இனங்கண்டு முதலீட்டாளர்களுக்கு வழங்க முன்வர வேண்டும்.

அதேவேளையில், உள்ளூர் முதலீட்டாளர்களும் தெரிவுசெய்யப்பட்ட தமது முதலீடுகளுக்கான நிபுணத்துவ உதவிகளை இவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

முதலீட்டாளர்கள், வணிகர்கள், வங்கிகள், தொடர்புடைய அரச நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றை இணைத்து வடமாகாணத்தில் முதலீட்டையும் உற்பத்தியையும் அதிகரிக்கும் நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

உற்பத்தியின் அடுத்த கட்டமாக ஏற்றுமதி தொடர்பிலும் சிந்தித்து விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

கடலுணவுகள் சில உள்ளூர் விவசாய உற்பத்திப் பொருள்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில் உற்பத்திப் பொருள்கள் ஆகியன வடமாகாணத்திலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடியன.

எனவே முதலீடு அதன் விளைவான உற்பத்தி மற்றும் அதன் தொடர்ச்சியான ஏற்றுமதி ஆகியவற்றில் வடமாகாண மக்கள் அதீத கரிசனை கொள்ள வேண்டும்.

இதனுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இதனை முன்னிட்டு இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய கிளையால் எதிர்வரும் 29 ஆம் திகதி அழைக்கப்பட்டவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றும் நடத்தப்படவுள்ளது. - என்றார். (ம-15)

# வேலை தேடி வந்து பணம் திருடினார்

## அடையாளம் காணப்பட்டு விளக்கமறியலில்

தென்மராட்சி, ஜன.26
சாவகச்சேரி கந்தையா வீதியில் வீடு ஒன்றில் வேலை கேட்டு வந்து 45 ஆயிரம் ரூபாவை அபகரித்துச் சென்ற நெற்பேலி வாசியை சாட்சிகள் இருவரும் அடையாளம் காட்டினர்.

மூன்று தினங்களாக குடும்பத்தினர் பட்டினியாக இருப்பதால் ஏதாவது வேலை தருமாறு சாவகச்சேரி கந்தையா வீதியில் உள்ள வீடொன்றில் கேட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த வீட்டார் காலைச் சாப்பாடு கொடுத்து வளவில் காணப்பட்ட சிறு வேலைகளை செய்யுமாறு கூறியிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த வீட்டார் சமையலில் ஈடுபட்டிருந்த வேளையில் சமையலறை வாசலில் வைக்கப்பட்டிருந்த பையில் காணப்பட்ட பேர்ஸை எடுத்தக் கொண்டு தலைமறைவானார் உதவி கேட்டு வந்தவர்.

**குடும்பத்தினர் பட்டினியில் இருப்பதாகவும் வேலை ஏதாவது தருமாறும் கேட்டுள்ளார்**

இந்தத் திருட்டு தொடர்பாக குறித்த வீட்டார் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவினர் இந்த நெற்பேலி வாசியைக் கைது செய்து கடந்த 14 ஆம் திகதி நீதிவான் முன்பாக முன்னிலைப்படுத்தினர்.

இந்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் நேற்று முன்தினம் அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு பொலிஸாரைப் பணித்திருந்தார்.

பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.


குறித்த வீட்டார் இந்த நபரை அடையாளம் காட்டினர். இந்த நிலையில் குறித்த நபரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை மறியலில் வைக்குமாறு நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார். (ம-207)

# முன்பள்ளி ஆசிரியருக்கு சீருடைகள்

தென்மராட்சி, ஜன.26
தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியைகளுக்குச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

மீசாலை வடக்கு முன்பள்ளி மண்டபத்தில் திங்கட்கிழமை தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு பிரதேசத்தில் உள்ள 148 முன்பள்ளி ஆசிரியைகளுக்கு ஒரே வர்ணச் சீருடைகளைக் கையளித்தார். (ம-207)



நெடுந்தீவுப் பகுதியில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட மலசலகூட உதவித்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் மலசலகூடம் இது. குடியிருப்பாளர் கள் அற்ற காணி ஒன்றினுள் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ள கிணறு ஒன்றைக் குழியாக வைத்து இது அமைக்கப்படுகின்றது. (ம-7)

# சேதமடைந்த மலசலகூடங்கள்; துர்நாற்றத்தால் அசௌகரியம்

யாழ்ப்பாணம், ஜன.26
மல்லாகம் கோணற்புல முகாம், நீதிவான் முகாம் ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடங்கள் சேதமடைந்து காணப்படுவதால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் தொற்றுக் கிருமிகளும் பரவலடைந்துள்ளதாக முகாம் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த இரு நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ள குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாமல் தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீடுகளில் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் தற்காலிகமாக அமைத்துக் கொடுக்கப்பட்ட மலசலகூடங்கள் சேதமடைந்து பாவனைக்கு உதவா தனவாகக் காணப்படுகின்றன.

இதனால் நலன்புரி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே இங்குள்ள குடும்பங்களுக்கு மலசலகூட வசதியை சீராகப் பெற்றுக் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-36)

# குற்றச் செய்திகள்

யாழ்ப்பாணம், ஜன.26
யாழ். ஆரியகுளம் சந்தியை அண்மித்து அனுமதிப்பத்திரமின்றி மரங்களை விற்பனைக்கு வைத்திருந்தமை, போக்குவரத்துக்கு இடையூறாக அவற்றை வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுக்காக யாழ். பொலிஸார் அதன் உரிமையாளரைக் கைது செய்தனர்.

யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் அவர் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

விசாரணையின் போது சந்தேக நபர் தான் சுற்றவாளி என்று மன்றில் தெரிவித்ததையடுத்து இந்த வழக்கு விளக்கத்துக்கென எதிர்வரும் மார்ச் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-4)

* * *

யாழ்ப்பாணம், ஜன.26
வாகனங்கள் நிறுத்துவதற்கு தடை செய்யப்பட்ட இடத்தில் வாகனத்தை நிறுத்திய குற்றத்துக்காக தனியார் பஸ் சாரதி ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

யாழ்.நகர்ப் பகுதியில் இவ்வாறு வாகனத்தை நிறுத்திய யாழ்.கொடிகாமம் வழி சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் சாரதி ஒருவருக்கு எதிராகவே யாழ். போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்தே நீதிவான் மா.கணேசராஜா இந்த அபராதம் விதித்தார். (ம - 4)

# தோல் நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

தென்மராட்சி, ஜன.26
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு தோல் நோயால் பாதிக்கப்பட்டுச் சிசிச்சை பெற வருவோரின் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெருமளவு நோயாளர்கள் வன்னிப் பகுதியைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வரும் தோல் நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலை தோல் சிகிச்சை நிலையத்துக்குச் செல்லுமாறு வைத்திய அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டு வருவதாக நோயாளர்களால் தெரிவித்தனர்.

**பெருமளவு நோயாளர்கள் வன்னிப் பகுதியைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.**

வன்னிப் பகுதி தோல் நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு தோல் சிகிச்சைக்காகச் செல்வதால் நேர விரயம், பண விரயம் என்பன ஏற்படுகின்றன.

மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் ஆகியோர் இதனைக் கவனத்தில் எடுத்து யாழ்.போதனா வைத்தியசாலை தோல் சிகிச்சை நிபுணர் மூலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் வாரத்தில் ஒருநாள் அல்லது மாதத்தில் இரு தடவைகள் தோல் சிகிச்சைப் பிரிவை நடத்த முன்வர வேண்டுமென நோயாளர்கள் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, பூநகரி, முழங்காவில், வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்களே தோல் நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற அதிகளவில் வருகை தருகின்றனர். (ம-207)

# நுளம்பு பெருகும் சூழலால் 8 பேருக்கு வழக்கு

யாழ்ப்பாணம், ஜன.26
தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டுவார நடவடிக்கையின் போது நுளம்பு பெருகும் சூழலைக் கொண்டிருந்த குற்றத்துக்காக 8 பேருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி முதல் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 7 பிரிவுகளில் 60 பேர் கொண்ட குழுவினர் பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

**திடீர் திடீரென நடத்தப்படும் டெங்கு ஒழிப்பு சோதனையில் அகப்படுவோர் அதிகரிப்பு**

இதில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், தெல்லிப்பழை பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராமியப் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், குடும்பநல உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து ஈடுபட்டிருந்தனர்.

இந்தக் குழுவினர் வீடு வீடாகச் சென்று நுளம்பு பெருகும் சூழலைக் கொண்டிருந்த பிரதேசங்களில் பரிசோதனை செய்தனர். ஏனைய கைவிடப்பட்ட காணிகள் மற்றும் பற்றைக் காணிகளை உடனடியாகத் துப்புரவு செய்யுமாறும் பணித்தனர். (ம-313-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலைச் செடிகளை அழிப்பது மலையகத் தமிழரை ஒழிக்கவே

தியத்தலாவை, ஜன. 26

தோட்டங்களில் வளர்க்கப்பட்டு வந்த தேயிலைச் செடிகள் பிடுங்கப்பட்டு, மாற்றுப் பயிர்கள் நடப்படுவது தோட்டத் தொழிலாளர்களின் அடையாளங்களையும், அவர்களின் இனமான இந்திய வம்சாவளியினரை இல்லாதொழிக்கும் நடவடிக்கையாகும் என்று ஊவா மாகாண முன்னாள் தவிசாளர் கே.விஸ்வநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

**தோட்டங்களில் வளர்க்கப்பட்டு வந்த தேயிலைச் செடிகள் பிடுங்கப்பட்டு, மாற்றுப் பயிர்கள் நடப்படுவது தோட்டத் தொழிலாளர்களின் அடையாளங்களையும், அவர்களின் இனத்தையும் இல்லாதொழிக்கும் நடவடிக்கையாகும்.**

இன்று தோட்டத் தொழிலாளர்களுக்கு வேலை குறைப்பு, சம்பளக் குறைப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

தோட்டங்களில் ஆண்டாண்டு காலமாக எமது மூதாதையர்களின் கடும் உழைப்பினால் வளர்க்கப் பட்டு வந்த தேயிலைச் செடிகளை தொழிற்சங்கங்களுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ திட்டமிட்ட வகையில் தோட்ட நிர்வாகங்கள் பிடுங்கி எறிந்துவிட்டு, மரக்கறிகளையும், கறுவா மரங்களையும் நட்டு வருகின்றன. இதனால், தோட்டத் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பு இல்லாதொழிக்கப்படுகின்றது. இவற்றைத் தடுத்து நிறுத்தாவிட்டால், எதிர்காலத்தில் தோட்டத் தொழிலாளர்களின் அடையாளச் சின்னங்கள்முற்றிலும்இல்லாமல்போய்விடும் - என்றார். (ச)

## வனங்களுக்கு பாதுகாப்பு வேலிகள்

நுவரெலியா, ஜன.26

நுவரெலியா மாவட்டத்திலுள்ள அரச வனப்பகுதிகளுக்குத் தீ பரவாமல் வேலி அமைக்க முன்வருமாறு பொலிஸாருக்கும், சிவில் பாதுகாப்பு அமைப்புக் குழுக்களுக்கும் நுவரெலியா மாவட்ட அரச அதிபர் டி.பி.ஜீ.குமாரசிறி பணிப்புரை வழங்கியுள்ளார்.

மாவட்டத்தில் தற்போது வரட்சியான காலநிலை தொடர்வதால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விஷமிகள் சிலர் வனப் பகுதிக்குத் தீ வைக்கின்றனர். அவ்வாறு செய்வதைத் தடுப்பதற்காகவே வேலிகள் அமைக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

கடந்தவாரம் அக்கரப்பத்தனை, போபத்தலாவ பிரதேசத்திலும், அதனை அண்மித்த மின்சார நிலையத்துக்கு அண்மையி லுள்ள வனப்பகுதியிலும், விஷமிகள் தீ வைத்தனர். மக்கள் மற்றும் பொலிஸார் மேற்கொண்ட கடும் பிரயத்தனம் மூலம் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

நல்லதண்ணீர் சிவனொளி பாதமலை செல்லும் நெடுஞ்சாலைகளிலுள்ள வியாபார நிலையங்களில் விறகுப் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக அரச அலுவலகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



புதிதாக இரண்டு பஸ்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டி அங்கும்புரை பஸ் உரிமையாளர்களும் ஊழியர்களும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

## அம்பாறை மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தோறும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல் மற்றும் தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை சிறப்பாக முன்னெடுக்கும் வகையில் கடந்த திங்கட்கிழமை அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரிப்பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது என்று அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி ஐ.எல். சித்திக் தெரிவித்தார்.

இதன்போது டெங்கு நோய் பரவுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருந்த குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கான சிவப்புநிற அறிவுறுத்தல்களையும், சூழலை சுத்தமாகப் பேணி வருபவர்களின் வீடுகளை அடையாளப்படுத்தி நீலநிற ஸ்டிக்கர்களையும் ஒட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

கைவிடப்பட்ட நிலையிலுள்ள காணி உரிமையாளர்களை இனம்கண்டு சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தின் கீழ் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், பிரிவுக் கிராமசேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுக்கள் மற்றும் கிராம அபிவிருத்திச்சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் வீடு, வீடாகச் சென்று இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இந்தத் தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை சிறப்பிக்கும் வகையில் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று கடந்த வாரம் நடைபெற்றது. அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பறூஸா நக்பரின் வழிகாட்டலில் கிழக்கிலங்கை அரபுக்கல்லூரி மாணவர்கள் டெங்கு ஒழிப்பு தொடர்பான பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலத்தில் ஈடுபட்டனர். (ச)

## அம்பாறை மாவட்ட மக்கள் ஏப்ரலில் மீள்குடியமர்வு

அம்பாறை, ஜன.26

அம்பாறை மாவட்டத்தின் கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 900 குடும்பங்கள் அவர்களது சொந்த இடங்களில் எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன்பு மீள்குடியமர்த்தப்படுவர் என்று கிழக்கு மாகாண விவசாய கால்நடை அமைச்சர் கலாநிதி துரையப்பா நவரெட்ணராஜா தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராயும் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் போரால் கடந்த 2007ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த போதிலும் இதுவரை மீள்குடியமர்த்தப் படவில்லை. தங்கள் மீள்குடியமர்வு தொடர்பில் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் என்னிடம் வேண்டுகோள்விடுத்தனர்.

**இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் போரால் 2007ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த போதிலும் இதுவரை மீள்குடியமர்த்தப் படவில்லை.**

இந்த மக்களின் வேண்டுகோளை அடுத்து நான் கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு மீள்குடியமர்வு தொடர்பில் கலந்துரையாடி இதற்கான இணக்கம் பெறப்பட்டது.

மக்களை மீள்குடியமர்த்துவதில் உள்ள அடிப்படை பிரச்சினைகளான தற்காலிகக் கொட்டகைகள், வீதி வசதிகள், குடிதண்ணீர் வசதி, மின்சார வசதி, பாடசாலை வசதி ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் - என்றார். (ச)

### பொதுச் சந்தைக் கட்டடத்தில் இருந்து

## வெளியேற இராணுவம் மறுப்பு

மூதூர், ஜன.26

திருகோணமலை, திருஞானசம்பந்தர் வீதியில் நகரசபையால் 65 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப் பட்ட ஐக்கிய பொதுச்சந்தைக் கட்டடத்தில் இராணுவத்தினர் தொடர்ந்து தங்கியிருக்கின்றனர். அவர்கள் அங்கிருந்து வெளியேற மறுப்புத் தெரிவிக்கின்றனர் என்று திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் தெரிவித்தார்.

இதுதொடர்பில் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

**போர் தீவிரமடைந்த காலத்தில் இந்தப் பொதுச் சந்தைக் கட்டடத்தை இராணுவம் தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டது. இன்று வரை இராணுவம் இந்தப் பொதுச் சந்தையில் குடியிருக்கின்றது.**

திருகோணமலை நகரசபையின் தலைவராக பெரியதம்பி சூரியமூர்த்தி இருந்த காலத்தில் இந்தப் பொதுச்சந்தை கட்டப்பட்டது. அப்போது அது 'தமிழ் மார்க்கட்' என்று அழைக்கப் பட்டு வந்தது.

போர் தீவிரமடைந்த காலத்தில் இந்தப் பொதுச் சந்தை கட்டடத்தை இராணுவம் தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டது. இன்று வரை இராணுவம் இந்தப் பொதுச் சந்தையில் குடியிருக்கின்றது. அதனால் சந்தை நடைபெறாதுள்ளது. நகரசபையின் வருமானமும் பாதிக்கப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினரை அங்கிருந்து வெளியேற்றி மீண்டும் ஐக்கிய பொதுச்சந்தைக் கட்டடத்தை திருகோணமலை நகரசபையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## திருமலையில் மீண்டும் கடும்குளிர்

மூதூர், ஜன.26

திருகோணமலை மாவட்டத்தில் பரவலாக மீண்டும் கடும் குளிர் நிலவிவருகிறது. அதிகரித்த பனி காரணமாக மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குளிர்காலநிலை ஆரம்பித்ததையடுத்துக் காய்ச்சல், தடிமல், இருமல் ஆகிய நோய்கள் அதிவேகமாகப் பரவிவருகின்றன. அதுமட்டுமன்றி, உதடு வெடித்தல், குதிக்கால் வெடிப்பு ஆகியவற்றுக்கும் மக்கள் ஆளாகி வருகின்றனர். (ச)

# சட்டவிரோத மது விற்பனையைத் தடுக்கக் கோரி மனு

துறைநீலாவணை,ஜன.26

துறைநீலாவணைப் பிரதேசத்தில் கல்வி, பொருளாதா வளர்ச்சிக்கு பெரும் தடையான சட்டவிரோத மதுபாவனையை தடுத்து நிறுத்துமாறு கோரி அந்தப் பிரதேச நவசக்தி இளைஞர் விளையாட்டுக்கழகத்தினர் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு மனு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

**சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபடுவோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டாலும் அவர்கள் இந்தத் தொழிலைக் கைவிடுவதாக இல்லை.**

இவ்வாறு அதிகரித்து வரும் இந்த மோசமான நட [illegible] எமது கிராமம் மோசமான நிலைமையை எதிர்நோக்கும்.

எனவே பொலிஸாருடன் இணைந்து எமது இளைஞர் [illegible] பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபடும் ஒரு சில குடும்பங்கள் பல தடவைகள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் தண்டனைகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இவர்கள் இந்தத் தொழிலை கைவிடுவதாக இல்லை.

இவர்களுக்கு தொடர்ச்சியாக இந்தத் தொழிலை மேற்கொள்ள சக்தி வழங்கியது யார்? மதுபான விற்பனையில் ஈடுபடும் குடும்பங்கள் எதுவும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களும் அல்ல.

இது சம்பந்தமாக எச்சரிக்கை அறிவித்தல் ஆலய ஒலி பெருக்கிகளில் விடப்பட்டதுடன் சட்ட நடவடிக்கைக்காக கிராம பாதுகாப்பு பொலிஸாருக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலையில் சிவபூமி மடம் நாளை மறுதினம் திறக்கப்படும்

**சிவபூமி அறக்கட்டளை நிலையத்தினரால் அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டது**

சிவபூமி அறக்கட்டளை நிலையத்தினரால் அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட கீரிமலை சிவபூமி மடத்தின் திறப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை நடைபெறும்.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழா திருமுறை வழிபாட்டுடன் ஆரம்பமாகும். கோமாதா பூசையின் பின்னர் மடத்திறப்பு விழா இடம் பெறும்.

தொடர்ந்து கீரிமலை நகுலேஸ்வர ஆதீனமுதல்வர் இராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள், மாவை ஆதீன முதல்வர் மகாராஜஸ்ரீ.ச.இரத்தினசபாபதிக் குருக்கள், தெல்லிப்பழை துர்க்காதேவி பிரதம குரு சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள் ஆகியோரது உரைகள் இடம் பெறும்.

இதனையடுத்து நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேவிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சாரதா சேவா ஆச்சிரம சுவாமி சற்செரூபானந்தா, அமெரிக்கா ஹவாய்ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள், சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த சிவத்திரு முரளிதரன், கந்தர்மட வேதாந்த மடத்தைச் சேர்ந்த சிவதிருஸ்ரீ வேதவித்தியா சாரா, சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் அமுதசுரபி மோகனதாஸ் சுவாமிகள் ஆகியோர் ஆசியுரையினை நிகழ்த்துவர்.

விழாவின் சிறப்பு நிகழ்வுகளாக சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை மாணவர்களின் ''மாதவி கூறும் துறவறம்'' எனும் தலைப்பிலான நாட்டிய நாடகமும், அகில இலங்கை இந்துமா மன்ற சைவவித்தகர் பட்டப்படிப்பு மாணவன் யோகராஜா மோகனதாசன் நிகழ்த்தும் "தானங்களில் சிறந்தது அன்னதானம்'' எனும் தலைப்பிலான உரையும் இடம்பெறவுள்ளன.

(அ-313,7)

# கிளாலிக்கு பஸ் சேவை நடத்துவற்குத் தீர்மானம்

தென்மராட்சி, ஜன.26

கிளாலிப் பகுதியில் மக்கள் மீளக் குடியேறியுள்ளதையடுத்து அந்தப் பகுதிக்கு பாடசாலைச் சேவை உட்பட மினிபஸ் சேவைகளை நடத்த தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினர் முன்வந்துள்ளனர்.

காலையில் 6.30 மணிக்கு பாடசாலை சேவையும், 7.30 - பி.ப 3.30 மணிக்கு பயணிகள் மினிபஸ் சேவையும் கிளாலியிலிருந்து எழுதுமட்டுவாழ் ஊடாக யாழ்ப்பாணம் வரை நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

எழுதுமட்டுவாழ் தெற்கு, கிளாலி ஆகிய இடங்களில் அண்மையில் மீளக்குடியமர்ந்த மக்கள் சங்கத்திற்கு விடுத்த வேண்டுகோளையடுத்து 769/1 மார்க்கத்தில் மினிபஸ் சேவை நேற்று முன்தினம் (24/1) ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ந -207)

# மீள்குடியமர்ந்தவர்களுக்கு உணவல்லாத பொதிகள்

**இந்தப் பொதிகளை இதுவரை பெற்றுக் கொள்ளாத 131 குடும்பங்களுக்கே அவை வழங்கப்பட உள்ளன**

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையால் வழங்கப்படும் பொதிகளைப் பெற்றுக்கொள்ளாத தென்மராட்சி பகுதியில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கு உணவல்லாத பொதிகள் இன்று வழங்கப் படவுள்ளன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம், தனங்கிளப்பு ஆகிய பகுதிகளில் மீளக் குடியமர்ந்து இதுவரை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையால் வழங்கப் படும் பொதிகளைப் பெற்றுக் கொள்ளாத 131 குடும்பங்களுக்கே அவை வழங்கப் படவுள்ளன.

அதன்படி தென்மராட்சி தெற்கில் 48 குடும்பங்களுக்கும் கரம்பகத்தில் 67 குடும்பங்களுக்கும் தனங்கிளப்பைச் சேர்ந்த 16 குடும்பங்களுக்கும் இந்தப் பொதிகள் வழங்கப்பட உள்ளன. இவை அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் எனத் தென்மராட்சிப் பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர். (ந-207)

# கட்டடப்பொருள்களை ஏற்றிச் செல்லும் சட்ட விதிகளில் மாற்றம்

கட்டடப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவதில் தற்போது நிலவும் சட்ட விதிகளைத் தளர்த்தி விடுவதற்குப் பூகோளவியல் ஆய்வுகள் மற்றும் சுரங்கங்கள் செயற்பாட்டுப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கட்டடப் பொருள்கள் கொள்வனவின்போது, மற்றும் கட்டடமொன்றை நிர்மாணிப்பது தொடர்பாகத் தமக்குச் சொந்தமான காணியொன்றில் கல், மண்ணை அகழ்ந்தெடுத்தல் மற்றும் எடுத்துச் செல்லல் தொடர்பாக தற்போது நிலவும் சட்டவிதிகள் இவ்விதம் தளர்த்தப்படுகின்றன. அதற்கமைய கட்டடப்பொருள்களை விற்பனை செய்யும் விற்பனை நிலையமொன்றிலிருந்து பத்து கிலோமீற்றர்கள் வரையிலான எல்லைக்குள் அதிக பட்சத் தொகையாக ஒரு கியூப் மணலை அனுமதிப்பத்திரங்களின்றி எடுத்துச் செல்ல முடியும். இது தொடர்பாக அந்த விற்பனை நிலையத்தால் வழங்கப்படும் மணல் கொள்வனவுக்கான சிட்டை போது மானதாகும்.

அதற்கு மேலதிகமாகத் தனியார் கட்டடமொன்று நிறுவப்படுவது தொடர்பாக தேவைப்படும் மண், மணல், கிரவல் ஆகியவற்றை தனது காணியில் அகழ்ந்தெடுப்ப தற்கு அனுமதிப்பத்திரங்கள் அவசியப் படமாட்டாது. அதேபோன்று, தனியார் கட்டடமொன்றை நிர்மா ணிப்பது தொடர்பாக அதிகபட்ச தொகையாக முக்கால் கியூப் அளவுப் பிரமா ணம் கொண்ட மண், மணல், கிரவல் ஆகியவற்றை உழவு இயந்திரம், கை உழவு இயந்திரம், கெப்வாகனங்கள், சிறியரக லொறிகள் போன்றவற்றின் மூலமாகத்தமது காணியிலிருந்து அப்பிரதேசத்தின் பிரதேச செயலர் பிரிவுக்குள் எடுத்துச் செல்வதற்கும் அனுமதிப் பத்திரங்கள் அவசியப்படமாட்டாது.

இது சம்பந்தமாக பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்துமாறு பூகோளவியல் ஆய்வுகள் மற்றும் சுரங்கங்கள் செயற்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் அனைத்து அரச அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

பெருமளவானோரின் கோரிக்கைகளுக்கு அமைய, சுற்றாடல் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவின் பணிப்புரைகளுக்கு அமைவாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ந-22)


## மாவை. கொல்லங்கலட்டி

ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
மணவாளக் கோல சங்காபிஷேக விஞ்ஞாபனம்

மகாகும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு 28/01/2012 சனிக்கிழமை முற் பகல் தொடக்கம் மூல தேவருக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம் நடைபெறும். அந்த நாள்களில் சுவாமி தரிசனம் செய்து இஷ்ட சித்திகளைப் பெறுவீர்களாக. பொது உபயமாக நடைபெறும். பண உதவி, பொருள் உதவி, பால் தயில், இளநீர், பூமாலை தரவிரும்புவோர் தந்துதவவும்.

அறங்காவலர்


# அதிக நிலுவையுள்ளோரின் மின் இணைப்பு துண்டிப்பு

காரைநகர், ஜன.26

நீண்டகாலமாக மின்சாரக் கட்டணத்தைச் செலுத் தத் தவறிய காரைநகர் பிர தேச மின் பாவனையாளர் களின் மின்சார இணைப்பைத் துண்டிக்கும் பணியில் மின்சார சபை ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

மூவாயிரம் ரூபாவுக்கு மேல் நிலுவை வைத்திருந்த மின்பாவனையாளர்க ளின் மின் இணைப்புகளே தற்போது துண்டிக்கப்பட்டு வருவதாகவும் இதுவரை 451 மின் பாவனையாளர்கள் நீண்டகாலமாக மின்சாரக் கட்டணத்தை செலுத்தத் தவறி உள்ளனர் என்றும் கூறப்பட்டது.

மூவாயிரம் ரூபா தொடக்கம் இருபத்தைந்தாயிரம் ரூபா வரையான நிலுவைப் பணத்தைச் செலுத்த வேண் டியுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

உடனடியாக இந்த நிலுவைப் பணத்தைச் செலுத்துபவர்களின் மின்துண்டிப்பு நிறுத்தப்படும் எனவும் நிலுவைப் பணத்தைச் செலுத் தத் தவறுபவர்களின் மின் இணைப்புத் துண்டிக்கப்படுவதாகவும் மின்சாரசபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ம-250)


## கண்ணீர் அஞ்சலி



சுன்னாகம் சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் திருமதி புஸ்பலோஜினி காசி வேந்தனின் கணவரும் சமுர்த்தி மகா சங்கத்தின் பணிப்பாளருமான

நடராசா காசிவேந்தன்

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை குடும்பத்தினருக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

வள்ளுவர், ஆபிரகாம்லிங்கன், மகாத்மா, வெங்கடாசலபதி, கண்ணதாசன், இராகவேந்தர், காந்திமகான், வேல்முருகா, வசந்தகாலம். சமுர்த்தி சங்கங்கள், ஈவினை



## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் கணக்காளர் திரு. ஆனந்தநடராசா கனகசபை அவர்களின் அன்புச் சகோதரன்

அமரர் ஆனந்தநடராசா சிதம்பரநடராசா

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

எஸ்லோன், பி.ஈ.பினஸ், கெவில்ரன், லக்சுமி ஏஜென்சி, ஒகனைசேஷன், முகாமையாளர், ஊழியர்கள்.


# அபராதம்

சாரதி அனுமதிப்பத்திரம், வாகனப் பதிவு என்பன இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்று எதிரே வந்தவரை மோதிக் காயப்படுத்திய குற்றத்துக்காக ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் 14 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

யாழ். நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் இவ்வாறு நடந்து கொண்டவரை யாழ். பொலிஸார் நேற்று நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் ஆஜப்படுத்தினர். சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மேற்குறித்த அபராதத் தொகை விதிக்கப்பட்டது. (ங-14)


## மரண அறிவித்தல்

ஆனந்தநடராசா சிதம்பரநடரசா

(ஓய்வுபெற்ற ஆய்வுகூட உத்தியோகத்தர், மத்திய கல்லூரி- அனுராதபுரம்)



பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகவும், பண்டாரவத்தையை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியாவில் வசித்து வந்தவருமான ஆனந்தநடராசா சிதம்பரநடராசா நேற்று (25.01.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனந்தநடராசா- மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன்- அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற ஜெயலட்சுமியின் பாசமிகு கணவரும், தங்கேஸ்வரி, ரத்தினேஸ்வரி, ஞானேஸ்வரி, விஜியலக்ஸ்மி, சிவகுமாரன், சங்கரநாதன், கலாநிதி, நந்தகுமார், கனகசபை ஆகியோரின் சகோதரரும், ஜெயானந் (வேணுகா ரெக்ஸ், வவுனியா), காலஞ்சென்ற ஜெயகாந் மற்றும் ஜெயசக்தி (ஹற்றன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கயல்விழி, யாழரசன் ஆகியோரின் அன்பு மாமனும், கல்கி, ஷாகரி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.01.2012) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வவுனியா. தகவல்: குடும்பத்தினர்.



## ஆழ்ந்த அனுதாபங்கள்



சுன்னாகம் சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் திருமதி புஸ்பலோஜினி காசிவேந்தனின் கணவரும், சமுர்த்தி மகா சங்கத்தின் பணிப்பாளருமான

நடராசா காசிவேந்தன்

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

கலையரசி, கலாஜோதி, அறிவொளி, அலைமகள், கலைச்செல்வி, கண்ணகி சமுர்த்தி சங்கங்கள்.

ஏழாலை வடக்கு.



## வேலையாள்கள் தேவை

கூல்பார், பல்பொருள் வாணிப நிலையம் ஆகியவற்றுக்கு வேலையாட்கள் தேவை

தொடர்புகளுக்கு- 0778304922


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுநிலை தவறியது ஐரோப்பா

## ஈரான் விமர்சனம்

ஈரானில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு, ஐரேப்பிய யூனியன் தடை விதித்துள்ளது நடுநிலை தவறிய செயல் என்றும், அந்தத் திட்டம் தோல்வியடைந்து விடும் என்றும், ஈரான் விமர்சித்துள்ளது.



தடைமூலம் ஈரானின் வளர்ச்சியைத் தடுக்கத் திட்டமிட்டால் அந்தத் திட்டம் தோல்வியடைந்து விடும் என்கிறது ஈரான்.


ஈரானின் அணுசக்தித் திட்டங்களை அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும், தொடர்ந்து எதிர்த்து வருகின்றன. இந்தநிலையில், பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸஸில் கூடிய ஐரோப்பிய யூனியன் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில், ஈரானில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. அடுமட்டுமன்றி ஐரோப்பிய யூனியன் நாடுகளில் உள்ள ஈரான் மத்திய வங்கியின் சொத்துக்களை முடக்கவும் உத்தரவிடப்பட்டது.

இதுகுறித்து, நேற்று ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரோமின் மேமன்பரஸ்த் தெரிவித்ததாவது:

''இந்தத் தடையால் ஈரானின் வளர்ச்சியைத் தடுக்க முடியாது. ஐரோப்பிய நாடுகள் தற்போது அமெரிக்காவின் நெருக்கடியில் உள்ளன. அமெரிக்காவின் உள்நோக்க அரசியலுக்கு, அவர்கள் பலியாகி விடக் கூடாது'' - என்றார்.

இதேவேளை, ஈரான் மீதான எண்ணெய்த் தடையை வரவேற்ற அமெரிக்க அதிபர் ஒபாமா, ''ஈரானின் அணு சக்தி திட்டங்கள், உலகுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக விளங்குவதை, சர்வதேச சமூகம் உணர்ந்து கொண்டுள்ளதைத் தான் இந்தத் தடை காட்டுகிறது'' எனப் பாராட்டியுள்ளார். அத்துடன் சர்வதேச அணுசக்தி தொடர்பகத்துடன் ஈரான் ஒத்துழைக்க வேண்டும் என அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது. (ந)

## மலசலகூடத்தில் சிறுமி 10 ஆண்டுகள் வாழ்க்கை





*பலஸ்தீனத்தில் 10 ஆண்டுளாக மலசலகூடத்தில் அடைக்கப்பட்டிருந்த சிறுமியை பொலிஸ் அதிகாரிகள் மீட்டுள்ளனர்.*

*பலஸ்தீனம் மேற்குக் கரையில் உள்ள குவால் கிவ்லியா என்ற பகுதியை சேர்ந்த ஹசன் மெல்கம் என்பவர் தனது மனைவியுடன் விவாகரத்து ஏற்பட்டதை அடுத்து தனது மகளாக பாரா மெல்கமை தன்னோடு வைத்து கொண்டார். எனினும் அந்தப் பெண்ணை வெளியே விடாமல் ஒரு சிறிய மலசல கூடத்துக்குள் அடைத்து வைத்தார். இரவு நேரத்தில் மட்டும் வெளியே வர அனுமதிப்பார், ஆனாலும் வீட்டை விட்டு வெளியே போக முடியாது.*

*இந்தத் தகவல் எப்படியோ 10 ஆண்டுகள் கழித்து பொலிஸ் அதிகாரிகளுக்குத் தெரியவந்ததால், அந்த வீட்டில் சோதனையிட்டு பாராவை மீட்டுள்ளனர்.*

*இது குறித்து பாரா தெரிவிக்கையில்;*

*''நான் 10 ஆண்டுகளாக வெளி உலகைப் பார்க்கவில்லை. அப்பா அவ்வப்போது இரும்பு கம்பியால் அடிப்பார். என்றாவது ஒரு நாள் வெளிச்சத்தை காண்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது.''*

*''இனிமேல் தான் என் வாழ்க்கை தொடங்குகிறது. எனது தந்தையை நான் வெறுக்கமாட்டேன். அதே நேரத்தில் அவர் செய்த செயலை தான் நான் வெறுக்கிறேன். ஏன் அவ்வாறு செய்தார் என்பது எனக்கு இன்னும் புரியவில்லை. அவ்வாறு இருந்தோமே என்ற கவலை எனக்கு இப்போது இல்லை ''-என்றார்.*


## தவறான மருந்து உட்கொண்ட 67 பேர் சாவு

### பாகிஸ்தானில் சம்பவம்

லாகூர், ஜன.26

பாகிஸ்தானின் லாகூரில் இயங்கி வரும் அரச இதயநோய் மருத்துவமனையில் நோயாளிகளுக்குத் தவறான மருந்து கொடுத்ததில் 67 நோயாளிகள் பலியாயினர். மேலும் சிலரது உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தகவல்கள் தெரிவிகின்றன.

இதையடுத்து, உயிரிழந்த நோயாளிகளின் குடும்பத்தினர், மருத்துவமனையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தத் தவறுக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க கோரிக்கை வைத்துள்ளனர். ஆனால் இந்த விடயத்தில் அலட்சியம் காட்டுவதாக அந்த மாநில முதல்வர் ஷாபஸ் ஷரிப் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனால் இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு மத்திய புலனாய்வு அமைப்புக்கு பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது. விசாரணையின் பேரில், தவறான மருந்து வழங்கிய மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு சீல் வைக்கப்பட்டு, 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



*மியன்மார் நாட்டு அதிபர் தெய்ன் செய்ன்(மத்தியில்), மற்றும் இரண்டு இணை அதிபர்கள் திகா துரா(இடது), டாக்டர் சாய் முக் காம் மூன்று பேருக்கும் அதிபர் மாளிகையில் அரசியலில் சீர்திருத்தங்கள் செய்ததற்காக ஐரோப்பிய யுனியன் விருது வழங்கி கௌரவித்தது.*

## வளைகுடாவில் பிரிட்டிஷ் ராணுவம்

லண்டன், ஜன.26

பாரசீக வளைகுடா பகுதியில் போர்க் கப்பல்கள் நிறுத்தப்படுவதுடன் கூடுதலாக கடற்படை வீரர்களை நிறுத்தவும் பிரிட்டிஷ் அரசு திட்டமிட்டுள்ளது.

ஈரான் தொடர்ந்து அணு ஆயுதங்களைத் தயாரித்து வருவதாக அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் குற்றம்சாட்டி வருகின்றன. அணு ஆயுத உற்பத்தியைக் கைவிட மறுத்து வருவதால் ஈரானிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வது தொடர்பான ஒப்பந்தங்களை ஐரோப்பிய யூனியன் ரத்துச் செய்தது. இதனால் ஆத்திரமடைந்துள்ள ஈரான் அரசு, பாரசீக வளைகுடாப் பகுதியை மூடப்போவதாக அறிவித்துள்ளது. இந்த வழியாகத்தான் வளைகுடா நாடுகளிலிருந்து மேற்கத்திய நாடுகளுக்கு எண்ணெய் கப்பல்கள் செல்கின்றன.

இதனால் எண்ணெய் கப்பல்களின் பாதுகாப்புக்காக, பாரசீக வளைகுடா பகுதியில் 2 பிரிட்டிஷ் போர்க் கப்பல், ஒரு பிரான்ஸ் போர்க் கப்பல் மற்றும் அமெரிக்காவின் விமானந்தாங்கிப் போர்க் கப்பல் ஆகியவை ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்படும் எனத் தெரிவித்த பிரிட்டிஷ் பாதுகாப்புச் செயலாளர் பிலிப் ஹம்மோண்ட் இதுதவிர, கூடுதலாக கடற்படை வீரர்களையும் அனுப்ப உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## புது வழியில் கொலை

எரிபொருள் நிரப்பிய டேங்கர் லொறியை வீட்டின் மீது மோதி மனைவியைக் கொல்ல முயற்சித்த சம்பவம் பிரிட்டனின் டார்செட் நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பிரிட்டனின் டார்செட் நகரில் வசித்துவரும் கிரிஸ்டியன் லோரன்ஸ் என்பவருடைய கணவர் ஹக் பிலிங்டனுக்கும் (53) கருத்து வேறுபாடு இருப்பதாகக் கூறப்பட்டது. இந்நிலையில் கடந்த 20ஆம் திகதி டேங்கர் லொறியை மனைவி வசிக்கும் பங்களா மீது பயங்கர வேகத்தில் செலுத்தி வந்து மோதினார்.

மோதுவதற்கு முன்னர் வீட்டு முன் பக்க கதவு மீது மண்ணெண்ணை ஊற்றியுள்ளார். இதனால் பங்களா தீப்பிடித்து எரியத் தொடங்கியது. உடனடியாகத் தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

இதனால் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய கிறிஸ்டியன் பொலிஸில் புகார் செய்ததை அடுத்து தலைமறைவான பிலிங்டனை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

இந்த வழக்கு 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## ஜல்லிக்கட்டை எதிர்க்கிறது அயர்லாந்து

*லண்டன், ஜன.26*

*அயர்லாந்தைச் சேர்ந்த விலங்கு உரிமைகள் அமைப்பு ஒன்று, தமிழகத்தின் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டை எதிர்த்து பிரசாரத்தில் ஈடுபடப் போவதாக எச்சரித்துள்ளது.*

*தமிழகத்தின் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டுக் குறித்து, விலங்குகள் நல அமைப்பான, 'பீட்டர்', தொடுத்த வழக்கில், மதுரை உயர் நீதிமன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பின்படி, பல்வேறு விதிமுறைகளுக்கு உட்பட்டு, சமீபத்தில் ஜல்லிக்கட்டு நடந்து முடிந்தது. இந்நிலையில், அயர்லாந்தைச் சேர்ந்த, விலங்கு உரிமைகள் நடவடிக்கை அமைப்பு மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் சுபோந்த் சகாய்க்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் எழுதியிருப்பதாவது:*



*விலங்குகளைப் பராமரிப்பதில், இந்தியா முன்னணியில் உள்ளது. எனினும், ஜல்லிக்கட்டைப் பொறுத்தவரையில், அடித்தல், குத்துதல், வாலைத் திருகுதல், இழுத்தல், கொம்புகளை உடைத்தல் போன்ற செயல்களும், நிகழ்ச்சிகளுக்கு முன், காளைகளுக்கு வலுக்கட்டாயமாக சாராயம் புகட்டுதலும் தொடர்கின்றன. இவை உடனடியாக நிறுத்தப்படா விட்டால், இதற்கு எதிராக நாங்கள் பிரசாரம் செய்வோம். இந்தியாவுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளிடம், இதை எடுத்துச் சொல்லி, இந்தியாவைப் புறக்கணிக்கும்படி வலியுறுத்துவோம் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

## ஜேர்மனிய உளவாளிகள் பாக்.கில் கைது

ஜேர்மனியைச் சேர்ந்த உளவாளிகள் எனச் சந்தேகப்படும் மூவரை பாகிஸ்தான் பொலிஸார் கைது செய்து தூதரகத்தில் ஒப்படைத்துள்ளனர்.

பெஷாவர் நகரின் வடகிழக்குப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இம்மூவரும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் தங்களை ஜேர்மன் தூதரகத்தின் அங்கீகரிக்கப்படாத தொடர்பு அதிகாரிகளாக அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

இவர்களைத் தொடர்ந்து கண்காணித்து வந்த பொலிஸார் இம்மூவரும் பெஷாவரைச் சுற்றிவேவு வேலை பார்த்து வந்ததாகக் குற்றம் சாட்டினர்.

## சுவிஸில் ஆரம்பமானது உலகப் பெருளாதார மாநாடு

உலகப் பொருளாதார அமைப்பின் வருடாந்த 5 நாள் மாநாடு சுவிற்சர்லாந்தின் டவோஸ் நகரில் நேற்று தொடங்கியது. இந்த மாநாட்டில், உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர். அமெரிக்க, ஐரோப்பிய நிதிநெருக்கடியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள உலக பொருளாதார வளர்ச்சி பற்றியும், அதிலிருந்து விடுபடுவது பற்றியும் இதில் ஆராயப்படவுள்ளது.

நிதிநெருக்கடியால் பாதிக்கப் பட்டுள்ள உலக பொருளாதார வளர்ச்சி பற்றி இதில் ஆராயப்படவுள்ளது.

இந்தியா சார்பில் மத்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் ஷர்மா, திட்டக்குழு துணைத் தலைவர் மான்டேக்சிங் அலுவாலியா, தொழிலதிபர்கள் முகேஷ் அம்பானி, அசிம் பரேம்ஜி, ஆதி கோத்ரெஜ், ராகுல் பஜாஜ் மற்றும் சுனில் மிட்டல் உட்பட 100க்கும் மேற்பட்ட இந்திய பிரபலதொழிலதிபர்கள் கலந்து கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஷாரப்பை கைது செய்ய பாக்.நாடாளுமன்றம் முடிவு



**ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ரசா ரபானி முன்மொழிவைக் கொண்டு வந்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாக வாக்களித்து சட்டவரைவை நிறைவேற்றினர்.**

இஸ்லாமாபாத்,ஜன.26

முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் நாடு திரும்பினால், அவர் மீது தேசத்துரோக வழக்குப் பதிவு செய்யவும் கைது செய்து சிறையில் அடைக்கவும் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் ஏகமனதாகத் சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் 1999ஆம் ஆண்டு ராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைப் பிடித்தவர் பர்வேஸ் முஷாரப். பின்னர் ஏற்பட்ட பல்வேறு அரசியல் நெருக்கடிகளால், கடந்த 2008ஆம் ஆண்டு பதவியில் இருந்து விலகினார். தற்போது லண்டனில் தஞ்சம் அடைந்துள்ளார்.

இந்நிலையில், ஜனவரியில் நாடு திரும்ப உள்ளதாகவும், பொதுத் தேர்தலில் போட் டியிடப் போவதாகவும் முஷாரப் பேட்டி அளித்தார். ஆனால், முஷாரப் நாடு திரும்பினால், முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ படுகொலை வழக் கில் கைது செய்யப்படுவார் என்று பாகிஸ்தான் அரசு திட்டவட்டமாக அறிவித்தது.

இதையடுத்து முஷாரப் தனது திட்டத்தை கைவிட்டுள்ளார். இந்த நிலையில், நாடு திரும்பினால் முஷாரப்பை கைது செய்ய பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் சட்டவரைபு கொண்டுவரப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாக வாக்களித்து சட்ட வரைவை நிறைவேற்றினர்.

நாடாளுமன்ற செனட் கூட்டத்தில் ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ரசா ரபானி முன்மொழிவைக் கொண்டு வந்தார். இதுகுறித்து விரிவாக விவாதம் நடந்தது. இதில் பாகிஸ் தான் அரசியல் சட்டங்களை முஷாரப் 2 முறை ரத்து செய்தார். நீதிபதிகளை கைது செய்தார். தேசிய நலனைப் புறக்கணித்து பொருளாதாரத்தை சீர்குலைத்தார். அவர் நாடு திரும்பினால் தேசத்துரோகக் குற்றங்களின் கீழ் கைது செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதனையடுத்து இந்தத் சட்ட வரைவு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ந)

# கார்க் குண்டு வெடித்து ஈராக்கில் 14 பேர் சாவு



பாக்தாத்,ஜன.26

ஈராக் தலைநகர் பக்தாத்தில் அடுத்தடுத்து வெடிகுண்டு வெடித்துச் சிதறியதில் 14 பேர் உயிரிழந்தனர். 70 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பாக்தாத்தின் சாத் பகுதியில் தினக்கூலி தொழிலாளர்கள் கூடியிருந்த இடத்தில் முதலில் குண்டு வெடித்தது. இதில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். 21 பேர் காயமடைந்தனர். அடுத்த சில நிமிடங்களில் பஸ்ட்ரி ஷாப் அருகே கார் வெடித்துச் சிதறியது. இதில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.. 26 பேர் காயமடைந்தனர். மேலும் ஒரு பள்ளிக்கூடம் மற்றும் கடைத்தெரு என 2 இடங்களில் கார் கள் வெடித்ததில் 2 மாணவர்கள் உட்பட 3 பேர் உயிரிழந்துள்ளனர்.; 29 பேர் காயமடைந்தனர்.

சதாம் உசேனை ஆட்சியிலிருந்து அகற்றிய பிறகு ஈராக்கில் அமைதி ஏற்படுத்துவதற்காக அமெரிக்க படை முகாமிட்டிருந்தது. கடந்த மாதத்துடன் அந்த படைகள் வாபஸ் பெறப்பட்டன. அதன் பிறகு, தீவிரவாத தாக்குதல்கள் தொடர்கதையாக இருக்கிறது. கடந்த 24 நாள்களில் இதுவரை 170 பேர் கொல்லப்பட்டுள்ளனர். (ந)

# குண்டு நிரப்பப்பட்ட கார்கள்

நைஜீரியாவில் குண்டு நிரப்பப்பட்ட கார்கள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன.

நைஜீரியாவின் இரண்டாவது பெரிய நகரமான கனோவில் தீவிரவாதிகள் வெடிகுண்டுகள் நிரப்பிய கார்களை நிறுத்தி வைத்துள்ளனர் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து நகரைச் சுற்றியும் சோதனை செய்த பொலிஸ் அதிகாரிகள் அவற்றைக் கண்டு பிடித்துச் செயல் இழக்கச் செய்தனர். இதுவரையிலும் 8 கார்கள் பறிமுதல் செய்யப் பட்டுள்ளதால் பொதுமக்களிடையே பதற்றம் நிலவுகிறது. எனவே மசூதிகளில் சிறப்புப் பிரார்த்தனைகள் நடத்தப்படுகின்றன. (ந)

# லிபியாவின் பானி வாலித் நகரில் மீண்டும் கலவரம்

**அந்த நகரின் புரட்சிப்படைத் தளபதி அலி அல் படாம்னி தப்பியோட்டம்.**

பெங்காசி,ஜன.26

ஆபிரிக்க நாடான லிபியாவில், புதிய அரசு அமைந்து மூன்று மாதங்களுக்குப் பின், கடாபி ஆதரவாளர்கள், பானி வாலித் நகரைக் கைப்பற்றியுள்ளனர்.

இதையடுத்து அந்தப் பகுதியில் அரசு அவசர நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளது. லிபியாவில் கடந்த நவம்பரில், முன்னாள் அதிபர் கடாபி கொல்லப்பட்டார். இதையடுத்து புதிய அரசு அமைந்தது.

இந்நிலையில் தலைநகர் திரிபோலியில் இருந்து 140 கிலோமீற்றர் தெற்கில் உள்ள பானி வாலித் நகரை நேற்று முன்தினம் மீண்டும் கடாபி ஆதரவாளர்கள் கைப்பற்றினர். அந்த நகரில் இருந்த புரட்சிப் படைத் தளபதி அலி அல் படாம்னி, மிஸ்ரட்டா நகருக்குத் தப்பித்துச் சென்றுள்ளார். நகரின் பல உயர்ந்த கட்டடங்களில், கடாபி ஆட்சியில் இருந்த பச்சைக் கொடியை அவரது ஆதரவாளர்கள் நேற்று ஏற்றி வைத்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து அந்தப் பகுதியில் புதிய அரசால் அவசர நிலையைப் பிறப்பித்துள்ளது. (ந)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக விவசாயபீட பீடாதிபதியும், எமது சங்க உறுப்பினருமான
கலாநிதி திருமதி சிவமதி சிவச்சந்திரன்
அவர்களின் தாய்



**திருமதி புஷ்பலதிகவதி கணேசலிங்கம்**

அவர்கள் 20.01.2012 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**
தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(13475) (45-6-7)

## கண்ணீர் அஞ்சலி

**நடராசா காசிவேந்தன் (B.Com, M.A.)**

(முகாமைத்துவப் பணிப்பாளர்-சமுர்த்தி மகா சங்கம், உடுவில்)



சமுர்த்தி வறுமைத்தணிப்புத் திட்டத்தில் வறிய மக்களின் வாழ்வில் ஒளி ஊட்டிய உத்தமரே உமது திடீர் மறைவால் அதிர்ச்சியடைகின்றோம்.

அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், நல்லூர்.

சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள்.

(13472) (6,7,10)

# சிலியில் பூகம்பம்

சான்டியாகோ,ஜன.26

தென் அமெரிக்க நாடான சிலியில் நேற்று பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. எனினும் சுனாமி எச்சரிக்கை விடப்படவில்லை.

சிலி நாட்டின் தென் மத்திய பகுதியில் உள்ள கடல் பகுதியில் நேற்று 6.2 ரிச்டர் அளவுக்கு பூகம்பம் ஏற்பட்டது. இதனால் சேதம் எதுவும் இல்லை. சுனாமி எச்சரிக்கையும் விடப்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 2010ஆம் ஆண்டு சிலியில் 8.8 ரிச்டர் அளவுக்கு ஏற்பட்ட பூகம்பம் பேரழிவை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. (ந)

## கண்ணீர் அஞ்சலி



உடுவில் சமுர்த்தி மகாசங்க
முகாமைத்துவப்பணிப்பாளரும் சுன்னாகம்
சமுர்த்தி வங்கியின் முகாமையாளர்
திருமதி கா.புஸ்பலோஜினியின்
அன்புக் கணவருமாகிய

**நடராசா காசிவேந்தன்**

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.


மாவட்ட சமுர்த்தி அலுவலகம்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

சமுர்த்தி உதவி ஆணையாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

(13471) (45- 6-7)

## கண்ணீர் அஞ்சலி

**நடராசா காசிவேந்தன் (B.Com, M.A.)**



தமிழ் மீது உள்ள பற்றால் - பாசத்தால்
தமிழ் காத்து, தமிழரின் நலம் காத்து
தமிழும், சைவமும் வளரப் பாடுபட்டு
உழைத்த காசிவேந்தா உமது திடீர்
மறைவு எமது இனத்துக்கு ஒரு பேரிழப்பாகும்.

அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது உறவினருக்கு எமது துயரினைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை தமிழரசுக்கட்சி - இணுவில் கிளை
மானிப்பாய் தொகுதிக் கிளை

(13474)(45-6-7)

## உடனடி வேலை வாய்ப்பு

முகாமைத்துவ முன்னுரிமையுடன், சிறந்த பயிற்சியுடன் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் கனேடிய நிறுவனத்தின் வவுனியா கிளையில் வேலைக்கான பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

தகைமை: O/L, A/L
பயிற்சி காலத்தில் 8000/= - 10,000/=
பயிற்சியின் பின் 45,000/=

தொடர்புக்கு: 024 7900171, 077 0308484

(13476) (45-6-7)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

## 50% OFFER COMPUTER COURSES

புதிய வகுப்புகள் ஆரம்பம் 28.01.2012

| | | |
|---|---|---|
| Certificate in Ms Office 2007 | ~~6000/-~~ | 3000/- |
| Diploma in Computer Studies | ~~10000/-~~ | 5000/- |
| Diploma in Graphic Designing | ~~15000/-~~ | 7500/- |
| Diploma in Web Designing | ~~10000/-~~ | 5000/- |
| Diploma in Computer Hardware | ~~10000/-~~ | 5000/- |
| Certificate in Java, VB.NET, C#, AsP | ~~22000/-~~ | 11000/- |

LONDON METROPOLITAN COLLEGE
No.137, Arasady Road, Jaffna
Tel: 021 222 7230, 021 753 8395

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தின் சமுர்த்தி சங்கப்பணிப்பாளரும், எமது பிரதேச செயலக சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி காசிவேந்தன் புஸ்பலோஜினி அவர்களின் அன்புக் கணவருமாகிய

**நடராசா காசிவேந்தன்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்,
உடுவில்.


பிரதேச செயலாளரும்
அனைத்து
உத்தியோகத்தர்களும்.

(C\8201) (6,7,10)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 1855 தீவிரவாதிகள் அசாமில் சரணடைவு




கவுகாத்தி, ஜன.26

மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் முன்னிலையில் அசாமில் ஆயிரத்து 855 தீவிரவாதிகள் சரணடைந்தனர். அசாம் மற்றும் வட கிழக்கு மாநிலங்களில் தீவிரவா தத்தை ஒடுக்கவும் தீவிரவாதிகளை ஜனநாயகப் பாதைக்கு திருப்பவும் பல்வேறு நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் எடுத்து வருகின்றன.

மாநில அரசின் முயற்சியால் ஆதிவாசி மக்கள் படை, தேசிய விடுதலை முன்னணி போன்ற 9 தீவிரவாதக் குழுக்களைச் சேர்ந்த 1,855 தீவிரவாதிகள் மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் முன்னிலையில் ஆயுதங்களை ஒப்படைத்து நேற்றுமுன்தினம் சரணடைந்தனர்.

**வன்முறையால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது. எல்லாப் பிரச்சினைகளுக்கும், கருத்து வேறுபாடுகளுக்கும் பேச்சு மூலம் சுமூகமான தீர்வு என்றார் சிதம்பரம்.**

கவுகாத்தியில் நடந்த நிகழ்ச்சியில் அசாம் முதல்வர் தருண் கோகய், ராணுவ அதிகாரிகள், மாநில பொலிஸ் டி.ஜி.பி. ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் அமைச்சர் சிதம்பரம் பேசியதாவது:

முன்னாள் தீவிரவாதிகளின் மறுவாழ்வுக்குத் தேவையான உதவிகளை மத்திய, மாநில அரசுகள் செய்யும். தீவிரவாதத்தை கைவிட்டவர்கள் சமுதாயத்தில் கண்ணியத் தோடும், கௌரவத்தோடும் மற்றவர்களை போல சம உரிமையுடன் வாழ அரசு உத்தரவாதம் அளிக்கிறது. வன் முறையால் எந்த பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது. எல்லா பிரச்சினைகளுக்கும், கருத்து வேறுபாடுகளுக்கும் பேச்சு மூலம் சுமூகமான தீர்வு காண முடியும். போடோ, உல்பா போன்ற தீவிரவாத அமைப்புகளும் அமைதி முயற்சியில் பங்கேற்றிருப்பது ஜனநாயக கத்துக்கு நல்லது - என்றார். (வ)

## சென்னை விமான நிலையம் நேற்று மூழ்கியது இருளில்

சென்னை, ஜன.26

சென்னை மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்தின் புறப்பாடு பகுதியில் உள்ள மின்சார இணைப்பு பெட்டியில் நேற்றுமுன்தினம் இரவு திடீரென ஏற்பட்ட தீ விபத்தை அடுத்து, விமான நிலையமே இருளில் மூழ்கியது. புறப்பாடு பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து உடனடியாக அந்தப் பகுதியில் இருந்த மின்சார வயர்கள் துண்டிக்கப்பட்டன.

இதன் பின்னர் அவசர அவசரமாக தீ விபத்தை கட்டுப்படுத்தும் கருவிகள் மூலமாக தீயணைப்பு அதிகாரிகள் தீயை அணைத்தனர். இதனால் அரை மணித்தியாலம் வரை சென்னை விமான நிலையம் இருளில் மூழ்கியிருந்தது.

விமான நிலையம் இருளில் மூழ்கியதால், விமான நிலையத்துக்கு வந்திருந்த அதிகமான உள்நாட்டு, வெளி நாட்டு பயணிகளும் அவர்களை வழியனுப்பவும், அழைத்துச் செல்லவும் வந்திருந்தவர்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர். (வ)

## கிருஷ்ணா மேன்முறையீடு

டில்லி, ஜன.26

சுரங்க மோசடி முறைப்பாட்டை ரத்து செய்யக் கோரி உச்ச நீதிமன் றத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா மனு தாக்கல் செய்துள்ளார். கர்நாடக முதல்வராக எஸ்.எம்.கிருஷ்ணா பதவி வகித்த போது குவாரிக்கு அனுமதி வழங்கியதில் மோசடி நடந்ததாக லோக் அயுக்தாவுக்கு முறைப்பாடு வந்தது.

இதுதொடர்பாக எஸ்.எம்.கிருஷ் ணாவுக்கு லோக் அயுக்தா நோட்டீஸ் அனுப்பியது. லோக் அயுக்தா விசாரணைக்குத் தடை விதிக்கக் கோரி கர்நாடக உயர்நீதி மன்றத்தில் கிருஷ்ணா தாக்கல் செய்த மனு நிராகரிப்பானது. இதையடுத்து, உச்ச நீதிமன்றத்தில் எஸ்.எம்.கிருஷ்ணா மேல் முறையீடு செய்தார்.

## ருஷ்டியின் வருகைக்கு அனுமதி வழங்குக

சண்டிகார், ஜன.26

எழுத்தாளர் சல்மான் ருஷ்டி இந்தியா வர அனுமதிக்க வேண்டும் என்று மாநிலங்களவை எதிர்க் கட்சி தலைவர் அருண் ஜேட்லி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

எழுத்தாளர் சல்மான் ருஷ்டி பொலிஸ் பாதுகாப்புடன் இந்தியா வர அனுமதிக்க வேண்டும். வாஜ் பாய் ஆட்சி காலத்தில் ருஷ்டி இந்தியா வந்தார். ருஷ்டி வருகையை தடுக்க ஒரு போலி அறிக்கையை ராஜஸ்தான் காங்கிரஸ் அரசு தயாரித்துள்ளது. அங்கு அவருக்கு அச்சுறுத்தல் இருந்தாலும் பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் - என்றார். (வ)

## கொள்ளையர்களை சுடுமாறு உத்தரவு

சென்னை, ஜன.26


சென்னை பெருங்குடியில் உள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் புகுந்து துணிகரமாக 24 லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் சென்ற வட மாநிலக் கும்பல் ஆபத்தான ஆயுதங்களுடன் இருப்பதால் அவர்களைச் சுட்டுப் பிடிக்க பொலிஸ் உத்தரவிட்டுள்ளது.

இந்தக் கும்பல் பீகாரைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அவர்கள் பயங்கர ஆயுதங்களுடன் இருப்பதாகவும், சென்னைக்குள்தான் அவர்கள் பதுங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது. அவர்களைப் பிடிக்க 15 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பெருங்குடி, துரைப்பாக்கம், நீலாங் கரை, சோழிங்க நல்லூர், வேளச்சேரி ஆகிய இடங்களில் வட மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாகத் தங்கியுள்ளனர். அதனால் அவர்கள் யாராவது கொள்ளை யடித்துள்ளார்களா என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்தப் பகுதிகளில் பல வீடுகளில் விடிய விடிய சோதனை நடத்தப்பட்டன. 500இற்கும் மேற்பட்ட வர்களிடம் விசாரணை நடந்தது.

ஹிந்தி பேசும் சிலரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்து வருகின்றனர். ஆனால், கொள்ளையர்கள் பற் றிய எந்தத் தகவலும் தெரிய வில்லை.

சம்பவம் நடந்தவுடன், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய 3 மாவட்டங்களில் பொலிஸார் உஷார் படுத்தப்பட்டனர். (வ)



இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, மியான்மர் வெளியுறவுத்துறை அமைச்சர் யு வன்ன மாங்குடன் ஹைரதாபாத்தில் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துரையாடினார்.

## டில்லியில் பாதுகாப்பு தீவிரம்

இந்தியாவின் 62 ஆவது குடியரசு தின விழா இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பாதுகாப்பு படையினரும் பொலிஸாரும் உஷார்படுத்தப் பட்டுள்ளனர். டில்லியில் இந்தியா கேட் அருகில் உள்ள ராஜபாதையில் நடைபெறும் குடியரசு தினவிழாவில் ஜனாதிபதி பிரதீபா பட்டீல் கலந்து கொண்டு தேசிய கொடியேற்றுவார். அங்கு நடைபெறும் முப்படையினர் பாதுகாப்புப் படையினர் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்கிறார்.



தொடர்ந்து நாட்டின் அனைத்து மாநிலங்களின் பாரம்பரிய கலை-கலாசாரத்தை விளக்கும் நடன கலைஞர்களின் கலை நிகழ்ச்சி மற்றும் அலங்கார ஊர்திகளின் கண்கவர் அணி வகுப்பு நடையை பிரதீபா பட்டீல் பார்வையிடுவார். இதில் சிறப்பு விருந்தினராக தாய்லாந்து நாட்டின் முதல் பெண் பிரதமர் இன்லக் சின்வர்ட்ரா பங்கேற்கவுள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங், துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பாராளுமன்ற சபாநாயகர் மீராகுமார், மற்றும் மத்திய அமைச்சர்கள் உயர் அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

டில்லியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. வழக்கமாக 25 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புபணியில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர். இந்த முறை 50 ஆயிரம் பொலிஸார் குவிக்கப்பட்டு பல அடுக்கு பாதுகாப்பு போடப் பட்டுள்ளது. (வ)

## மேலும் இருவர் கைது

இந்தியாவின் யூனியன் பிரதேசமான அந்தமானில் ஜரவா பழங்குடியினரை ஆட வைத்தது தொடர்பான வழக்கில் மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவில் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகளின் விருப்பத்துக்காக அங்கு வாழும் ஜாராவா பழங்குடியினரை ஆட வைத்து அதனை ஆங்கில தொலைக்காட்சிகள் ஒளி பரப்பிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அந்தமான் மற்றும் நிக்கோபாரில் வர்த்தகர் மற்றும் ஒட்டோச் சாரதி ஆகிய இருவரை பொலிஸார் கைது செய்திருந்தனர். இந்தநிலையில் ஜரவா பழங்குடி வாசிகளின் நடனத்தை வீடியோ எடுக்க உதவியதாக மேலும் 2 பேரை அந்தமான் பொலிஸார் கைது செய்தனர். இந்த வழக்கின் மீதான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (வ)

## கலாமின் கொடும்பாவியை எரித்த மாணவர்கள் கைது

கோவை, ஜன.26

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் கொடும்பாவி எரித்த கோவை சட்டக் கல்லூரி மாணவர்கள் 12 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

கூடங்குளம் அணுமின் நிலையம் குறித்து மக்கள் மனதில் உள்ள அச்சங்களைப் போக்க முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் முயற்சி செய்து வருகிறார். அணுமின் நிலையத்தை பார்வையிட்ட அவர் அது மிகவும் பாதுகாப்பானது, அதனால் யாரும் கவலைப்பட வேண்டாம் என்று தெரிவித்திருந்தார்.


மக்கள் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் பாதுகாப்பு குறித்து பயப்பட வேண்டாம் என்றும், இந்தத் திட்டத்தின் மூலம் தமிழகத்தின் நிதி நிலைமை மேம்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

அவரது இந்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோவை சட்டக் கல்லூரி மாணவர்கள் 12 பேர் அப்துல் கலாமின் உருவப் பொம்மையை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்கு அவர்கள் வந்தபோது ஒரு மாணவன் கலாமின் உருவப் பொம்மைக்கு தீ வைத்தார். அதை உடனே பொலிஸார் அணைத்து விட்டு அந்த 12 மாணவர்களையும் கைது செய்தனர்.

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் இதுவரை எந்த சர்ச்சையிலும் சிக்காமல் இருந்து வந்தார். அவருக்குப் போகும் இடமெல்லாம் சிறப்பாகவே இருந்து வருகிறது. இந்த நிலையில் அவரது கொடும்பாவி தமிழகத்தில் முதல்முறையாக, ஏன் இந்தியாவி லேயே முதல்முறையாக எரிக்கப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் எனக்கு மயக்கம்?



# தமிழர் திருநாளான தைப்பொங்கல் இன்று



கதிரவன் மேற்கே மறையும்
கனிந்த மாலைப் பொழுதிலே
பச்சைக் கிளிகள் பறந்து திரியும்
பசுமைமிகு சோலையிலே
மரத்திலுள்ள ரோஜா
மலர் பறித்து நின்றாள் அவள்
வாடிய ரோஜாக்களும் எழுந்து நின்றன - அதை
வருடிய அவள் விரல்களாய்

மங்குகின்ற கதிரவன் ஒளியில்
மதிபோல் தெரிந்தது அவள் முகம்
இயற்கையழகு மிகு அச்சோலையிலே
இயல்பழகியாய் நின்றாள் அவள்
அவளழகில் மயங்கிய என் மனதில்
அக்கணமே பற்பல கவிதைகள்
என் உணர்வை வெளிவிடாது
என் மனதில் அடைத்து வைத்தேன்
இப்போது எண்ணுகிறேன்
இங்கு ஏன் எனக்கு மயக்கம் என்று...!

**கே.எஸ்.ராம்.**



## பாரம்பரியங்களின்படி கொண்டாடப்படுகின்றது

இந்த உலகில் ஓர் இனம் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு அந்த இன மாந்தர்க்கே உரித்தான கலாசார பண்பாட்டு அம்சங்கள் காணப்பட வேண்டியது அவசியம். அந்தவகையில் தமிழ் மக்களினதும் பாரம்பரியங்களை எடுத்துக் காட்டுவதில் தைப்பொங்கல் பண்டிகைக்கு ஒரு தனித்துவ இடமுண்டு.

உழவுத் தொழிலைச் சிறப்பிக்கும் இந்த நாளிலே, புத்தரிசியில் பொங்கல் பொங்கி, சூரியன் உதயமாகும் போது பொங்கலைப் படைத்து அவனை வரவேற்று வணங்கித் தமது நன்றிக் கடனை நிறைவேற்றுவர்.

தற்போது மீளக்குடியமர்ந்துள்ள மக்களும் தமது ஜீவனோபாயமான விவசாயத்துக்கு மீண்டுள்ளதால் தைப்பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாட முனைகின்றனர்.

இலங்கை, இந்தியா உட்பட ஆஸ்திரேலியா, கனடா, மலேசியா போன்ற நாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர் தமிழர்களும் தைப் பொங்கலைப் பாரம்பரியமான முறையிலே வரவேற்கின்றனர். ஆலய சபைகளும் அரச நிறுவனங்களும் ஏனைய அமைப்புகளும் தைப்பொங்கலன்று எமது பாரம்பரியங்களைப் பிரதிபலிக்கும் கலாசார விழாக்களை நடத்துகின்றன.

இவ்வாறு கடவுள் வழிபாட்டையும் சைவ மக்களின் மரபு வழி விழுமியங்களான அன்பு, அறம், பகிர்ந்துண்ணல், நன்றி மறவாமை முதலான பண்புகளையும் கலைகளையும் வளர்க்க இடமளிக்கும் தமிழர் திருநாளான தைப்பொங்கல் இன்று பாரம்பரியங்களின்படி கொண்டாடப்படுகின்றது என்பதே என்தரப்பு வாதமாகும்.

**வி.திவாகரன்,**
**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.**

## பாரம்பரியங்களை மீறி கொண்டாடப்படுகின்றது

''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்ற கூற்றுக்கிணங்க தை மாதம் என்பது அந்த வருடத்துக்கு நல்ல வழியை காட்டுகின்ற மாதம் ஆகும். ''உழவர்கள் சேற்றிலே கால் வைத்தால்தான் நாம் சோற்றிலே கை வைக்கலாம்'' என எமது முன்னோர்கள் கூறுவர். அவ்வாறு உழவர்கள் நெல் விதைத்து நெல் அறுவடை நல்ல முறையில் அமைவதற்கு உகந்த காலநிலையைத் தந்த சூரியனுக்கு நன்றி செலுத்தும் முகமாகத் தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.

இத்தகைய தைப்பொங்கலைக் கொண்டாடுவதற்குப் பல பாரம்பரிய முறைகள் உள்ளன. நாம் பொங்கும்போது செய்ய வேண்டி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அர்த்தங்கள் உள்ளன. தைப்பொங்கலை குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து நின்று கொண்டாட வேண்டும். இப்பொழுது மக்கள் எல்லோரும் தைப்பொங்கல் கொண்டாடுவதை ஒரு கடமையென செயற்படுகின்றார்கள்.

முன்னைய மக்கள் பசுப்பால் விட்டுப் பொங்குவார்கள். அறுவடை செய்யப்பட்ட புது அரிசியில் பொங்குவார்கள். இப்போதோ தமது சுகத்துக்காக தேங்காய்ப் பாலை விட்டுப் பொங்குகின்றார்கள். மற்றும் பொங்கல் அரிசி புத்தரிசியாக இருக்காது.

முன்னைய மக்கள் புதுப் பானையில் பொங்குவார்கள். அத்துடன் பானைக்கு மஞ்சள் இலை, மாவிலை போன்றவற்றை கட்டுவார்கள். ஆனால் தற்போதைய மக்களோ பழைய ஒரு பானையை எடுத்து அடுப்பில் வைத்துப் பொங்கினால் சரி என்று செயற்படுகின்றனர். இப்படிப் பார்க்கப் போனால் தற்பொழுது தைப்பொங்கலில் பல செயற்பாடுகளில் பாரம்பரியம் பேணப்படுவதில்லை. இதைப்பற்றி இன்றைய மக்கள் சிறிதும் சிந்திப்பதில்லை.

**ஆர்த்திகா சுவேந்திரன்,**
**சுழிபுரம்.**

# சிந்தனைக்கு சில மணிகள்

அருகில் இருக்கும் போது கோபுரங்கள் கூட உயரமாகத் தெரிவதில்லை. தூரத்தில் இருக்கும் போதுதான் பிரமாண்டமாகத் தெரிகின்றன.

தப்புக்கணக்குகளை நீ அதிகம் போடாதே ஏனெனில் உன் வாழ்வே தப்பாகிப் போய்விடும்.

பல தீபங்கள் உன்னால்தான் ஒளிரும்மாகவிருந்தால் நீ திக்குச்சியாக இருக்க அச்சம் கொள்ளாதே.

அன்பின் ஆழம் எவ்வளவு என்பதை பிரிவின் போதுதான் உணர முடியும்.

எதையும் மன்னிக்கும் இதயம் ஒன்று உண்டென்றால்அதுதாயின்இதயமே.

நாவடக்கம் மரியாதையைக் காக்கும். தன்னடக்கம் தன்மானத்தைக் காக்கும்.

உன்னை யாராவது தூற்றினாலும் அவதூறு செய்தாலும் நீ அதற்கு எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் அமைதியாய் இரு.

இருளைப் போக்குவது சூரிய ஒளி. மனிதனின் இருளைப் போக்குவது அறிவின் ஒளி.

**வி.எழிலரசி, தம்பசிட்டி.**



# அபராதம் for only மக்கள்

வீட்டு வளவில் நிற்குதடா
மழைத்தண்ணி
அதனாலே பெருகுதடா
டெங்கு நுளம்பு என்று சொல்லி
விதித்தனரே அபராதம்
யாழ். வாசிகளுக்கு
நகரை சிங்கப்பூராக்கும் ஒரு சபை
ஒருவன் சொன்னான் டேய்
உமது சபையின்
றோட்டுக் கானிலும் நிற்குதடா
ஓடாத மழைத்தண்ணி அதனாலும்
பெருகும் டெங்கு
அதுவும் பன்மடங்கு என்று
ஆனால் இன்றுவரை
அபராதம் யாருக்கு??

**ரி.கஜேந்திரன்,**
**காரைநகர்.**

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

'வைதீஸ் கொலைவெறி' பாடலை தமிழர்கள் தமக்கானதென சொந்தம்

| கொண்டாடலாம் | கொண்டாடமுடியாது |
| --- | --- |
| ☐ | ☐ |

பெயர்: ............................................

முகவரி: ............................................

அடையாள அட்டை இல..

............................................

உங்கள் தீர்ப்புக்களை 23.02.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
*'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

பெயர் :- ............................................

முகவரி :- ............................................

............................................

............ திகதி ............ கையொப்பம்

# கற்றது கைமண் அளவு

வாழ்க்கையை நேசிக்க விரும்புபவர்கள் வாழ்நாள் முழுவதும் படித்துக்கொண்டே இருப்பார்கள். படிக்கப் படிக்க இன்பமளிப்பவை நல்ல புத்த கங்களே! இதனால்தான் ''பயில் தொறும் நூல்நயம் போலும்'' என்றார் வள்ளுவர்.

நீங்கள் யாரிடமிருந்து வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளுங்கள். ஆனால் நல்லதை மட்டும் கற்றுக் கொள்ளுங்கள் கற்றல் வீட்டில் இருந்தே தொடங்குகிறது. பெற்றோரிடம் இருந்து ஏராளமான விடயங்களை நீங்கள் கற்க முடியும். எமது சூழலிடம் இருந்து படிப்பினைகளை பெற்றுக் கொள்கிறோம்.



உயர்கல்வி கற்றவர்கள் நேர்முகத் தேர்வுக்காகவும், போட்டித்தேர்வுக்காகவும் [illegible] [illegible] அடியோடு மறந்து விடுகின்றனர். அதனால் தான் கல்வியைக் கடல் என்றார்கள். அந்தக் கடலை முழுவதுமாக நீந்தியவர்கள் யாருமல்ல. உங்களைச் சுற்றியுள்ள உலகம் எப்படிப்பட்டது என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். ஒவ்வொருவரையும் அணுகி அவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்க முடியாது.



வாழ்க்கையில் மனிதர்களின் தொடர்பு கசக்கும் நாள் வரும். ஆனால் உணர்ந்த புத்தகங்களின் கருத்துக்கள் என்றுமே கசப்பதில்லை என்கிறார் டாக்டர் மு.வரதராஜன். ஆகவே மகிழ்ச்சியாக இருக்க விரும்புபவர்கள் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் படித்துக் கொண்டே இருக்க வேண்டும். போதனை என்பது வகுப்பறையில் முடிகிறது. ஆனால் வாழ்க்கை முழுவதும் தொடர்கிறது.

**சித்திரா போகீந்திரன், மானிப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழுவாகப் பணிசெய்யும் கலை!

இன்றைய உலகில் எவரும் தனித்து இயங்க முடியாது. மாறாக ஒருவர் ஒருவரைச் சார்ந்து பகிர்ந்து வாழ வேண்டியுள்ளது. இப்படிப் பகிர்ந்து இணைந்து வாழும் போது வாழ்வு அர்த்தம் பெறுகின்றது. பிறருக்குப் பயனும் அளிக்கிறது. எனவே தனிமனித வாழ்வில் குழு மனப் பான்மை மிகவும் முக்கியமானதாகும்.

எந்த ஒரு மனிதர் வெற்றி பெற்றாலும் வெற்றி பெற்றது அவர் மட்டும் அல்ல, மாறாக அவரின் வெற்றிக்குக் காரணமாக இருந்தவர்கள் பலர். எடுத்துக்காட்டாக பரீட்சையில் மாவட்டத்தில் முதல் மாணவனாக வருகின்றவரின் சாதனைக்கு அவரது பெற்றோர், ஆசிரியர்கள், உறவினர்கள், நண்பர்கள், குடும்பச் சூழல் அனைத்தும் இணைந்ததால் தான் அவருக்கு அந்த வெற்றி கிடைத்தது. கிரிக்கெட்டில் கூட ஒருவரை, ஒருவர் புரிந்து கொண்டு விளையாடினால் மட்டுமே அந்த அணி வெற்றி பெறுகிறது. விளையாட்டு மட்டும் அல்ல எந்த ஒரு நிகழ்விலும் குழு வேலையின் மூலம் கிடைக்கும் வெற்றி மகத்தானது.

ஒரு அரசன் ஒரு மணிமண்டபம் கட்ட ஆசைப்பட்டான். இந்த உலகத்திலே அதுபோன்ற ஒரு மணி மண்டபம் இருக்கக்கூடாது என்று நினைத்தான். எனவே மிகச் சிறந்த கட்டடக் கலைஞனை அழைத்து அவனது விருப்பத்தைச் சொன்னான். அந்தக் கட்டடக் கலைஞன் அரசனிடம் என்னால் கட்டடம் மட்டுமே கட்டமுடியும் மற்ற வேலைகளைச் செய்ய முடியாது என்றான். அரசனுக்கு கோபம் வந்தது. அந்தக் கட்டடக் கலைஞனைச் சிறையில் அடைக்க கட்டளையிட்டான்.

மீண்டும் ஒரு தலைசிறந்த தச்சுத்தொழில் செய்பவனை அழைத்து அவனிடம் தன் விருப்பத்தைச் சொன்னான். அவனும் தன்னால் தச்சுத்தொழில் மட்டுமே செய்ய முடியும் மற்ற வேலைகளை செய்ய முடியாது என்று பதில் அளித்தான். கோபப்பட்ட அரசன் அவனையும் சிறையில் அடைத்தான்.

மீண்டும் ஒரு தலைசிறந்த சிற்பியை அழைத்து தனக்காக ஒரு மணிமண்டபத்தைக் கட்டித்தர முடியுமா? என்று வினவினான். அந்தச் சிற்பியும் தன்னால் சிற்ப வேலைகளை மட்டுமே செய்ய முடியும் முழு மணிமண்டபத்தையும் என்னால் கட்டித்தர இயலாது என்றான். ஆத்திரம் அடைந்த அரசன் அவனையும் சிறையில் அடைத்தான்.

மீண்டும் ஒரு தலைசிறந்த கண்ணாடித் தொழில் செய்பவனைப் பார்த்து தன் ஆசையைத் தெரிவித்தான். அவனும் தன் இயலாமையை வெளிப்படுத்தினான். தன்னால் கண்ணாடித் தொழிலை மட்டுமே செய்யமுடியும் என்றான். ஆத்திரம் அடைந்த அரசன் அவனையும் சிறையில் அடைத்தான். சிறையில் அடைக்கப்பட்டுள்ள அனைவரையும் மறுநாள் தூக்கில் இடும்படி கட்டளையும் பிறப்பித்தான்.

மன வேதனையுடன் இருந்த அரசனைப் பார்க்க ஒரு முதியவர் வந்தார் அவர் அந்த அரசனைப் பார்த்து ''அரசே; உங்கள் ஆசையை என்னால் நிறைவேற்ற முடியும். நீங்கள் விரும்பிய அந்த மணிமண்டபத்தை நான் உங்களுக்குக் கட்டித்தருகின்றேன்'' என்றார் மகிழ்ச்சியுற்ற அரசன் அந்த முதியவரிடம் ''உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள் அதை இப்போதே தருகிறேன்'' என்று உறுதி அளித்தான்.

அந்த முதியவர் அரசனிடம் ''நீங்கள் சிறையில் அடைத்திருக்கும் அந்த நால்வரையும் எனக்குத் தாருங்கள் உங்கள் ஆசையை நிறைவேற்றுகின்றேன்'' என்றார். உடனே அரசன் அந்த நால்வரையும் அவரிடம் கொடுத்தார். அந்த முதியவர் கட்டடக்கலைஞரிடம் நீ கட்டுமான பணிகளை மட்டும் கவனி என்றார். தச்சுத் தொழிலாளியிடம் தச்சு வேலையைக் கொடுத்தார். சிற்பியிடம் சிற்பங்களைச் செய்யச் சொன்னார். கண்ணாடிக் கலைஞரிடம் கண்ணாடி வேலைகளைச் செய்யச் சொன்னார். இப்படி ஒரு வருடத்தில் அனைவரின் வேலைகளும் முடிந்தது. அரசன் அந்த மணி மண்டபத்தைப் பார்வையிட வந்தான். அவனால் நம்ப முடியவில்லை அவன் நினைத்ததை விட அழகான மணிமண்டபம் அவன் கண்முன்னே இருந்தது.

அரசன் ஆச்சரியமாக அந்த முதியவரைப் பார்த்து என்னிடம் செய்யமுடியாது என்று சொன்னவர்களைக் கொண்டு உங்களால் எப்படி இந்த அழகிய மணிமண்டபத்தைக் கட்ட முடிந்தது என்று கேட்டான். அந்த முதியவர் நான் அனைவரையும் அவர்களது பணிகளைச் செய்யச் சொன்னேன். பின்பு அவற்றையெல்லாம் ஒன்றிணைத்தேன். அதனால்தான் என்னால் முடிந்தது என்றார்.

பாலா

# ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு

### ஈசிற்றி ஆங்கிலக் கல்வி நிறுவனத்தின் அதிபர் தெரிவிப்பு

**மஹிந்த அரசின் மும்மொழிக் கொள்கைத் திட்டத்தின்படி ஆங்கில மொழியானது முக்கிய இடத்தைப்பெறுகிறது. இலங்கையில் தனியார் துறையை எடுத்துக்கொண்டால் ஆங்கிலம் பேச முடியாதவர்கள் வேலை வாய்ப்பை பெற முடியாத நிலையே உள்ளது.**

யாழ்ப்பாணம், ஜன.26

ஆங்கில மொழி தெரிந்த ஒருவர் உலகில் எங்கு சென்றாலும் சிறப்புடன் வாழமுடியும் என ஈசிற்றி ஆங்கிலக் கல்வி நிறுவனத்தின்அதிபர் லயன் ஜெ.ரஜீவன் தெரிவித்தார்.

ஈ.சிற்றிஆங்கில கல்வி நிறுவனத்தின் வேலணைக் கிளையில் ஆங்கிலக் கல்வியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு பட்டமளித்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ரஜீவன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தெரிவிக்கையில்:


மஹிந்த அரசின் மும்மொழிக் கொள்கைத் திட்டத்தின் படி ஆங்கில மொழியானது முக்கிய இடத்தைப்பெறுகிறது. இலங்கையில் தனியார் துறையை எடுத்துக் கொண்டால் ஆங்கிலம் பேச முடியாதவர்கள் வேலை வாய்ப்பை பெற முடியாத நிலை உள்ளது.

இன்று தீவக மாணவர்கள் கல்வித்துறையில் படிப்படியாக முன்னேறி வரும் வேளையில் எமது ஈ-சிற்றி ஆங்கில கல்வி நிறுவனத்தில் தீவக மாணவர்கள் இணைந்து ஆங்கில கற்கை நெறியை பூர்த்தி செய்து வருகின்றனர். இவர்கள் ஆங்கிலத்தில் நன்றாக பேசக் கூடியவர்களாக, எழுதக் கூடியவர்களாக ஆங்கில மொழியிலே கருமமாற்றக் கூடியவர் களாக உள்ளனர்.

எனவே பல சிரமங்களின் மத்தியில் ஈசிற்றி ஆங்கில கல்வி நிறுவனத்தின் கிளையை வேலணையில் நிறுவி இந்தப் பகுதி மக்களுக்கு குறிப்பாக உயர்கல்வி கற்போர், பாடசாலை மாணவர்கள், வெளிநாடுகளுக்கு செல்ல இருப்போர், அரச சேவையாளர்கள் குடும்பப் பெண்கள் ஆகியோர் நன்மை பெறும் பொருட்டு நடத்தி வருகின்றோம். தொடர்ந்து இந்த நிறுவனம் தனது சேவையை ஆற்ற யாவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றார்.

இந்த பட்டமளிப்பு விழாவில் தீவக கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.கதிரேசபிள்ளை இராணுவ வேலணை கட்டளை அதிகாரி லெப்டினட் ஓ.எம்.ஐ.உடுபால, முகாமைத்துவ பணிப்பாளர் டாக்டர்அ.ஜெயகுமார், வேலணைக்கிளை இயக்குநர் டாக்டர் க.ஜெயச்சந்திர மூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாகக் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களது ஆங்கிலப் பேச்சு, ஆங்கில நாடகம், நடனம் என்பன இடம்பெற்றது. (எ)



பெரிய புராணம் காட்டும் வாழ்வியல் என்ற தலைப்பில் கருத்தரங்கும் கருத்தாடலும் நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் திருநாவுக்கரசு நாயனார் புராணம் பற்றிய கருத்துரைகளும் கருத்தாடல்களும் இடம் பெற்றன. நிகழ்வின் தொடக்கவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் வழங்குகின்றார். (எ-38)

## புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.26

நாகர்கோயில் கௌத்தந்துறை பிள்ளையார் ஆலய புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவு கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்றது.

புதிய நிர்வாக உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் தியாகராசா நாகமுத்து, உபதலைவர் நடராசா செல்வராசா, செயலாளர் சபாரத்தினம் உதயகுமார், பொருளாளர் கணபதிப்பிள்ளை இராமலிங்கம்.

நிர்வாக உறுப்பினர்களாக இராசையா பத்மநாதன், தவராசா வதனராசா, தனபாலசிங்கம் பரமானந்தராசா, கந்தையா சிறீகுமார், சிவசாமி மதியழகன், இராசேந்திரம் சுரேஸ்குமார், பாலசுப்பிரமணியம் அருணகிரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் கடந்த பத்து வருடங்களாக பூட்டி இருந்த மேற்படி ஆலயத்தைப் புனரமைப்புச் செய்வதற்கான காலம் கூடிவந்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (எ-313)

# பாடசாலைகளில் போசாக்கு உணவுத் திட்டம் ஆரோக்கியமான சூழலை உருவாக்கும்

### மௌலவி ஏ.எம்.முபாறக் தெரிவிப்பு

**அதிகமானவர்கள் வீட்டுச் சூழல் மற்றும் வறுமை காரணமாக உணவு கிடைக்காமல் பாடசாலைக்குச் செல்ல முடியாமல் இருக்கின்றார்கள். சில மாணவர்கள் படிக்க வேண்டும் எனும் ஆர்வத்தால் பசியுடன் வந்து கல்வி கற்கின்றனர்.**

யாழ்ப்பாணம், ஜன.26

எதிர்காலத்தில் சிறந்த தலைமைத்துவம் மிக்க மாணவர்களையும் ஆரோக்கியமான சமுதாயத்தையும் உருவாக்குவதற்கு போசாக்கு உணவு வழங்கும் திட்டம் வழி வகுக்கின்றது.

இதனை வடமாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் விஸ்தரிப்புச் செய்யப்பட வேண்டும். குறிப்பாக கிராமப்புறப் பாடசாலைகளுக்கு இந்தத் திட்டம் அவசியம் தேவையாகவுள்ளது என மௌலவி ஏ.எம்.முபாறக் தெரிவித்தார்.

போசாக்கு உணவு வழங்கும் தேசிய விழா அண்மையில் வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்தாவது:

மகிந்த சிந்தனையின் அடிப்படையில் பாடசாலைகளில் போசாக்கு உணவு வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படுவது மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு விடயமாக உள்ளது.

ஏனெனில் அதிகமானவர்கள் வீட்டுச் சூழல் மற்றும் வறுமை காரணமாக உணவு கிடைக்காமல் பாடசாலைக்குச் செல்ல முடியாமல் இருக்கின்றார்கள். சில மாணவர்கள் படிக்க வேண்டும் எனும் ஆர்வத்தால் பசியுடன் வந்து கல்வியை பயில்கிறார்கள்.

இந்தத் திட்டத்தின் மூலம் மாணவர்கள் பயன் பெறுவதால் அதிகமாகக் கிராமப்புறப் பாடசாலைகளில் விஸ்தரிப்புச் செய்யப்பட வேண்டும்.

மாணவர்கள் தமது பசியை மறந்து கற்றலில் ஆர்வமாக ஈடுபடும் போது, அவர்களிடத்தில் தலைமைத்துவப் பண்பும், ஆரோக்கியமும் தானாகவே உருவாகும்.

இந்தத் திட்டத்தை வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் ஆரம்பித்து வைப்பது பாராட்டக் கூடிய ஒரு விடயமாகும் - என்றார். (எ-236-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377, 021-2262395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' – மாலு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 0232223311

## பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை

தாம் பெற்ற பிள்ளைகளை கொன்றார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த சில நாள்களில் இரு தாய்மார் வன்னியில் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளார்கள். போருக்குப் பின்னான காலத்தில் இவ்வாறான சம்பவம் நடப்பது இது முதல் தடவையல்ல.

போருக்கு முன்னர் இத்தகைய சம்பவங்கள் நடைபெறவில்லையா? இப்போது மட்டும் ஏன் பெரிதுபடுத்துகிறீர்கள் என்று கேட்போர் உண்டு. ஆனால், ஒப்பீட்டு ரீதியில் போர் நடந்த காலப்பகுதியைவிட கடந்த மூன்றாண்டுகளில் நடந்த இத்தகைய சம்பவங்கள் மிக அதிகம் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

"இவ்வாறான சம்பவங்கள் வருடத்தில் ஒன்றிரண்டே தங்களிடம் வந்ததாக எனக்கு முன்னிருந்த சட்ட மருத்துவ அதிகாரிகள் தெரிவித்திருந்தார்கள். ஆனால் நான் பதவிக்கு வந்தது முதல் இத்தகைய பல சம்பவங்கள் விசாரணைக்காக வந்திருக்கின்றன. இது நம்ப முடியாத அதிகரிப்பு" என்று ஒரு ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி.

கடும் போருக்குப் பின்னரான சமூகத்தில் இத்தகைய நடத்தைப் பிறழ்வுகள், சீரழிவுகள் உலகம் முழுவதும் எல்லாச் சமூகங்களும் எதிர்கொண்டவைதான் என்று உளவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். அது பற்றி அவர்கள் ஆய்வுகளையும் நடத்தி வருகின்றனர்.

இத்தகைய நிகழ்வுகள் தமிழ்ப் பண்பாட்டுச் சீரழிவாக சமூகத்துக்குள் ஒரு தரப்பால் எடுத்துச் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது. பண்பாடு அழிக்கப்படுவதாகவும் அதன் மூலம் தமிழர்களை அழித்துவிட எதிரிகள் துடிப்பதாகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டாலும் அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகள் பெருமெடுப்பில் எடுக்கப்பட்டதாக எந்தத் தகவலும் இல்லை.

பிறந்த பின்னர் பிள்ளைகளைக் கொல்வது அல்லது பிறப்பதற்கு முன்னரே சட்டவிரோதமாகக் கருக் கலைப்புச் செய்வது ஆகிய இரு சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன என்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

வன்னியில் அனைத்து சமூக உள்கட்டுமானங்களும் பொருளாதாரக் கட்டுமானங்களும் அடியோடு தகர்ந்துள்ள நிலையில் மக்களுக்கு தமது வாழ்க்கையை மீளக்கட்டி எழுப்புவதில் பல இடர்கள் காணப்படுகின்றன. அரசோ, வெளியே தெரியக்கூடிய – உலகத்துக்குக் காட்டக் கூடிய – நடவடிக்கைகளிலேயே முழுக் கவனத்தையும் செலுத்துகிறது. அதாவது கட்டடங்கள், வீதிகள், பாடசாலைகள், விவசாயம் போன்ற வெளித்தெரியும் வளர்ச்சிகளிலேயே மொத்த நிதியையும் கவனத்தையும் அரசு குவித்துள்ளது.

ஆனால், பேரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளவளத் துணை மற்றும் உளவியல் ரீதியான உதவிகள் எவையும் அந்த மக்களை எட்டுவதை அரசு திட்டமிட்டுத் தடுக்கிறது. அத்தகைய உதவித் திட்டங்கள் எவற்றையும் ஜனாதிபதியின் விசேட செயலணி கடந்த மூன்று வருடங்களாக அங்கீகரிப்பதில்லை. அனைத்து நிதியையும் கட்டுமானங்களுக்குத் திருப்புமாறு அது அறிவுரை கூறுகின்றது.

இவ்வாறான நிலையில் உள்ளூர் தொண்டு நிறுவனங்களும் பல்கலைக்கழக மாணவர்கள் போன்றவர்களும்கூட இந்த விடயத்தில் அக்கறையற்று இருப்பது நிலைமையை மேலும் விபரீதமாக்குகின்றது. பத்திரிகைகளில் பரபரப்பாகச் செய்திகள் வெளிவந்த உடனே, அது பற்றி விவாதங்களும் கலந்துரையாடல்களும் கூட்டங்களும் நடக்கின்றனவே தவிர, களத்தில் உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு – இலக்குப் பயனாளிகளுக்கு – எந்த உருப்படியான உதவிகளும் கிடைக்கவில்லை. பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை என்ற நிலைதான் நீடிக்கிறது.

கலாசார சீரழிவு பற்றிய வெற்றுக் கோஷம் மட்டும் நிலைமையை மேம்படுத்தப் போதாது. பத்திரிகைகளும் எட்ட முடியாத இடங்களில் இலக்குப் பயனாளிகள் இருக்கையில் நேரடியாக அவர்களைச் சென்றடையக் கூடிய திட்டங்களே பயன்தரக் கூடியவை. அவையும் விரைவிலேயே செயலுருப் பெறவேண்டும். தொண்டாற்றப் பலர் முன்வர

# எல்லாப் பாதைகளிலும் பொல்லாத முட்கள்

செந்தூரி

"தன் சக மாணவியை, இராணுவ வாகனத்தினால் வீதியில் விபத்துக் குள்ளாக்கி உயிர் பறித்த சோகத்தை" வார்த்தைகளில் கொஞ்சம் அனல் கூட்டிக் கேட்டதற்கு, சோதனை வீரர்கள் கொடுத்த மறுமொழிதான் என்ன?

பிறருடைய துன்பத்தில் இன்பம் காண்பது என்பது ஒரு வகை வியாதி. "சாடிஸம்" எனும் பெயரில் பெரியளவிலான ஆராய்ச்சிகளுக்கும், முடிவுகளுக்கும் மனித குலத்தினைத் தள்ளிவிட்ட பெரும் நோய் நிலையது.

தனியொரு மனிதனை என்று மட்டுமல்லாது, பெயர் சொல்லி வாழும் ஓரினத்தில் ஒவ்வொரு குடிமகனும் அல்லலுறுவதை அல்லும் பகலும் ஏதோவொரு வடிவில் இரசித்து இன்புற்றிருப்பதையும் வழக்காக கொண்டவர்கள் நிச்சயம் ஆழமான உளவியாதிகளால் பீடிக்கப்பட்டவர்களே.

பல்வேறு வழிகளிலும் ஆளுமினத்தின் அதிகாரச் சாட்டையைக் கையிலெடுத்த திமிரில், வக்கற்றவர்கள் என்ற பெயர்ச்சூட்டி ஒட்டாத குறையாகத் தமிழர்களைத் தலை நகரிலும், "இணைந்த (?) தேசத்தின்" எல்லாப் பகுதிகளிலும் வைத்து கேவலப்படுத்திய வடுக்கள் சுலபமாக தேய்ந்து விடுவனவல்ல.

வாங்கிய பிடரியடிகளுக்கு, வட்டி செலுத்துமாப் போல், போர் ஓய்ந்த பின்னரும், தம்முன் புரட்சியாளர்களாக நின்று அத்துமீறிய குடிமக்களைச் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், சீண்டிப் பார்க்கவும் இந்த மனநோயாளிகள் தவறுவதில்லை.

இராணுவ அடக்குமுறையின் கோரப் பற்களில் இரத்தம் வழிய எம் மக்களின் போக்குவரத்து, பயண வசதிகளை நெருக்கு வாரங்களுக்கு உட்படுத்திய தொண்ணூறுகள் தொடங்கி, குற்றவாளிகள் "கதர் அணிந்து" ஆளும் இக்காலம்வரை வடபகுதி மக்களின் பயணச் சிக்கல் பேரவலம்தான்.

வீதிக்கு வீதி சோதனைச் சாவடிகளை நிறுவி, அவற்றின் ஊடாகப் பயணிக்கும் எல்லா வாகனங்களையும் எட்டாத் தொலைவில் நிறுத்தி, ஈவிரக்கமின்றியும் வயது வேறுபாடின்றியும், எல்லோரையும் வரிசையில் நகர வைத்துச் சோதித்தனுப்பிய நாள்கள், பசுமரத்தாணிகளாகப் பதிக்கப்பட்டவை.

அதே சோதனைச் சாவடிகளில் வைத்து கைது செய்யப்பட்டு பின் காணாமல்போன தமது உறவுகளின் "பெரிதுபண்ணிய" புகைப் படத்தைத் தாங்கி, கண்களில் வாழ்க்கைச் சுமைகளையும், நெஞ்சோரத்தில் நம்பிக்கைக் கீற்றுக்களையும் நிரம்பவே சுமக்கும், எம்மினப் பெண்களின் விழி நீருக்கு இன்னமும் சரியான பதில் ஏதுமில்லை.

"தன் சக மாணவியை, இராணுவ வாகனத்தினால் வீதியில் விபத்துக் குள்ளாக்கி உயிர் பறித்த சோகத்தை" வார்த்தைகளில் கொஞ்சம் அனல் கூட்டிக் கேட்டதற்கு, சோதனை வீரர்கள் கொடுத்த மறுமொழிதான் என்ன?

"கூடப் படித்தவளை வீதியில் கொன்றீர்களே?" என்று கோபமாய் கேட்ட வார்த்தை வீச்சுத்தான் "கிருஷாந்தியை" செம்மணிக்குள் சேர்த்தது எனும் உபகதைஎம்மில்பலர்அறியாதது.

பயணங்கள் அற்புதமானவை! அழகான அனுபவச் சொட்டுக்கள், மூளையில் நிரந்தர நினைவகத்தில் எச்சமாயிடும், வேகப் பறவைகள். தூரத்தில் பின்னோடும் மரக்கூட்டம், கூட வரும் நிலா, குத்தியெடுக்கும் வேகக் காற்று, எல்லாப் பயணங்களிலும் கிடைக்கும் இலவச இணைப்புக்கள்.

காலமும், சூழலும் உல்லாசப் பயணங்களையும், சுற்றுலா அனுபவங்களையும் எம் மக்களிடமிருந்து முடக்கிப் போட்டிருப்பினும், அத்தியவசிய பயணங்களின் போது பெற்றிருக்கக் கூடிய மேற்படி சின்னச் சின்ன சந்தோஷங்களை அனுபவிக்கும் மனோ நிலையைக்கூட எமது பாதைகளில் விட்டு வைக்கவில்லை பேரினவாதம்.

கிளாலியிலிருந்து, பூநகரியை அடைந்த படகுப் பயணத்திலும், காங்கேசன் துறையிலிருந்து திருகோணமலை சேரும் கப்பல் பயணத்திலும் சாதாரண சூழ்நிலையில் கற்பனை செய்து கூட மகிழ முடியாத அனுபவங்களே மிஞ்சின கடந்த காலங்களில்.

கடல் மகளவள் மடியில், மெல்லசைவில் மெது மெதுவாய் சுகித்து துய்த்துக்களித்தேக வேண்டிய மேற்படி இரு நீர்ப்பாதைகளும், மரணங்களையும், மரண பயத்தையும் மட்டுமே விதைத்துப் போயின கடந்த காலங்களில். பொதுமக்கள் பயண வழியென்பதை நன்கறிந்திருந்த போதிலும், "நெருப்புக் கோளங்களை" வானிலிருந்து இரும்புப் பறவைகள் கொட்டின. இருபுறமும் ஆயுத வீரர்களின் அடாவடிச் சோதனைகளும், எக்கணமும் எமன் வரலாம் என எதிர்வு கூறும் இதயத் துடிப்பும் சாவின் சாவிகளை மட்டுமே வழித்துணையாகத் தந்தனுப்பின.

பிரிக்கப்பட்ட நிலப் பரப்பாக வடபகுதி இருந்த காலங்களில் தலைநகரையும், யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் வான்வழித் தொடர்பின் நினைவுகள் மட்டும் எப்படி?

மிகப் பெரும்பாலான எம்மக்களின் முதன் முதலான ஆகாயவழிப் பயண அனுபவம், அடக்குமுறை நின்ற பயத்தின் மீதிகளை மட்டுமே சொருகிச் சென்றது. "கிளியரன்ஸ்" காலாவதியாகும் திகதிகளும், அவிழ்த்துப் போட்டு சோதிக்கும் "கையுறைகளும்", இருட்டறையில் முகப்பதிவு செய்யும் கமெராக் கண்களும், மூச்சுக்கு கூட முன்னனுமதி கேட்கும் இரத்மலானை அதிகாலைகளும், கண்ணாடிகளில் கறுப்புத்துணி தொங்கிய பலாலியின் பாதைகளும்தான் இனிய வான்வழி வரத்துப் போக்குகளா? பரீட்சைக்கு பயண அனுபவத்தை கட்டுரை வரைய கேட்ட போதும்கூட இதைத் தானே எழுத முடியும் எம் "ஸ்கொலஷிப்" இயந்திரக் குழந்தைகளால்.

ஆக இறுதியாக ஓமந்தை, எனும் முள் இன்னும் தொண்டையில் சிக்கிக் கிடக்கிறது. உள்நுழையும் போது, உள்ளாடை மடிப்புக்களைக் கூட வருடிப் பரிசோதிப்பவர்கள், வெளிவிடும் போது மட்டும் தோளில் தட்டியெழுப்பி மீண்டும் தூங்கச் சொல்கின்றார்கள். ஆக இறுதியாக, தெற்கிலிருந்து வடக்கு விரையும் பஸ் பயணிகளிடம் அடையாள அட்டை கையிலிருந்தாலே போதும் என்கின்ற "பொன் செய்யும்" மனதுக்கு மாறியிருக்கிறார்கள்.

புலம்பெயர்ந்தோரிடம் மட்டும் கடவுச்சீட்டு கிளறப்படுகிறது. இனி மேல் இங்கு வராதே. எனுமளவுக்கு கேள்விகளும், பதில்களும் எழுப்பப் படுகின்றன. இவர்களும்தான் அந்நியச் செலாவணியை எம் நாட்டுக்கு ஈட்டிக் கொடுக்கும் சுற்றுலாக்காரர்கள் என்கின்ற பெருத்த மனநிலையும், பின்னோக்கிய எண்ணவேட்டமும் அறவே இருக்காத "எட்டாம் வகுப்பு"தானே?,

எங்கே இருக்கிறாய்?, யாரிடம் பேசுகிறாய்? எவ்விடத்தில் தங்கப் போகிறாய்? அங்கே என்ன செய்கிறாய்? எனும் தூக்கம் குழப்பிய கேள்விகள் மூலம் சுற்றுலாத்துறை இன்னமும் வளரும் என்று சொல்லித்தந்த "செயலர்"களின் உறக்கம் எமதைவிடப் பெரிதில்லையா? அலுவல்கள் நிமிர்த்தம் இவ்விடத்தை கடந்து தலைநகருக்குள் நுழைகின்றார்கள் என்று தெரிந்தும், உள்நுழையும் பிரயாணிகளைக் குடையும் அதே சமத்துவம் பழைய இரும்பு ஏற்றிய பார ஊர்திகளையும், மாட்டெரு ஏற்றிய ஊர்திகளையும் பரிசோதிக்கையில் இருந்திருந்தால், எம்மூர்க் கோயில் "தேர்ச் சிற்பங்களும்", "வெண்கலச் சிலைகளும்", "ஐம்பொன் மூர்த்திகளும்" தென்மேற்கு வீதிகளில்விலைக்குவந்திருக்கமாட்டாவே?

சமத்துவம், சமவுரிமை பற்றிப் பேசும் தகுதிக்கு மேற்பட்ட மகா குணம்தானே, சக இனத்தை சேர்ந்தவர்களையும் தடுத்து நிறுத்திய ஈனத்தின் சாட்சி. ஆர்ப்பாட்டம் பேரணி நடத்த வந்தவர்களிடம் மாங்குளத்தில் காட்டாறு பெருக்கெடுத்தது என்றும், முறிகண்டி போக முன்னரே பெரும் பாலம் உடைந்தது என்றும் கதையளக்கவும் கண்கட்டிவித்தை காட்டவும் முடிந்த, இத்தால் சகலரினதும் "பொது அறிவினை" எண்ணி எண்ணிப் புல்லரித்துப் போக மட்டுமே முடியும் எங்களால்.

"வாழும் போதும், வாழ்க்கைக்குப் பிறகும்" கூட பயணத்தில் தமிழனுக்கு கொடுக்கும் தொல்லைகள் அழகிய திட்டமிடல்கள்.

சாவின் வெற்றுடல்களைச் சுமந்து சென்று அந்திமக் கடன் முடிக்கக் கூட, வீதியனுமதிக்கு உங்களிடம் மனு எழுதிப் போட்டுக் காத்திருந்தவர்கள்தானே! சுடலையை வாங்கித் தந்த பெருமையை "பாராட்டி வாழ்த்தாமல்", கொளுத்தக் கூட விடமாட்டோம் என்று உண்மை நிறம் காட்டிய வெள்ளை அமைச்ச(வ)ங்களும் எம் விரல்களால் வென்றனுப்பிய நிறங்களின் சாட்சிதானே?

புறப்படும்போது, "போகிறாயா?" என்பதுகூட அபசகுனம் என்று புறத்தொதுக்கி மாற்று வசனங்களால் வாய் வாழ்த்தி அனுப்பிய மரபின் குழந்தைகள், "எங்க போறீங்க" என்ற குறைத் தமிழில் 'சகுனக் கொலை' செய்யப்பட்டதையெல்லாம் நெஞ்சாரப் பொறுத்தோமே?

மண்மீட்க மாண்டவனின் மனைவி பொட்டில்லாமல் எதிரே வந்தால் மட்டும் போன காரியம் விளங்காமல் போய்விடுமல்லவா பெரியவர்களே? அந்நியனிடம் என்றால் ஆச்சாரம் கூட அடகில்தானோ?

"மோசமான ஆட்சியினாலும், முரட்டு சர்வாதிகாரத்தாலும் வீதிகளில் குருதி வழிய தெறித்தோடிய எல்லா உலக தேச "முன்னாள்" தலைவர்களும், தமது பொற்காலங்களில் புகழ்ந்தேத்திய "சொந்த மக்களினாலேயே" புரட்டிப் போடப்பட்டவர்கள் என்ற பேருண்மையை அசைபோடக் காத்திருக்கின்றது காலத்தின் குரல்வளை! ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதல் காதல் காதல்...

நி.தர்ஷனோதயன்
வைத்திய அதிகாரி, மாவட்ட ஆயுள் வேத வைத்தியசாலை, மன்னார்

காதலர்கள் பிரிந்தார்கள், 'லவ் பெயிலியர்' என்று பலரும் பேசுகிறார்கள். உண்மையான காதலுக்கு நல்ல நட்பு மட்டுமே அடிப்படையாக இருக்க வேண்டும். எனினும் காதல் இப்படித்தான் வரவேண்டும் என்று நியதி ஏதும் இருக்கிறதா? நாங்கள் செய்வதெல்லாம் காதலில்லையா? என்று பலர் பொருமித் தள்ளலாம். காதல் தோன்றும் விதத்தை வரையறுப்பது சற்றுக் கடினம் தான். ஆனால் அது வரக் கூடாது என்று யாராலும் சொல்ல முடியாது.

"அவன் தொடர்ந்து ஒரு வாரமாக என்னையே பின் தொடர்ந்து வந்தான். கடிதம் கூடக் கொடுத்தான். அவனிடம் ஒரு ஏக்கம் தெரிந்தது. பார்க்கப் பாவமாக இருந்தது. சரியென்று காதலித்தேன்" என்று பல பெண்கள் சொல்கிறார்கள். இது பரிதாபத்தின் அடிப்படையில் உருவான பரிதாபக் காதல். பரிதாப உணர்வோ, அனுதாப உணர்வோ வேறு ஏதேனும் ஒன்றோ உண்மையான காதலை உருவாக்கிவிட முடியாது.

அப்படி உருவாகக்கூடிய காதலின் ஆயுள் மிகக் குறைவானதே. காதலைப் பற்றிக் கவிஞர்கள், இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள் எல்லோருமே எழுதியிருக்கிறார்கள்; பேசியும் இருக்கிறார்கள்.

இலக்கிய அனுபவங்களைவிட அறிவியல் ரீதியான அணுகுமுறையே காதலில் முக்கியமானது. சமீபத்திய ஆராய்ச்சியாளர்கள் காதலையும் விட்டு வைக்காமல் நுணுகி ஆராய்ந்துள்ளார்கள்.

காதல் என்பது இதயம் சம்பந்தப்பட்டதா? மூளை சம்பந்தப்பட்டதா? உணர்வு சம்பந்தப்பட்டதா? என்று பார்த்தால், இவற்றையெல்லாம் விட புறத்தோற்றம் (பிஸிக்கல் அப்பியரன்ஸ்) தான் காதலுக்கு ஆதியும் அந்தமும் என்கிறார்கள் ஆய்வாளர்கள். அதிலும்கூட ஆணை விடப் பெண்ணுக்குத்தான் காதலில் புறத் தோற்றம் மிக முக்கியம் என்றும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

நிறம், மார்பளவு, உடல் வனப்பு, பொருளாதரம், நடத்தை போன்ற விடயங்கள் காதலிக்கப்படும் பெண்களின் அழகைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

காதலில் ஆண்களின் அழகைத் தீர்மானிப்பதில் அவரது நடை, உடை மற்றும் அந்தஸ்து, பொருளாதாரம் என்பன முக்கியமானவையாக இருக்கின்றன.

மனிதர்கள் வெளித்தோற்றத்தைக் கொண்டு ஏமாறுவது என்பது இயல்பான ஒன்று. அது காதலில் நடக்கிறது. பொய்யான தோற்றத்தைக் கண்டு அதை அலசி ஆராயாமல் அதில் மயங்குவதும் சகஜமானது. இந்த மயக்கம் நீங்கி அதிலிருந்து தெளிவடையும் மனிதர்கள்தான் இன்பம் அடைகிறார்கள். உண்மையை உணர்ந்து கொள்ளாதவர்களுக்கு இந்தச் சுகம் கிடைத்தாலும் அதனால் பயன் ஏதும் இல்லை என்பது அனுபவபூர்வமான உண்மை.

காமம், கோபம், மயக்கம் இந்த மூன்றின் உண்மையை உணர்ந்து எவனொருவன் அதிலிருந்து வெளிவருகிறானோ அவனுக்கு அனைத்துத் துன்பங்களும் தீரும் என்று கூறுகிறார் வள்ளுவர்.

# சகாய நிதிச் சங்கம் மீண்டும்செயற்படுமா?

இ.வரன்

வட்டுக்கோட்டையில் 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் 38 ஆண்டுகள் வட்டுக்கோட்டையிலும், 14 வருடங்கள் விசுவமடுவிலும், ஒரு வருடம் நலன்புரி நிலையங் களிலும், இரண்டு வருடங்கள் வவுனியாவிலுள்ள வங்கிகளின் ஆதரவில் அடைவு நகைகளை மீளக்கொடுத்தும் 55 வருடங்கள் நிறைவான சேவையைச் செய்துள்ளது.

10 ஆயிரத்து 400 அங்கத்தவர்களை இந்தச் சங்கம் கொண்டிருந்தது. 25 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் இங்கு கடமையாற்றினர். மிகச் சிறப்பான இயக்குநர் சபையொன்று துடிப்புடன் இயங்கியது. இவையெல்லாமே நாட்டில் நிகழ்ந்த போர் அனர்த்தங்களால் ஸ்தம்பித நிலையை அடைந்தன.

இறுதியாக இந்தச் சங்கம் வன்னியில் இயங்கிக் கொண்டிருந்தது. சகாய நிதிச் சங்கத்தின் அசையாச் சொத்தான வட்டுக்கோட்டையில் உள்ள தலைமைச் செயலகக் கட்டடத்தில் இப்போது பொலிஸ் நிலையம் இயங்கி வருகி றது. அதனைத் திரும்பப் பெறுவதற்கான முயற்சிகள் பிரதேச சபையால் எடுக்கப்படுகின்றன.

வன்னியில் ஏற்பட்ட பரபரப்பான சூழ்நிலைகள், விமானத் தாக்குதல்கள் மற்றும் எறிகணைத் தாக்குதல்களுக்கு மத்தியில் சங்கத்தின் உடமைகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற பேரவா இதன் ஸ்தாபகர் கி.ஆனந்த ராசாவிடம் தணியவில்லை.

நலன்விரும்பிகளின் உதவியுடன் கிடைத்த வாகனங்கள் மூலம் ஒவ்வொரு இடமாக இவை எடுத்துச் செல்லப்பட்டன. ஆனால் இறுதியில் அடைவு நகைகளைத் தவிர ஏனையவை இழக்கப்பட்டன. இறுதிக்கட்டத்தில் பல மில்லியன் ரூபா பெறுமதியான நகைகள் இராணுவத்தினருக்குக் காட்டப்பட்டன. அவர்கள் பலத்த சந்தேகம் கொண்டனர். ஆனால் உரிய சான்றாதாரங்களைச் சமர்ப்பித்ததால் அவர்களே அவற்றைப் பாதுகாப்புடன் வவுனியாவுக்கு அனுப்பி வைத்தனர்.

இப்போது தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு நகைகள் மீளளிக்கப்படுகின்றன. இந்தச் சங்கம் அங்கத்தவர்களுக்குப் பல சேவைகளை வழங்கியுள்ளது. அங்கத்தவர்களின் சேமிப்பு ஊக்குவிக்கப்பட்டது. அவர்களின் வீட்டு நிகழ்வுகளுக்குப் பண உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும் குறைந்த வட்டியில் கடன் வசதிகளும், அடைவு நகைகளுக்குப் பணமும் வழங்கப்பட்டன. இவை போன்று மற்றும் சேவைகளும் வழங்கப்பட்டன. இந்தச் சங்கத்தை மீள இயக்கும் நோக்குடன் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பொதுக்கூட்டம் ஒன்றுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# இலங்கையிலிருந்து சீனாவை இந்தியா உதைக்க வேண்டும்

**அமெரிக்காவின் முன்னாள் இராஜதந்திரியான வில்லியம் எச் அவேறி, ஆசிய மற்றும் தெற்காசிய அரசியல் குறித்து புதிய புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார். சீனாவுக்கு கெட்ட சகுனமாகவும் அமெரிக்காவின் கனவாகவும் விளங்கும், உலகின் அடுத்த வல்லரசு இந்தியா என்ற தொனிப் பொருளில் அவர் அந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார். அடுத்த வல்லரசாக வேண்டுமானால் இலங்கையில் இருந்து சீனாவை இந்தியா வெளியேற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதைப் பற்றி உத்ரா சௌத்திரி எழுதிய கட்டுரையின் தமிழ் மொழியாக்கம் புதினப் பலகையிலிருந்து தரப்படுகிறது.**

அணுவாயுதப் பரிசோதனையை புதுடிலலி மேற்கொண்டதனால் அமெரிக்காவுடனான அதன் உறவில் 1990களில் விரிசல் ஏற்பட்டது. அந்தக் காலப் பகுதியில் சென்னையில் அமெரிக்கத் தூதராகக் கடமையாற்றிய அமெரிக்காவின் முன்னாள் இராஜதந்திரியான வில்லியம் எச் அவேறி போன்ற மிகக் குறைவானவர்களே அமெரிக்க - இந்திய உறவுகள் தொடர்பாக நன்கறிந்து வைத்துள்ளனர்.

'சீனாவுக்கு கெட்ட சகுனம், அமெரிக்காவின் கனவு: அடுத்த பூகோள வல்லரசாக இந்தியா' எனத் தலைப்பிடப்பட்டு அவேறியால் எழுதப்பட்ட புதிய நூலில், உலகின் மிகப்பெரிய மற்றும் செல்வந்த நாடுகளுக்கிடையில் வளர்ந்து வரும் உறவுகள், தொடர்புகள் குறித்து விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூலில் சீனாவுக்கு எதிரான கருத்துக்களையும் அவேரி குறிப்பிட்டுள்ளார். அத்துடன் பாகிஸ்தான், மியான்மர், இலங்கை போன்ற நாடுகளுடன் அந்தப் பிராந்தியத்தில் சீனா எவ்வாறு தனது செல்வாக்கை அதிகரித்து வருகின்றது என்பதை விளக்கியுள்ளார் அவர். சீனாவின் இந்த நடவடிக்கைக்குத் தக்க பதிலை இந்தியா வழங்க வேண்டும் என்பது அவரது வாதமாக உள்ளது. இந்தியாவின் அயல் நாடுகளில் சீனா தனது தலையீடுகளை அதிகரித்து வருகிறது. சிலநேரங்களில் அதற்காகத் தனது அதிகாரத்தையும் பயன்படுத்தி வருகின்றது.

தென்கிழக்காசிய நாடுகளுக்கான கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள இந்தியா மற்றும் பெரும்பாலான நாடுகள் சீனாவுடன் முரண்பாடுகளைக் கொண்டுள்ளன. இந்தியாவானது தனது அயல் நாடுகளின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார விடயங்களில் செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் சீனாவின் பிராந்திய வளர்ச்சிப் போக்குக்கு எதிராகப் பதிலளிக்க வேண்டும் என அவேறி தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கை மீதான சீனாவின் அதிகரித்த செல்வாக்குத் தொடர்பாக இந்தியா உடனடியாகக் கவனத்தில் எடுக்கவேண்டும். இலங்கை விவகாரத்தில் [illegible] இந்தியா எதுவும் செய்ய முடியாமல் போவதைத் தவிர்க்க இது உதவும்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பான சீனக் கொள்கைக்கு, பனிப் போர்க் காலத்தில் சோவியத் யூனியனால் பின்லாந்து அடிமைப்படுத்தப்பட்ட வரலாற்றுச் சம்பவத்தை அவேறி எடுத்துக்காட்டியுள்ளார்.

இந்தியாவின் தென் கிழக்குக் கரையோரத்தில் அமைந்துள்ள, தென்னாசிய வர்த்தகத்தில் கேந்திர முக்கிய இடம் வகிக்கும் இலங்கையின் அம்பாந்தோட்டையில் வெற்றிகரமான புதிய துறைமுகம் ஒன்றை அமைக்கச் சீனா எவ்வாறு மில்லியன் கணக்கான நிதியை முதலீடு செய்துள்ளது என்பதை அவேறி தனது நூலில் விரிவாக விளக்கியுள்ளார். சீனாவின் இந்த நடவடிக்கை தெற்காசியப் பிராந்தியத்தை மீளமைத்துள்ளது. அத்துடன் அயல் நாடுகளுடனான தனது உறவில் இந்தியா ஆதிக்கம் செலுத்த வேண்டிய நிலை பற்றி சிந்திப்பதற்கான நிலையையும் ஏற்படுத்தி உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சீனா தற்போது பாகிஸ்தான், பங்களாதேஷ், மியான்மர் போன்ற நாடுகளில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்து வருகின்றது. அத்துடன் நேபாளத்தில் ரயில் பாதைகளை அமைப்பதற்கான திட்டத்தையும் சீனா முன்னெடுக்கிறது.

அவேறி போன்ற ஆய்வாளர்களின் வாதத்தின் படி, இவ்வாறான சீனத் திட்டங்கள் இந்தியாவுக்கு சினத்தை ஏற்படுத்துகின்றன. இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்துக்கு அச்சுறுத்தல் விளைவிக்கக் கூடிய 'முத்துமாலை' திட்டத்தின் மூலம் சீனா இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது செல்வாக்கை விரிவுபடுத்தி வருவது தொடர்பாக ஆய்வாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

1991ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கேற்ப அதன் பூகோள அரசியல் செல்வாக்கானது பொருத்தமான வளர்ச்சியை எட்டவில்லை என அவேறி கவலை தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும், முன்னைய புஷ் நிர்வாகம் போன்று தற்போதைய ஒபாமா நிர்வாகமும் இந்தியாவுடன் நீண்ட கால மூலோபாய கூட்டு நடவடிக்கைக்கான முதலீட்டை மேற்கொண்டுள்ளதா என்பது தொடர்பாகச் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் அவேரி கூறுகிறார். அதற்கும் அப்பால், அமெரிக்காவானது ஆசியாவை முன்னுரிமைப்படுத்துகின்றது எனப் பிரகடனப்படுத்தும் அதேவேளையில் சீனா அங்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதையும் அது அடையாளங் கண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

பிரிட்டன் போன்று இந்தியா வளரவில்லை. அமெரிக்க நலன்களுக்காக இந்தியா ஒரு லெப்ரினன்ட் போல் பணியாற்றும் என நம்பும் எந்தவொரு அமெரிக்க கொள்கை வகுப்பாளர்களும் முழுமையான அறிவற்றவர்கள் என்றே கருதப்படவேண்டும் என்று அவேறி கூறுகிறார்.

இந்தியாவானது தனது பொருளாதார வெற்றிகளை உண்மையான பூகோள வல்லரசாக மாறுவதற்காகப் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் ஆலோசனை சொல்கிறார்.

இப்போதைக்கு பொதுவான நலன்களை அதாவது விரிவான முன்னேற்றமடைந்த துறை சார் நலன்களைத் தேடிக்கொள்வதாகவே இந்திய - அமெரிக்க உறவு இருக்கிறது எனக் குறிப்பிடும் அவேறி, இதைவிட, ஒத்துழைப்பு வழங்குவதற்கான விருப்பத்தை இந்தியா வழங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியாவானது ஆங்கிலோ - அமெரிக்க உறவில் கைக்கொள்ளப்பட்ட ஜனநாயகம், மனித உரிமைகள், சட்ட ஆளுமை, திறந்த சந்தைப் பொருளாதாரம் போன்ற அதே விழுமியங்களையே கொண்டுள்ளது. எனவே வலுவான இந்திய - அமெரிக்க கூட்டானது வேரூன்றக்கூடிய நிலையில் உள்ள போதிலும், 'காலனித்துவ அடிமைத்தனம்' போன்று இணையத்தளங்கள் ஊடாக அமெரிக்க நிறுவனங்களுக்கு அடிமட்ட விலையில் இந்தியா தனது தகவல் தொழில்நுட்ப அறிவுத்திறனை விற்கிறது" என்று அவேறி தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் தொழிற்சாலைகளுடன் கூடிய அமெரிக்க நிறுவனங்களுக்கான செயல் திறனை இந்திய நிறுவனங்கள் அதிகரித்து வருவதாகவும் அவேறி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் இந்தியா தனது பாதுகாப்பு விடயங்களில் கூடிய கவனம் எடுக்க வேண்டும் எனவும் அவேறி மீள வலியுறுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தியும் புத்தியும்

ஒரு திருடன் ஒரு வீட்டுக்குள் போய் திருட வேண்டும் என்று திட்டம் போட்டான்.

இருட்டியதும் தான் போய் திருட வேண்டும். ஆனால் இரவானால் வாசல் கதவைப் பூட்டி உட்பக்கம் பூட்டுப் போட்டு விடுவார்களே...! என்ன செய்வது... எப்படி வீட்டுக்குள்ளே போவது? என இவன் யோசித்தான். ஒரு முடிவுக்கு வந்தான்.

''சரி பகல் நேரத்திலேயே யாருக்கும் தெரியாமல் அந்த வீட்டுக்குள்ளே போயிடுவோம்.... அங்கே போய் எங்கேயாவது ஒளிந்து கொள்வோம் இருட்டும் வரைக்கும் பேசாமல் இருப்போம்.

இரவு எல்லோரும் தூங்கியதற்குப் பின் மெல்லமாய் அலுமாரியைத் திறந்து இருக்கிற அனைத்தையும் எடுத்துக்கொண்டு ஓடி வந்துவிடலாம்.'' என்று திட்டம் போட்டான்.

அதே மாதிரி.... ஒரு நாள் மத்தியானத்துக்குப் பின்னர் அந்த வீட்டுக்குள்ளே மெதுவாக நுழைந்தான்.

நுழைந்தவன் எங்கே ஒளியலாம் என்று பார்த்தான். வலது பக்கம் ஓர் அறை இருந்தது. உள்ளே போனான். அது படுக்கை அறை. அங்கே ஒரு கட்டில் இருந்தது. அதற்கு அடியில் போய் பதுங்கிக் கொண்டான்.

''இரவானதும் எனது வேலையை ஆரம்பிப்போம், அதுவரைக்கும் பொறுமையாய் இருக்க வேண்டும்'' என்று பேசாமல் வாயை மூடிக்கொண்டு இருந்தான்.

அதிக நேரம் கழித்து வெளியே போயிருந்த வீட்டுக்காரன் திரும்பி வந்து சாப்பிட்டுவிட்டு மின்குமிழை நிறுத்திவிட்டு படுத்தான்.

நடு இரவு... விடிவிளக்கு லேசாக எரிந்து கொண்டிருந்தது. வீட்டுக்காரன் லேசாகக் கண்விழித்தான். கட்டிலுக்கு எதிரில் ஒரு கண்ணாடி. அதிலே பார்த்தான். கட்டிலுக்கு கீழே ஒரு திருடன் ஒளிந்திருப்பது தெரிந்தது.

உடனே அவன் 'திருடன் திருடன்' என்று சத்தம் போடவில்லை. யோசித்தான்... மேசையில் இருக்கிற கத்தியை கையில் எடுத்து வைத்துக் கொள்வோமா? என்று.

இந்தச் சந்தர்ப்பத்தில் கத்தியை உபயோகப்படுத்துவதை விட புத்தியை உபயோகப்படுத்துவது தான் சாமர்த்தியமானது என்று நினைத்தான். உடனே அதன்படி செயற்பட ஆரம்பித்தான்.

எதையும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் மிகவும் சர்வ சாதாரணமாக தன் மனைவியிடம் பேச ஆரம்பித்தான்... மனைவியும் புத்திசாலி... அதனால் அவளும் கணவன் கேட்ட கேள்விக்குப் பொருத்தமாகப் பதில் சொன்னாள். இவன் கேட்டான்; '' இதோ பார்.. நமக்குக் குழந்தை பிறந்தா அதற்கு கிருஷ்ணமூர்த்தி என்றுதான் பெயர் வைக்க வேண்டும்'' என்றார்.

''அதெல்லாம் முடியாது... ஆம்பிளைப் பிள்ளையாய் இருந்தால் ஏகாம்பரம் - பொம்பிளைப் பிள்ளையாய் இருந்தால் பங்கஜவல்லி என்றுதான் பெயர் வைக்க வேண்டும். இவைதான் உங்கள் மாமனார் - மாமியார் பெயர். அந்தப் பெயர்களைத்தான் வைக்க வேண்டும்'' என்றார் அந்த அம்மா.

''அதெல்லாம் முடியாது... நான் முடிவு செய்துவிட்டேன் கிருஷ்ணமூர்த்தி!'' என்று கத்தினான் அவன்.

''இல்லை... ஏகாம்பரம் அல்லது பங்கஜவல்லி!'' என்று கத்தினாள் அவள்.

வாதம் முத்திப்போய் விட்டது.

'கிருஷ்ணமூர்த்தி - கிருஷ்ணமூர்த்தி - கிருஷ்ணமூர்த்தி' என்று அவன் கத்தினான்.

'ஏகாம்பரம் - பங்கஜவல்லி -ஏகாம்பரம் - பங்கஜவல்லி' என்று அவள் கத்தினாள்.

ஒரே சத்தமாகியது!

இதைக்கேட்டதும் பக்கத்து வீட்டில், எதிர் வீட்டில் இருந்தவர்கள் எல்லாம் எழுந்து ஓடி வந்து இவர்களின் வீட்டுக்கதவைத் தட்டினார்கள்.

இவர்கள் மெதுவாக எழுந்துபோய் கதவைத் திறந்தார்கள். ''என்ன... இந்த இரவு வேளையிலே எங்களை ஏன் கூப்பிட்டீர்கள்? யாருக்கு என்ன நடந்தது?'' என்று கேட்டார்கள். பக்கத்து வீட்டு கிருஷ்ணமூர்த்தி- எதிர்த்த வீட்டு ஏகாம்பரம், பங்கஜவல்லி -எல்லோரும்!

''அடடே! உங்களைக் கூப்பிடவில்லை. குழந்தைக்குப் பெயர் வைக்கிறது பற்றி எங்களுக்குள் சண்டை வந்துவிட்டது. அதுதான் விஷயம். வேண்டும் என்றால் இதோ கட்டிலுக்கு அடியில் ஒளிந்திருக்கிற திருடனைக் கேட்டுப் பாருங்கள்.. அவன்தான் இதற்குச் சாட்சி!'' என்றார். உடனே எல்லோரும் விஷயத்தைப் புரிந்து கொண்டு திருடனைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தார்கள். நெருக்கடியான நேரங்களில் பதறாமல் புத்திசாலித்தனமாகச் செயற்பட வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் இந்தக் கதை.

புத்திசாலித்தனமாகச் செயற்படுகின்ற ஒரு குடும்பத் தலைவி இருந்தாள். அவள் என்ன செய்வாள் தெரியுமா? எல்லோரும் இரவானதும் வீட்டை உட் பக்கமாய் பூட்டிவிட்டுப் படுப்பார்கள்... ஆனால் அந்த அம்மா என்ன செய்வார்கள் என்றால் வீட்டை வெளிப்பக்கமாய் ஒரு பூட்டுப் போட்டு பூட்டுவார்கள். எதிர் வீட்டுக்காரரிடம் சொல்லித் தினமும் இப்படி பூட்டிவிட சொல்லுவார்கள்.



''ஏன் இப்படி செய்கிறீர்கள்.. திருடன் சுலபமாக உள்ளே வரக்கூடாது என்பதற்காகவா?'' என்று கேட்டபோது.

''இல்லை. சுலபமாக வெளியே போய் விடக் கூடாது என்பதற்காக.'' என்றார்.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்றேன்.

''ஆமாம் இவருக்கு அந்தப் பழக்கம் உண்டு'' என்று தன் வீட்டுக்காரரைக் காட்டினாள். பக்கத்து வீடுகள் பத்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தன் வீட்டைப் பூட்டி வைக்கிறார் இது ஒரு பெரிய விஷயம் இல்லையா?

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# அவனின்றி அணுவும் அசையாது என உணர்த்திய உலவிக்குள சித்திவிநாயகர்

(சென்றவாரத் தொடர்ச்சி )



அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் வயல் வெளியில் கோயில் கொண்டு அருள் பாலிக்கும் உலவிக்குளம் சித்தி விநாயகர் மீது நம்பிக்கை வைத்து தூய சிந்தையோடு வழிபடுவோர் எண்ணிய வண்ணம் காரியம் கைகூடும் என்பதும் ஆலயத்தைச் சாட்டாக வைத்து அடாவடித்தனம் செய்வோர் வெளிப் படையாகவே ஒழிக்கப்படுவர் என்பதும் அடியவர்களின் மிகுந்த நம்பிக்கையாகும்.

1967 இல் இருந்து 18 வருடங்கள் நித்திய பூசையோடு மூடப்பட்டிருந்த நிலையில் வீட்டுக் காவலில் இருந்த விநாயகர் அதற்கு உடந்தையானவர்களை உரிய காலப்பகுதியில் வருத்தி உணர வைத்ததோடு, ஊரையே கூட்டி ஒரு வருட கால இடைவெளியில் முழுமையான திருப்பணி வேலையை நிறைவு செய்து புதிய ஆலயமாக மிளிர்கின்றமை சித்தி விநாயகனின் அருள் வியாபகத்தை எடுத்துக் காட்டுகின்றது. அத்தோடு ''அவன் இன்றி அணுவும் அசையாது'' என்ற மூல உண்மையை முழுமையாக ஊருக்கே உணர்த்தியது.

அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகரின் வருடாந்த உற்சவமும் கரணவாய் மூத்த விநாயகரின் வருடாந்த உற்சவமும் ஒரே காலப் பகுதியில் நடைபெறுவது உண்டு. இரண்டு கோயில்களின் திருவிழாவும் யாழ். மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவு சிறப்பாக நடைபெறுவது வழமை; பெரிய மேளம் (நட்டுவ மேளம்) சின்ன மேளம் (சதுர்க்கச்சேரி) வாண வேடிக்கை, சிகர அலங்காரம், மின்விளக்குச் சோடனைகள் எனப் பல்வேறு வகையான ஆடம்பரங்களுடன் நடைபெறுவது உண்டு. திருவிழா ஆரம்பமானால் இளைஞர்களுக்கும் இசைப் பிரியர்களுக்கும் கொண்டாட்டம். இரண்டு கோயில்களிலும் தனித்தனியாக திருவிழா உபயகாரர்களுக்கு இடையே போட்டியாக திருவிழா நடைபெறுவதோடு இரண்டு ஊர்களுக்கும் இடையே ஒன்றை முந்தி ஒன்று என்ற நிலையில் திருவிழாக்கள் நடைபெறுவதும் உண்டு.

**உலவிக்குளம் சித்தி விநாயகர் மீது நம்பிக்கை வைத்து தூய சிந்தையோடு வழிபடுவோர் எண்ணிய வண்ணம் காரியம் கைகூடும்**

எத்தனை சோடி நட்டுவ மேளம், எத்தனை சோடி சின்ன மேளம், எவ்வளவு வாண வேடிக்கை என்பதே பேச்சாக இருக்கும் இரவுத் திருவிழாவில் சுவாமி வீதி உலா வந்து வடக்கு வீதியில் தரித்து நிற்கும்போது மேளக் கச்சேரியுடன் வாணவேடிக்கையும் நீண்டநேரம் நடைபெறும் சின்னமேளமும் பிரசன்னமாகி சில பாட்டுக்களை பாடும். குறித்த காலப்பகுதி திருவிழாக்களில் "கிளவி கொட்டு" "கிளவன் கொட்டு'' என்ற வகை இரும்பு வளையங்கள் பல பூட்டப்பட்ட பெரிய மூங்கில் றொக்க ட்டுக்களில் உருவாக்கப்பட்ட வாணங்கள் ஏற்றப்படுவது இந்த வாணங்களின் தள்ளுவிசைத் தத்துவம் தான் நவீன றொக்கட்டுக்கள் என்பர். இந்த வாணங்கள் செல்ல வேண்டிய திசை மாறி வீடுகளின் சுவர்களைத் தாக்கி இடிப்பதும் அதனால் சில அகால மரணங்கள் ஏற்பட்டதும் உண்டு.

1970 இற்கு முந்திய காலப்பகுதியில் அவசர காலச் சட்டமோ பாதுகாப்புத் தரப்பினரின் நடமாட்டமோ இயல்பு வாழ்க்கையில் இல்லை. இரவுத் திருவிழா அடுத்த நாள் காலை 7 மணி வரையும் நடைபெறுவதும் உண்டு ஆலயத்தில் கொடியேறி விட்டால் ஊர்முழுக்க திருவிழாக் கோலாகலம்.

1986 இல் கு.விக்கினராசா (விக்கினம்) தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இயல்பு நிலையில் நித்திய, நைமித்திய கிரியைகள் நடைபெற்று வந்த காலப்பகுதியில் விக்கினம் புலம் பெயர்ந்து வெளிநாட்டுக்கு சென்ற பின்னர் விடுதலைப் பேராளிகளின் வழிப்படுத்தலில் ஆலயத்தை வழிபடுவோர்களை உள்ளடக்கிய பரிபாலன சபை உருவாக்கப்பட்டு கே.கந்தையா தலைமையில் சிலகாலம் செயற்பட்டது. அதை அடுத்து க.சத்தியமூர்த்தி மாஸ்ரர் தலைமையில் ஆலயச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

மீள் குடியேற்றத்தின் பின்னர் ஆ.குமரகுரு க.முத்துலிங்கம் ஆகியோரும் நிர்வகித்தனர். தற்பொழுது கிராம அலுவலர் இ.கணேசலிங்கம் மற்றும் ச.ஞானசேகரம் ஆகிய இருவரும் ஆலயத்தின் பரம்பரை உரிமையாளரும் நிதி திட்டமிடல் அமைச்சின் ஒய்வுபெற்ற பிரதிச் செயலருமான க.சண்முகலிங்கத்தின் பிரதிநிதிகளாக இருந்து ஆலய முகாமைத்துவப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இறுதியாக 2007 -09-16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஆலயத்தின் பூசகர்களாக அந்தணர்கள் பொறுப்பேற்ற காலப் பகுதியில் இருந்து அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் ஸ்தாபகரும், ஆகம வித்தகருமான சிவஸ்ரீ.ச.குமாரசுவாமி குருக்களின் சந்ததியினர் ஆலயக் கிரியைகளை மேற்கொண்டு வருகின்றனர் தற்பொழுது பிரதம பூசகராக பிரம்மஸ்ரீ கு.வை. விருத்த கிரிசுவரக்குருக்கள் சிறப்புற பணியாற்றி வருகின்றார்.

ஆலயத்தில் வருடாந்த உற்சவங்கள் ஆடி மாதத்தில் 11 தினங்கள் சிறப்பானமுறையில் நடைபெறும் ஆடி அமாவாசையை அடுத்து ஐந்தாம் நாள் கொடியேறி ஆடிப் பூரணையில் தீர்த்தோற்சவம் நடைபெறுகின்றது. ஆலயத்துக்கு தெற்கு புறத்தில் நான்கு புறமும் பொழி கல்லால் படி அமைக்கப்பட்ட தீர்த்தக் கேணியில் விநாயகப் பெருமான் தீர்த்தமாடி அருள் பாலிப்பது உண்டு.

மாதந்தோறும் விநாயகர் சதுர்த்தி உற்சவங்களும், ஆவணிச் சதுர்த்தியும் சிறப்பான அபிஷேக ஆராதனையுடன் நடைபெறுகிறது. பிள்ளையார் பெருங்கதை விரதமும், வருடாந்தம் கந்தப்புராண படனமும், நவராத்திரி, கந்த சஷ்டி, திருவெம்பாவை; உற்சவமும் மற்றும் தைப்பொங்கல் சித்திரை வருடப் பிறப்பு, மாதப்பிறப்பு விசேட பூசை அபிஷேகங்களும் நடைபெற்று வருகின்றன.

**ஞானி**

ஆலயத்தின் தேர்க் கொட்டகை பல லட்சம் ரூபா செலவில் அண்மையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் தேர் ஓடும் வீதியை திருத்தி அமைப்பதற்கும் ஆலயத்திற்கான இராஜ கோபுரம் அமைப்பதற்கும் அடியவர்களும் ஆலய நிர்வாகிகளும் உள்ளூரத் தீர்மானித்துள்ளனர்.

விநாயகர் திருவருளால் திருப்பணி வேலைகள் கைகூடலாம். உலவிக்குளத்தான் அருள்பெற்று உய்வோமாக. ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு அரசியல் பிழைப்பு நடத்தவே தமிழர் பிரச்சினை பயன்படுகிறது

கொழும்பு,ஜன.26

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்போம் என்ற உணர்வு அரசிடம் எள்ளளவேனும் இல்லை. அரசியல் பிழைப்பு நடத்துவதற்கே தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தி காலத்தைப் போக்குகிறது என்று நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரட்ன குற்றஞ்சாட்டியுள்ளார்.

உத்தேச செனட்சபை உட்பட சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னரே செனட் சபை அமைக்கப்படவேண்டும். அமெரிக்காவில் இந்த விதிமுறைகளுக்கமையத்தான் செனட்சபை அமைக்கப்பட்டுள்ளது.

**ஜனாதிபதி மஹிந்த பொய் உறுதி மொழிகளை அள்ளி வீசுகின்றார். இது இந்தியாவிற்கு நன்கு தெரியும். இந்திய அரசின் கனவாக இருக்கும் நுரைச்சோலை, சம்பூர் உட்பட முக்கியமான சில திட்டங்களை இழக்கநேரிடும் என்ற அச்சம் அந்நாட்டை ஊமையாக்கிவிட்டது.**



தேசிய இனப்பிரச்சினைக்கு என்ன செய்கின்றோம், எப்படிச் செய்கின்றோம் என எதுவும் புரியாமல் குடிகாரனைப்போல் தள்ளாடுகிறது அரசு.

13 பிளஸ் என்கின்றனர். இல்லை.... இல்லை... செனட் சபை என்கின்றனர். எதனை நாம் நம்புவது?

மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னரே செனட் சபை அமைக்கப்படவேண்டும். இந்த நடைமுறையையே அமெரிக்காவும் பின்பற்றியது. இவ்வாறு இல்லாமல் ஆரம்பமே செனட் சபையாக இருந்தால் அதனால் ஒன்றையும் சாதித்துவிட முடியாது என்பதே யதார்த்தபூர்வமான உண்மையாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜாதிகஹெல உறுமயவின் தாளத்திற்கு ஆடும் ஒரு கைப்பொம்மையாக செயற்படுகின்றார்.

ஜனாதிபதி மஹிந்த பொய் உறுதிமொழிகளை அள்ளி வீசுகின்றார். இது இந்தியாவிற்கு நன்கு தெரியும். இந்த உண்மையை வெளியே கூறினால் இந்திய அரசின் கனவாகவிருக்கும் நுரைச்சோலை, சம்பூர் உட்பட முக்கியமான சில திட்டங்களை இழக்கநேரிடும் என்ற அச்சம் அந்த நாட்டை ஊமையாக்கிவிட்டது - என்றார். (ச-சி)

# பிறக்காத குழந்தைக்கு பெயரிடுவதே 13+ பேச்சு

## ரங்கா எம்.பி. கருத்து

கொழும்பு,ஜன.26

13ஆவது திருத்தத்தை முதலில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்குப் பின்னர் 13 பிளஸ் பற்றி பேசலாம். 13 பிளஸ் பற்றி பேசிக் கொண்டிருப்பது பிறக்காத குழந்தைக்குப் பெயர் வைப்பதைப் பற்றிப் பேசுவதற்கே ஒப்பானது என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள அமெரிக்காவின் பிரதி வெளியுறவுச் செயலர் தோமஸ் ஓ. மெரியா, தெற்காசியாவின் வெளிநாட்டலுவல்கள் விவகாரங்களுக்கான அதிகாரி லெஸ்லி பி.டெய்லர் ஆகியோருடன் நடத்திய பேச்சின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

13ஆவது அரசமைப்புத் திருத்தம், 13 பிளஸ், தமிழர்களுக்கான நிரந்தர அர சியல் தீர்வு ஆகியவை குறித்து இந்தச் சந்திப்பின்போது கருத்துப் பரிமாற்றம் செய்யப்பட்டது.

13ஆவது அரசமைப்புத் திருத்தம் என்பது இப்போது எம்மால் சுட்டிக்காட்டக் கூடிய ஒரு விடயம். அது முதலில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அந்த நடைமுறையின் பின்னரே நாம் இதர விடயங்கள் பற்றிப் பேசலாம்.

இலங்கையில் நிரந்தர அமைதித் தீர்வொன்று ஏற்படவேண்டுமென்ற தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு அமெரிக்காவும் முழுமையான ஆதரவை வழங்கவேண்டும். இரு தசாப்த கால போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்பவும் உதவ வேண்டும்- என்றார். (ச-சி)

## ஜானக பெரேரா கொலை;

# இரு சந்தேக நபர்களுக்கும் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு,ஜன.26

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஜானக பெரேரா உள்ளிட்ட 29 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை எதிர்வரும் மார்ச் மாதம் 26 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கின் மேலதிக விசாரணைகள் குறித்து எதிர்வரும் மார்ச் 26 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று நீதிவான் சுனந்த குமார ரத்நாயக்க தெரிவித்தார்.

மதவாச்சி, இரிகொல்லாவ பிரதேசத்தைச் சேர்ந்த மொஹமட் ஓமார் அக்தார் மற்றும் அப்துல் குத்தூஸ் ஆகியோருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இவர்களுக்கு எதிராக தலா 48 குற்றச்சாட்டுக்களை சட்டமாஅதிபர் திணைக்களம் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஒரு கையின்றி பஸ் செலுத்திய சாரதி கைது

கொழும்பு,ஜன.26

ஒரு கையை இழந்த நிலையில் பாடசாலை வான் செலுத்திச் சென்ற சாரதி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது சாரதிக்கு ஒரு கை இல்லாத விடயம் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன் அவருடைய சாரதி அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஏக்கல - கொட்டுகொட பகுதியில் இருந்து மாணவர்களை பாடசாலை வானில் இவர் ஏற்றிவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)



நீர்கொழும்பு நகர மத்தியில் அமைக்கப்பட்டுள்ள நடைபாதை வர்த்தக நிலையங்கள் நீர்கொழும்பு பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அகற்றப்பட்டன.

## ஜனாதிபதியின் பாக். பயணம் பிற்போடப்பட்டது

கொழும்பு,ஜன.26

அடுத்த மாதத் தொடக்கத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாகிஸ்தானுக்கு மேற்கொள்ளவிருந்த பயணம் பிற்போடப்பட்டுள்ளது என்று கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 6ஆம், 7 ஆம் திகதிகளில் ஜனாதிபதி பாகிஸ்தான், சிங்கப்பூர், மியான்மார் ஆகிய நாடுகளுக்கான பயணம் மேற்கொள்வார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில் ஜனாதிபதியின் பயணம் பிற்போடப்பட்டுள்ளது எனவும், எதிர்வரும் 9 ஆம் திகதிக்குப் பின்னரே புதிய பயணத் திகதி தீர்மானிக்கப்படும் என்று பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் அரசியல் குழப்பங்கள் காரணமாகவே ஜனாதிபதியின் பயணம் பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கை மீது விசாரணை கோரும் மாநாட்டில் சிரியா கடும் எதிர்ப்பு

கொழும்பு,ஜன.26

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா நிபுணர்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் ஸ்டீபன் ரட்னர் வலியுறுத்திய வட்டமேசை மாநாட்டுக்கு இலங்கை அழைக்கப்படவில்லை. எனினும் இலங்கைக்கு ஆதரவாகச் சிரியா கடும் எதிர்ப்பை அங்கு பதிவு செய்தது.

ஜெனிவா அக்கடமியில் கடந்த வாரம் இடம்பெற்ற இந்த மாநாட்டை மனித உரிமைகள் கண்காணிப்பகமே ஏற்பாடுகளைச் செய்திருந்தது. இந்த மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டவர்கள் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இதனால் அழைப்பு வழங்கப்படாமல் இலங்கை இந்த மாநாட்டில் பங்கேற்க முடியாமல் போனது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜெனிவாவில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு இந்த வட்டமேசை மாநாட்டுக்கு அழைப்புவிடப்படவில்லை. இதனால், இலங்கை அனைத்துலக போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்று கோரப்பட்ட இந்த மாநாடு குறித்து தம்மால் கருத்து வெளியிட முடியாது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

**ஐ.நா. நிபுணர்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் ஸ்டீபன் ரட்னர் நடத்திய வட்டமேசை மாநாட்டுக்கு இலங்கை அழைக்கப்படவில்லை.**

அடுத்தமாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரை முன்வைத்து, ஜெனிவாவில் இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப்படம் திரையிடப்படுவது உள்ளிட்ட மேலும் சில நிகழ்வுகள் இடம்பெறக் கூடும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கை மற்றும் சிறிலங்காவின் கொலைக்களங்கள் ஆவணப்படம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து அனைத்துலக போர்க்குற்ற விசாரணைக்கு அழுத்தம் கொடுப்பதை இலக்காக வைத்தே இந்த வட்டமேசை மாநாடு நடத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதரகம் இந்த மாநாட்டைத் தடுப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டபோதும் அது வெற்றியளிக்கவில்லை. இதையடுத்து இலங்கை அங்கு என்ன நடக்கிறது என்று உளவறிய சிரியாவின் பிரதிநிதியை அனுப்பியிருந்தது.

இலங்கையின் உளவாளியாக சிரியப் பிரதிநிதி புகுந்துள்ளதை அறிந்து கொண்ட மேற்குலக நாடுகளின் பிரதிநிதிகள் பலரும் இந்த மாநாட்டில் அதிகம் கருத்து வெளியிடாமல் இருந்ததாக ஆங்கில இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (ச)

# மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் போதா

## வாசுதேவ குற்றச்சாட்டு



கொழும்பு,ஜன.26

மாகாண சபைகளுக்கு போதியளவு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குற்றஞ்சாட்டியுள்ளார்.

மாகாண சபைகளுக்கு பல்வேறு வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன. சில மாகாணசபைகளை ஆளுநர்களே ஆட்சி செய்கின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் மாகாண சபை விவகாரங்களில் தேவையின்றி தலையீடு செய்கின்றார் என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சிறு குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கும் பொலிஸ் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்குவதில் தவறில்லை. காணி அதிகாரங்களை வழங்கும் போது மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் பொதுவான ஓர் ஆணைக்குழு நிறுவப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமன்றி ஏனைய சகல மாகாணங்களுக்கும் அதிகாரம் பகிரப்பட வேண்டும். இன, மத பேதமின்றி நாட்டின் சகல மக்களும் போரினால் பாதிக்கப்பட்டனர் என்று அவர் தெரிவித்தார்.

எனவே, நாட்டின் சகல இன மக்களுக்கும் நன்மை ஏற்படக்கூடிய எந்தவொரு தீர்வுத் திட்டத்துக்கும் ஆதரவளிக்கத் தயார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதலை நிறுத்தாவிட்டால் விளைவுகள் விபரீதமாகும்

## இந்திய அரசுக்கு கருணாநிதி எச்சரிக்கை

தமிழக மீனவர்களை தொடர்ந்து சிங்கள கடற்படையினர் தாக்கி வருவதை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் விளைவுகள் விபரீதமாகி விடும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி இந்திய மத்திய அரசுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



**தமிழக மீனவர்களை தொடர்ந்து சிங்கள கடற்படையினர் தாக்கி வருவதை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்த வேண்டும்.**

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள எச்சரிக்கை அறிக்கையில் தெரிவித்ததாவது:

இலங்கையில் உள்ள மீனவர்களாலும், சிங்களவர்களாலும் தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவதாக வருகின்ற செய்திகள், மத்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இலங்கைக்குச் சென்று, அமைதியை ஏற்படுத்திவிட்டேன், இனி தமிழக மீனவர்களுக்கு இலங்கையில் எத்தகைய தொந்தரவும் இருக்காது என்று உறுதியளித்து விட்டு திரும்பிய சூழ்நிலையில் சற்றும் எதிர்பாராதவிதமாக இலங்கைக் கடற்படையினரும், சிங்கள மீனவர்களும் தமிழக மீனவர்களை கடுமையாகத் தாக்கி, அராஜகம் புரிந்துள்ளனர் என்பது தமிழக மக்களுக்கு மிகுந்த கொதிப் பேற்றும் செய்தியாகும்.

அமைதி திரும்பும் என்று மத்திய அமைச்சர் கூறுவதும், அப்படி அவர் சொன்ன வாசகங்கள் அனைத்தும் கடல் காற்றிலேயே கரைந்து போவதும் தொடர் நடவடிக்கைகளாக இருந்து வருகிறது. எனவே, இனி பொறுப்பதில்லை என்ற முடிவுக்கு தமிழக மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

விளைவுகள் விபரீதமாவதற்கு முன்பு உடனடியாக இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு தாமதிக்காமல் தலையிட வேண்டும்,

தாமதத்தை பொறுத்துக் கொண்டு தமிழக மீனவர்கள், சிங்களவர்களாலும் சிங்கள இராணுவத்தினராலும் தாக்கப்படுகின்ற கொடுமையைப் பொறுத்துக் கொள்ள முடியாதென்று எச்சரிக்கிறேன்- என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.(வ)




செரண்டிப் சிறுவர் இல்லம் யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் ஊடாக விழிப்புலனற்ற சிறுவனுக்கு கண்பார்வை பெறுவதற்காக சத்திரசிகிச்சைக்கு நிதி வழங்கியது. செரண்டிப் சிறுவர் இல்லத் தலைவர் அரியகுட்டி கந்தசாமி சிறுவனுக்கு நிதியை வழங்குகிறார். சிறுவனின் தாய் மற்றும் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தலைவர் எஸ்.கனகசபை ஆகியோர் நிற்கின்றனர்.

## ஒளி கிடைக்குமா மண்டைதீவுக்கு

யாழ்ப்பாணம்,ஜன.26

மண்டைதீவுப் பிரதேசத்துக்கு இதுவரையும் மின்சாரம் வழங்காதது குறித்து பிரதேச மக்கள் விசனம்தெரிவித்துள்ளனர். இந்தப் பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்குவதற்காக ஏற்கனவே கடந்த ஒரு வருடத்துக்கு முன்பாக மின்கம்பங்கள் நடப்பட்டுளளன.

இவ்வாறு மின்கம்பங்கள் நடப்பட்டுப் பல நாள்களாகியும் மின்விநியோகம் இதுவரை காலமும் வழங்கப்படவில்லை.

இதேவேளை இந்தப் பிரதேசத்துக்கு அடிக்கடி செல்லும் அரசியல்வாதிகள் மற்றும் அமைச்சர்கள் கூட மக்களின் தேவைகளில் ஒன்றான மின்சார விநியோகத்தை ஏன் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது அங்கு சென்ற அரசியல் கட்சி ஒன்று மின்சாரம் உடனடியாக வழங்கப்படும் என்று மக்களுக்கு வாக்குறுதி வழங்கி மக்களின் வாக்குகளைச் சுருட்டிச்சென்றனர். ஆனால் இன்று வரைக்கும் மின்விநியோகத்தை ஏற்படுத்திக்கொடுக்கவில்லை. மக்களும் இருளின் மத்தியில் தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

(வ-17)

## யாழ். நூலகத்துக்கு ஒளிப்பட தொகுதி அன்பளிப்பு

இலங்கை றோட்டறிக்கழகத்தின் கண்டிக்கிளையும் லண்டன் கிளையும் இணைந்து யாழ்.பொது நூலகத்துக்கு வனவிலங்குகள் தொடர்பான ஒளிப்படக் கலைக்களஞ்சியத் தொகுதி ஒன்றை நேற்று Wild life Illustrated Encyclopaedia) அன்பளிப்புச்செய்யப்பட்டுள்ளது. (வ)

## கணிதபாட ஆசிரியருக்கு செயலமர்வு

தென்மராட்சி,ஜன.26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களில் கணித பாடம் கற்பிற்கும் ஆசிரியர்களுக்கான தரவட்டச் செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும்.

செயலமர்வுக்கு வரும் ஆசிரியர்கள் வகுப்பு ரீதியாக மாணவர் விவரம், வகுப்பு ரீதியான பாடத்திட்டம் எழுதப்பட்ட தவணைகள், ஒவ்வொரு வகுப்பிலும் கற்பித்தல் பாட அலகுப் பிரச்சினைகள் 27ஆம் திகதி நடைபெறவுள்ள சாதாரண தர நிலைய பரீட்சை விடைத்தாள்களும் புள்ளிகளும் போன்றவற்றைக்கொண்டு வருமாறு வலயக் கல்விட் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ம-207)

## யாழ்ப்பாணத்தில் இந்திய குடியரசு தினம்

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இந்திய குடியரசுத் தினம் இன்று வியாழக்கிழமை கொண்டாடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் இந்தியக் குடிமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும், காலாவதியாகாத வீசா அனுமதிப்பத்திரங்கள் உடையவர்களே நிகழ்வுக்கு அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

**யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்**
**கட்டட கூலிக்கு கேள்வி கோரும் விண்ணப்பம்**

பதிவு செய்யப்பட்ட கட்டட ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து எமது சங்கத்தின் முனீஸ்வரன் விற்பனை நிலையக் கிளைக் கட்டடத்தைக் கட்டிமுடிப் பதற்கான கூலி முழுவதற்குமான கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க விரும்புவோர் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு கட்டடம் தொடர்பான விவரங்களைப் பெற்றுக் கீழ்வரும் விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ எதிர்வரும் 15 . 02 . 2012 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

விண்ணப்பிப்போர் பின்வரும் வைப்புப்பணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

(1) மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் ரூபா-3000/=
(2) மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா-500/=

330,K.K.S.வீதி,
யாழ்ப்பாணம். பொது முகாமையாளர்
(சி/8204)

## ஹெரோயின் வைத்திருந்தவருக்கு மரண தண்டனை

தன்வசம் 3 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ள மருதானை பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு கொழும்பு மேல் நீதி மன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

கொழும்பு போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கடந்த 2007ஆம் ஆண்டு குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதன் பின்னர் சட்ட மா அதிபரால் சந்தேக நபருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த வழக்கு நீண்ட காலம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதன் பின் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ, மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஓய்வுபெற்ற முன்னாள் ஆசிரியை

**திருமதி தனபாக்கியலெட்சுமி பரராஜசிங்கம்**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்

ஆசிரியர் நலன்புரி கழகம்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

(13502) (6,7,10)

### அறிவாலயத்தின் அஞ்சலி



**நடராசா காசிவேந்தன்** (B.Com, M.A)
(முகாமைத்துவப்பணிப்பாளர் சமுர்த்தி மகாசங்கம் உடுவில்)
பொருளாளர் - அறிவாலயம்

அறிவாலயத்தின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றிய பொருளாளர் நடராசா காசிவேந்தனின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அறிவாலயம் இணுவில்**

(சி/8203) (45 -7 - 6)

### மரண அறிவித்தல்

**திருமதி தனபாக்கியலெட்சுமி பரராஜசிங்கம்**
(தம்பு மிஸ்)
(இளைப்பாறிய ஆசிரியை-யாழ். இந்து மகளிர் கல்லூரி)



மணியர்பதி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி தனபாக்கியலெட்சுமி பரராஜசிங்கம் கடந்த ஞாயிறு (22.01.2012) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தம்பு-ஞானமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வி யும் காலஞ்சென்ற கந்தையா பரராஜசிங்கத்தின் அன்பு மனைவியும், பாக்கியலட்சுமி (அவுஸ்திரேலியா), Dr. தம்பு குமாரசாமி (U.S.A), காலஞ்சென்ற கமலேஸ்வரி, தமரேஸ்வரி (France) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற Dr.லே.நடராஜா, விஜயலக்சுமி குமாரசாமி, தி. நடேசன், இ.ஜெகந்நாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2012) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணியர்பதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

தகவல்:
குடும்பத்தினர்.

(13478) (6,7,10)

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி பு.கந்தசாமி
அவர்களின் பாசமிகு மாமா

**பொன்னப்பா தம்பிராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், கொடிகாமம்.

**வீடு விற்பனைக்கு**

இராசாவின் தோட்டம், 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. மாலை 6.00 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 011 2365453

**உழவு இயந்திர வாகனம் விற்பனைக்கு**

பாவனையில் உள்ள 135 Model உழவு இயந்திரம் பெட்டியுடன் விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 1592712 (11565) (45-7-6)

**காணி விற்பனைக்கு**

மீசாலை வடக்கு, கோயிலா மனை, கொடிகாமம் என்னும் இடத்தில் 29¼ பரப்பு தென்னங் காணி விற்பனைக்குண்டு.
(சர்வாநந்தனின் காணி)
தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கம்
075 7063369 (13482) (45-7-6)

**காணி விற்பனைக்கு**

மருதனார்மடம், வலிகாமம் கல்வி வலய அலுவலகத்துக்கு அண்மையில் கிணற்றுடன் கூடிய 11 பரப்புக்காணி
தொடர்பு: 0777110513

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓரளவு மேகக்கூட்டத்துடன் காலநிலை இருக்கும்.

# பறவைகளை நேசியுங்கள்

## நூல் வெளியீட்டில் பேராசிரியர் வலியுறுத்து

''இயற்கையை நேசியுங்கள் இயற்கை அள்ளித் தந்த பறவைகளைத் தோழனாக்கிக்கொள்ளுங்கள்'' என்ற கருத்தை பேராசிரியர் என்.சண்முகலிங்கன் 'பொதுப்பறவைகள்' நூல் வெளியீட்டு விழாவில் வலியுறுத்தினர்.

''இலங்கையின் பொதுப் பறவைகள்' என்ற பறவைகளை அடையாளம் காண்பதற்கான கை நூல் வெளியீட்டு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் சிறுவர் மகிழ்வக இயக்குநர் ரி.மயூரன் தலைமையில் நேற்று முன்தினம் 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் அவர் மேலும்தெரிவித்ததாவது:


**பறவைகள் பறக்கும் அழகைக் காணும் போது மனதில் இருக்கிற சுமைகள் எல்லாம் தானாக விலகிப் போகும்.**

குழந்தைகள் மட்டுமல்ல சிறியோர் முதல் பெரியோர் வரை கல்வியாளர் தொட்டு அரசியல்வாதிகள் வரை இயற்கையை இரசிக்கிறார்கள்.

இயற்கை அள்ளித் தந்த இந்தப் பறவைகள் பறக்கும் போதுஎவ்வளவு மகிழ்சியை அள்ளிக் கொண்டு வருகின்றன. பறவைகள் பறக்கும் அழகைக் காணும் போது மனதில் இருக்கிற சுமைகள் எல்லாம் தானாக விலகிப் போகின்றன - என்றார்.

இயற்கை ஊக்குவிப்புக் கழகத்தின் ஆதரவுடன் இடம்பெற்றஇந்த நிகழ்வில் சமூகவியல் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் சிறுவர் நன்னடத்தை சேவைகள் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ராதாகிருஸ்ணன் கொழும்புப் பல்கலைக் கழக சூழலியல் பேராசிரியர் சூரம் கொட்டகம, உதவிக் கல்விப்பணிப்பாளர் ஏ.சிவன் அருள்ராஜா ஆங்கிலத்துறை விரிவுரையாளர் த. அருணகிரிநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். இதன் போது இயற்கையியல் சம்பந்தமாக பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளுக்கானபரிசளிப்புநிகழ்வும் நடைபெற்றது. (ந-311)

# ஒஸ்கார் விருது வழங்கும் நிகழ்வு




84 ஆவது அக்கடமி விருதுகளுக்கான ஒஸ்கார் பரிந்துரைகள் நேற்றுமுன் தினம் கலிபோர்னியாவில் அறிவிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி 26ஆம் திகதி, லாஸ் ஏஞ்ஸல்ஸின் கோடாக் திரையரங்கில் பிரமாண்டமாக நடைபெறும் அக்கடமி விருதுகள் வழங்கும் விழாவில் ஒஸ்கார் விருதுகளை குவிக்கப் போகும் திரைப் படங்கள் இந்தப் பரிந்துரைகளில் இருந்தே தெரிவு செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2011-12ஆம் ஆண்டு வெளிவந்த ஹொலிவூட் மற்றும் சர்வதேச திரைப் படங்களின் தரத்தின் அடிப்படையில் இந்தப் பரிந்துரைகள் இடம்பெற்றுள்ளன. (ந)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறைஜன.26

குருநகர் புதுமைமாதா ஆலயத்தின் காணிக்கை அன்னைத் திருவிழா நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது.

நற்கருணைத் திருவிழா முதலாம் திகதி மாலை 5 மணிக்கும் திருவிழாத் திருப்பலி மறுநாள் 2ஆம் திகதி வியாழக் கிழமை காலை 6.30 மணிக்கும் யாழ். ஆயர்மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இடம்பெற்று அன்று மாலை திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (வ-135)

***

ஒட்டுமடம் புனித செபஸ்தியார் ஆலயத் திருவிழாவின் திரிதின ஆராதனைகள் இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

நாளை மறுதினம் சனிக் கிழமை மாலை நற்கருணை ஆராதனையும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.46 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (வ-135)

***

யாழ்ப்பாணம் மணிக் கூட்டு வீதி அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது

தேர்த்திருவிழா பெப்ரவரி மாதம் 6ஆம் திகதியும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ந 313)

# கல்வி எழுச்சி விழா

யாழ்ப்பாணம்,ஜன.26

சுழிபுரம் - பெரிய புலோ அண்ணா சனசமூக நிலைய கல்வி அபிவிருத்திக் குழுவின் கல்வி எழுச்சி விழா எதிர்வரும் முதலாம் திகதி புதன் கிழமை இடம்பெறும்.

சனசமூக நிலைய தலைவர் க.சின்னப்பொடியன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி ந.ஐங்கரன், உறுப்பினர் தர்மலிங்கம் நடேனேந்திரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக - விக்ரோறியா கல்லூரி அதிபர் க.சிறிதரன் மற்றும் கிராம அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளதாக தலைவர் அறிவித்துள்ளார்.

# எமனானது ஊஞ்சல் கயிறு

ஊஞ்சல் கட்டப்பட்டிருந்த மரத்தின் வேரில் சிக்கி விழுந்ததில் இளம்பெண் ஒருவர் மரணமடைந்த சம்பவம் நுணாவில் மேற்கு 190 ஆம் கட்டைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தங்கவேலு இராஜகுமாரி (வயது- 21) என்ற இளம் பெண்ணே மரணமாகியுள்ளார். இவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேதப் பரிசோதனை மற்றும் விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

வீட்டு முற்றத்தில் இருந்த நாவல் மரத்தின் வேர் தடக்கியதில் அவர் தவறி ஊஞ்சல் கயிற்றில்பலமாக விழுந்துள்ளார். இதனால் கழுத்துப் பகுதி கயிற்றில் நசியுண்டு மரணம் சம்பவித்ததாகவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (ந-207)

இலங்கை நூலகச் சங்கம்
நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 - 2012/2013
நேர்முகத்தேர்வு

நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 இற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் அமைந்துள்ள பௌதிகவியல்துறை விரிவுரை மண்டபத்தில் எதிர்வரும் (28.01.2012) சனிக்கிழமை காலை 9 மணி -பிற்பகல் 3.30 மணிவரை நடைபெறவுள்ளது.
தகைமைகள்:
★ க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி அல்லது உயர் கல்வித் தகைமைகள்
அல்லது
★ க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப் பட்ட நூலகம் ஒன்றில் மூன்று (03) வருட தொழில் அனுபவம்
மொழி மூலம் : தமிழ் (யாழ்ப்பாண நிலையத்தில்)
கற்கைநெறிக் கட்டணம் : ரூபா 12,500.00
விரிவுரைகளுக்கான கூடிய வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் நடைபெறும்
குறிப்பு: இக்கற்கைநெறிக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் மேற்படி நேர்முகத்தேர்வுக்கு பின்வரும் ஆவணங்களுடன் தோற்றமுடியும்.
★ தேசிய அடையாள அட்டை
★ பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
★ விவாகப்பதிவு அத்தாட்சிப் பத்திரம் (திருமணமான பெண்களுக்கு)
★ கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
★ சேவைக்காலச் சான்றிதழ் (பணிபுரிவோருக்கானது) (13458) (45-7-6)
திருமதி கல்பனா சந்திரசேகர்
ஒருங்கிணைப்பாளர்/ யாழ். நிலையம்,
இலங்கை நூலகச் சங்கம்.

வேலையாள்கள் தேவை
சோடா போத்தல்களை வாகனங்களில் ஏற்றி இறக்குவதற்கு வேலையாள்கள் தேவை.
தொடர்புகளுக்கு:
021 222 5595,
0772105286

வேலையாள் தேவை
தையல் மெசின் மூலம் உரப்பைகள் தைப்பதற்கு ஆள் தேவை
603 ,கே.கே.எஸ் வீதி விக்னா உணவகம் முன்பாக.
தொடர்பு.077 2487852
021 2225986

வீடு வாடகைக்கு உண்டு
சோமசுந்தரம் வீதியில் கச்சேரி அருகில் 55 ஆம் நம்பர் மாடிவீடு வாடகைக்கு உண்டு
நிறுவனங்களுக்கு உகந்தவை
தொடர்புகளுக்கு .
077 6393742
021 2226438

# மரண அறிவித்தல்



## நடராசா காசிவேந்தன் (B.Com, M.A)

(முகாமைத்துவ பணிப்பாளர், சமுர்த்தி மகா சங்கம், உடுவில்)

வங்கியடி, இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா காசிவேந்தன் 22.01.2012 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நடராசா - பரமேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற கச்தசாமி மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பலோஜினியின் (முகாமையாளர், சமுர்த்தி வங்கிச் சங்கம், சுன்னாகம்) அன்புக் கணவரும், வேந்தினி, நாவேந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காசிக்குமரன் (லண்டன்), காயத்திரிதேவி (கனடா), காஞ்சனாதேவி (ஜேர்மனி), காசினிதேவி (ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி), கௌசலாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயபாரதி (லண்டன்), பத்மசிறீ (கனடா), ரவீந்திரன் (ஜேர்மனி), புஸ்பமாலினி (ஜேர்மனி), புஸ்பவதனி (கொலண்ட்), பாலசுப்பிரமணியம் (முகாமைத்துவ உதவியாளர், இலங்கை மின்சாரசபை), புஸ்பபாலினி (பிரதேச செயலகம், தெல்லிப்பழை), உமாசுதன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், சுவேதன், நமிர்தா (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும், கனோஜன், ஆருஜன் (கனடா), பிரவீகா, அபிசகா, அறிவகன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2012) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் பூவோடை இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்கியடி
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(13450) (45-7-6)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



## நடராஜா தேவராஜா

(தேவன்ஸ் சவுண்ஸ் உரிமையாளர்)

தோற்றம்
16★07★1949

மறைவு
26★12★2011

கடந்த 26.12.2011 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (26.01.2012) வியாழக்கிழமை முற்பகல் 9 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.

மருமகன்
வ.சபேசன்
(13391) 45- 7-6)

''நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது.....'' (பிலி 3:20)



# ஞாபகார்த்த ஆராதனை

*(Thanks Giving Service)*

கடந்த 27.12.2011 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது அன்புத் தந்தை

அமரர்

## வீரசிங்கம் பொன்னம்பலம்

அவர்களின் ஞாபகார்த்த ஆராதனை இன்று (26.01.2012) வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஞாபகார்த்த ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.08, யாழ்ப்பாடி வீதி,
பெருமாள் கோவில் முன்பாக,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்.
(13463) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சுகம், சந்தோஷம் அதிகரிக்கும் நாள். தொல்லை கொடுத்தவர்களே தோள் கொடுக்க முன்வருவர். வெறுப்பாகச் செயற்பட்ட சொந்த பந்தங்கள் அன்பாக, அனுசரணையாக நடந்து கொள்வர். விருப்பமான உணவுகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். காரியங்கள் சுலபமாக முடியும்.

**இடபம்:** எதையும் ஒன்றுக்கு பலமுறை யோசித்து புத்திசாலித்தனமாகச் செயற்படுவீர்கள். கொடுக்கல், வாங்கல்களில் சீரான நிலைமை காணப்படும். குடும்பப் பெரியவர்களின் யோசனைகளைக் கேட்டு நடப்பீர்கள். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த இடங்களுக்குச் செல்லலாம்.

**மிதுனம்:** ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். திடீரென நிகழும் மாற்றங்களால் வியப்படையலாம். எதிரிகள் தொல்லைகள் குறைந்து ஏற்றம் பெறுவீர்கள். உடன்பிறப்புகள் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். திடீர் பயணங்கள் செல்ல நேரிடலாம். நாவன்மை அதிகரிக்கும். பெரிய மனிதர்களின் ஆசிகளை பெறுவீர்கள்.

**கடகம்:** குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கலாம். உதவி செய்வதாகச் சொன்ன சிலர் கையை விரிக்கலாம். பிள்ளைகள் வழியில் தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். சுய தொழில் புரிவோர் கடும் வேலைப் பளுவால் அவதிப்படலாம். தீவிர யோசனைகள், அலைக்கழிப்புகளுக்கு ஆளாகலாம். மற்றவர்களுக்காக உங்களின் பணத்தைச் செலவிடலாம்.

**சிங்கம்:** உறவு பகை பாராமல் உதவி செய்வீர்கள். பண ஆதாயம் தரும் சில வேலைகளை அக்கறையோடு செய்வீர்கள். பெண்கள் வழியில் சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள். ஊக்கம், உற்சாகம் கூடும்.

**கன்னி:** காலை முதல் மாலை வரை பரப்பரப்பாகச் செயற்பட நேரிடலாம். உறவினர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். பிள்ளைகளால் கோபம், எரிச்சல் உண்டாகலாம். அயலார் மதிக்கும் வகையிலான காரியங்களைச் செய்வீர்கள்.

**துலாம்:** புகழ், கௌரவத்துக்கு பங்கம் வராமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளால் சிரமங்களைச் சந்திக்கலாம். மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ளலாம். சிலரை கேலி, செய்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சிலருடன் கோயில்களுக்குச் சென்று வழிபடலாம்.

**விருச்சிகம்:** உறவினர்கள் சிலர் உங்களை நம்பி வேலைகளை ஒப்படைக்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகி கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த காரியம் ஒன்று இன்று எதிர்பாராத விதமாக முடியும். சிலர் உங்களின் ரகசியங்களை அறிந்து கொண்டு விமர்சிக்கலாம்.

**தனுசு:** குழப்பங்கள் தீர்ந்து எதிலும் தெளிவான, தீர்க்கமான முடிவு எடுக்கும் நாள். வரவுகளை எதிர்பார்த்துச் சில செலவுகளைச் செய்வீர்கள். பெண்களால் ஏற்பட்ட தொல்லைகள் குறைந்து, நிம்மதி பெறுவீர்கள். மாமன், மைத்துனர் உதவியோடு முக்கிய காரியம் ஒன்று நிறைவேறும். சில வேலைகளுக்காக கடுமையாக அலையலாம். உதிரி வரவுகள் உண்டு.

**மகரம்:** தெய்வ வழிபாட்டில் நாட்டம் செல்லும். வழக்கமான பணிகளை, உடற்பயிற்சிகள் செய்வதை தள்ளி வைக்க நேரிடலாம். தந்தையுடன் கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்க பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். வீண் வம்பு, விவகாரங்களில் இருந்து விடுபடுவீர்கள். திட்டமிட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம். வாக்குவாதங்களில் ஈடுபடலாம்.

**கும்பம்:** நண்பர்கள் வட்டம் விரிவடையும் நாள். தனவரவுகளை பெறலாம். குடும்ப உறுப்பினர்கள் உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். ஓய்வின்றி சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். பெண்கள் பிறந்த வீட்டினர் வருகையால் சந்தோஷம் அடைவர். கடந்த கால இழப்பு ஒன்றை ஈடுசெய்யும் வாய்ப்பு உருவாகும். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவீர்கள்.

**மீனம்:** சுபச்செலவுகள் அதிகரிக்கும் நாள். எதிர்கால திட்டம் ஒன்றுக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். கடன்கள் வசூலாகி திருப்தி தரும். சொத்து வாங்கல், விற்பனை முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் அலைந்து திரியலாம். கோபம், வேகத்தைக் குறைக்க வேண்டும். பக்தி நாட்டம் உண்டாகும்.

**நாளை**

தை 13 வெள்ளிக்கிழமை 27.01.2012
திதி: சதுர்த்தி பி.ப. 03.19 வரை
நட்சத்திரம்: புரட்டாதி மு.இ. 08.18 வரை
சுபநேரம்: 06.36 - 08.06 வரை,
ராகு காலம்: 11.06- 12.36 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | | | | 2 | 4 | |
| | 3 | | | | 2 | 5 | | 9 |
| | | | | 8 | | | | 6 |
| | 2 | 8 | 1 | | 9 | | | 5 |
| 5 | | 9 | 2 | 3 | 8 | 4 | | 7 |
| 1 | | | 6 | | 7 | 9 | 2 | |
| 3 | | | | 9 | | | | |
| 2 | | 1 | 3 | | | | 9 | |
| | 9 | 4 | | | | | 6 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன்மான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# திருமண வாழ்வின் பொன்விழா ஆண்டில்

## திரு.திருமதி கார்த்திகேசு - சுமதி தம்பதிகள்



உயிர் தந்து ஈன்றெடுத்து – நாம்
சிறப்பாய் வாழ வழி சமைத்து
வையகம் எமை போற்றும் நிலை தந்து
ஐந்து தசாப்தமாய் எமக்கு அனைத்துமாய் – நின்று

எமையும் எமது பிள்ளைகளையும் அவர்களின்
பிள்ளைகளையும் சீராட்டி பார் போற்ற வைத்துக் கொண்டிருக்கும்
எமது அன்புத் தெய்வங்களே இன்னும் வேண்டுகின்றோம்
பல்லாண்டுகள் உங்கள் பணி எமக்காக.

- வேண்டி நிற்கும் தளிர்கள் -

✳ மகாலஷ்சுமி நாகேஸ்வரன் (கிளிநொச்சி)
✳ பாஸ்கரன் ஜஸ்மின்சுதா (நந்தினி பேக்கரி, கொக்குவில்)
✳ சுதாமதி கார்த்திகேசு
✳ தண்மதி சந்திரகுமார் (கிளிநொச்சி)
✳ ரவீந்திரன் கிருஸ்ணவேணி (யாழினி ரான்ஸ்போட்)
✳ விக்கினேஸ்வரன் றஜிதா (நிவேதினி வெதுப்பகம், முல்லைத்தீவு)
✳ சிவகுமார் சுதா (uva private hospital, Monarakale)
✳ இந்துமதி ரவிக்குமார் (முல்லைத்தீவு)

தகவல்: [illegible]

(13473)(2-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளிகளுக்கு இராணுவத்தால் அச்சுறுத்தல்

## மறுக்கிறார் இராணுவப் பேச்சாளர்

**அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் முன்னாள் புலி உறுப்பினர்கள் யாராவது ஈடுபட்டால் அவர்கள் மரணத்தைச் சந்திக்க வேண்டிவரும் என அச்சுறுத்தப்பட்டுள்ளனர்**

கொழும்பு,ஜன.26

புனர்வாழ்வு பெற்றுத் தற்போது மீளவும் சமூகத்துடன் இணைக்கப்பட்டு வடக்கில் வாழும் முன்னாள் போராளிகளை அரசியற் செயற்பாடுகளில் ஈடுபடாமல் தூர விலகி இருக்குமாறு இராணுவம் அச்சுறுத்தி வருகிறது என்று அரசியல்வாதிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மக்கள் போராட்ட இயக்கத்துடன் இணைந்து செயற்படவேண்டாம் என்று முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு இராணுவம் அச்சுறுத்தல் விடுத்துள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் பி.பி.சிக்குத் தெரிவித்துள்ளார்.

இது அவர்களின் அரசியல் உரிமையை மறுப்பதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூகத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி போராளிகள், இராணுவப் புலனாய்வுத் துறையினரின் கண்காணிப்பின் கீழ் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் ஒரு தொகுதியினர் வாரத்தில் ஒரு தடவையும் மற்றைய தொகுதியினர் மாதத்தில் ஒரு தடவையும் இராணுவ முகாமுக்குச் சென்று அறிக்கையிட வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்று அவர்தெரிவித்தார்.

எனினும்,இந்தக் குற்றச்சாட்டை இராணுவத்தினர் திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.

புனர்வாழ்வு பெற்று விடுதலையாகிய முன்னாள் போராளிகளின் செயற்பாடுகளைப் பொலிஸார் கண்காணித்துவரும் அதேவேளையில், இவர்களின் விடுதலைக்குப் பின்னர் இவர்கள் தொடர்பான எந்தவொரு செயற்பாடுகளிலும் இராணுவத்தினர் ஈடுபடவில்லை என்று இராணுவப்பேச்சாளர்பிரிகேடியர் நிஹால் ஹப்புவாராய்ச்சி, பி.பி.சி. சிங்கள சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும், இந்தப் பிரச்சினை தொடர்பாக உள்ளூர் ஊடகங்களோ அல்லது உள்ளூர்த் தலைவர்களோ இராணுவத்திடம் முறைப்பாடு செய்யவில்லை என்று அவர் தெரிவித்தார்.

விடுவிக்கப்பட்ட முன்னாள் தமிழ்ப் புலி உறுப்பினர்கள் மீது பொலிஸார் ஓர் ஆண்டு முழுமையும் கண்காணிப்பை மேற்கொள்வது உண்மையானதாகும் என்று தெரிவித்த அவர், விடுவிக்கப்பட்ட உறுப்பினர்கள் தேவையற்ற ஏதாவது விடயங்களில் ஈடுபட்டால், அவர்கள் தொடர்பாக அத்தியாவசிய நடவடிக்கை எடுப்பதற்காகவே பொலிஸார் அவர்களைக் கண்காணிக்கின்றனர் என்றார்.

இதேவேளை, முன்னாள் போராளிகளைப் பொலிஸார் கண்காணிப்பது பிழையல்ல; ஆனால் முன்னாள் போராளிகள் இத்தகைய கண்காணிப்புகளால் நாளாந்த வாழ்வில் அச்சுறுத்தலைச் சந்தித்து வருகின்றனர். இதனால் அத்தியாவசியமான பணிகளைக் கூடச் செய்யமுடியாமல் முன்னாள் போராளிகளின் வாழ்வு முடக்கப்பட்டுள்ளது. எனவே கண்காணிப்புச் செயற்பாடுகளைப் பொலிஸார் நிறுத்த வேண்டும் என சிவாஜிலிங்கம் கூறினார்.

அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் முன்னாள் புலி உறுப்பினர்கள் யாராவது ஈடுபட்டால் அவர்கள் மரணத்தைச் சந்திக்க வேண்டிவரும் எனஅச்சுறுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஆன்மாவின் இயல்பை எவ்வாறு அறியலாம்

எல்லையற்ற ஆத்மாவின் இயல்பை அறிந்து கொள்ள நாம் பரந்த எண்ணங்களையும் உணர்வுகளையும் வளர்க்க வேண்டும்.

உலகியல் வேற்றுமைகளான ஆண் பெண், உயர்ந்த சாதி, தாழ்ந்தசாதி, ஒரு நாட்டு மக்கள் வேற்று நாட்டு மக்கள் என்ற வேறுபாடுகளைக் கைவிட்டு விட வேண்டும்.

இத்தகைய உலகியல் மாற்றங்களெல்லாம் புலன்களால் நுகரப்படக்கூடிய பொய்யான உலகுக்கு உரிய தன்மை. அவை குறுகிய மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டவை. தெய்வீகத்துடன் எதுவித தொடர்பும் அற்றவை.

ஆத்மா அல்லது தெய்வீகக் கோட்பாட்டை நாம் சரியாக விளங்கிக்கொள்ள வேண்டுமானால் நாம் பிரயோசனமற்ற குறுகிய மனப்பான்மை கொண்ட வேற்றுமைகளையும்,வேறுபாடுகளையும் கைவிட வேண்டும்.



**சாயி சிந்தனை**

## பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் அரை மணியால் பின்நகர்வு

காரைநகர், ஜன.26

காரைநகர் கோட்டப் பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரம் அரை மணித்தியாலத்தால் பின் நகர்த்தப்பட்டுள்ளதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் காரைநகர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் பாடசாலைகள் பிற்பகல் 2 மணி வரை நடைபெற்று வந்தன.

வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தலுக்கமைய நேற்று முதல் பாடசாலைகள் 8.30 மணிக்கு ஆரம்பமாகி 2.30 மணி வரை இடம்பெற்று வருகின்றன.

நீண்ட தூரங்களில் இருந்து பாடசாலைகளுக்கு வருகை தரும் அதிபர், ஆசிரியர்களின் நலன் கருதியே பாடசாலை நேரம் அரை மணித்தியாலங்களினால் பின்னகர்த்தப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு கணித நிலையறி பரீட்சை

தென்மராட்சி,ஜன.26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணித நிலையறிப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குரிய வினாக்கள் அடங்கிய பொதிகளை இன்று பிற்பகல் 12.30 மணி தொடக்கம் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் மாணவர்களின் விவரத்துடன் பெற்றுக்கொள்ளலாம் எனப் பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுள்ளார்.

(ம-207)

## பிற்போடப்பட்டுள்ளது

**எதிர்வரும் 29.01.2012 ஞாயிற்றுக்கிழமை**

**வண்.வடகிழக்கு கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் மணி மண்டபத்தில்**

**(கலட்டி அம்மன் கோயில்) நடைபெற இருந்த நா.நடராசா தம்பதிகளின் புதல்வனின் திருமண நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.**

**நா.நடராசா,**
**கருங்காலி, காரைநகர்.**

## மரண அறிவித்தல்

### பொன்னையா பாலச்சந்திரன்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், யாழ். மாநகரசபை)



யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், இல.53B,1ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற யாழ்.மாநகர சபை உத்தியோகத்தர்) நேற்று (25.01.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா மற்றும் செல்லக்கண்டு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெகதீஸ் வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகராஜா (உரிமையாளர்-டைமன் தேயிலை கம்பனி) மற்றும் மங்களேஸ்வரி (கொழும்பு), கமலநாதன் (லண்டன்), விமலநாதன் (லண்டன்), கமலேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசம் மிக்க சகோதரனும், உஷாந்தியின் (முகாமைத்துவ உதவியாளர்-யாழ்.மாவட்ட செயலகம்) பாசம் மிக்க தந்தையும், சுதனின் (உரிமையாளர்-ஸ்ரீசுதனா நகை மாளிகை) அன்பு மாமனும், அபிராமி யின் அன்புப் பேரனும், வடிவாம்பிகை (ஓய்வுபெற்ற பரிவர்த்தன நிலைய மேற்பார்வையாளர்), Dr.M.கனகசபை (கொழும்பு), பிறையாம்பாள் (லண்டன்), வத்சல்யா (லண்டன்), பவானந்தன் (லண்டன்), கிருஷ்ணபிள்ளை (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்), மனோன்மணி (நோர்வே), காலஞ்சென்ற சேனாதிராஜா (பொறியியலாளர்) மற்றம் குணரட்ணம் ஆகியோரின் மைத்துனரும், சுந்தரலிங்கம் (முகாமையாளர்-ராஜா தியேட்டர்)-சகுந்தலாதேவி தம்பதியரின் சம்பந்தியும், ஜெகநாதன் (நோர்வே), ஜெயகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் சித்தப்பாவும், Dr. வ.பிரஷாந்தி (லண்டன்), பிரசன்னா (லண்டன்), அட்ஷரா (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும், கௌரி (கனடா), Dr. K. சிவகுமார் (கனடா), நிரூஜன் (லண்டன்), பானுஷா (லண்டன்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2012) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.53, 1ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(13506) (6,7,10)

தகவல்:
த. சுதன் (மருமகன்).

## மரண அறிவித்தல்

### தேவராசா சண்முகராசா



காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா சண்முகராசா 24.01.2012 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் தேவராசா மற்றும் அமிர்தவல்லி தம்பதியரின் அன்பு மகனும் தில்லைராசா, திலகவதி, லீலாவதி, புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பரமசாமி, பரஞ்சோதி, சுப்பிரமணியம் (சிற்றம்பலம்), நவலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீலகிரி இந்து மாயனத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தேவராசா அமிர்தவல்லி
(தாய்)

கருங்காலி,
காரைநகர்.

(13505) (2-7-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் அதிபர் அருட் தந்தை க.ஜேம்ஸ் சிங்கராஜர் அடிகளாரின் மாமனார்

**அருட்தந்தை இராஜசிங்கம் பீற்றர் துரைரெட்ணம் அடிகளார்**

இறைவனடி சேர்ந்தமையை அறிந்து துயருறுவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**புனித அந்தோனியார் கல்லூரிக் குடும்பம் ஊர்காவற்றுறை.**

## மரண அறிவித்தல்



**அருட்தந்தை இராஜசிங்கம் பீற்றர் துரைரட்ணம் அடிகளார்**

யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை இராஜசிங்கம் பீற்றர் துரைரட்ணம் அடிகளார் நேற்று (25.01.2012) இறைபதம் அடைந்தார். அடிகளாருடைய நல்லடக்கத் திருப்பலி இன்று (26.01.2012) மாலை 4.00 மணிக்கு யாழ். ஆயர் தலைமையில், யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம்
குருமுதல்வர், ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

(C\8214)

## கண்ணீர் அஞ்சலி



உடுவில் பிரதேச சமுர்த்தி மகா சங்க முகாமைத்துவப் பணிப்பாளரும், சுன்னாகம் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் திருமதி புஸ்பலோஜினி காசிவேந்தன் அவர்களின் அன்புக் கணவர்

**நடராசா காசிவேந்தன்**

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேசசபை,
வலி-மேற்கு, சங்கானை.

பிரதேச செயலர்
சமுர்த்தி முகாமையாளர்கள்,
சமுர்த்தி உத்தியோகத்தர்கள்.

(C\8216)


உங்கள் கல்வித்தகைமையை அதிகரித்திட

**BE A 'CERTIFIED MEDICAL ASSISTANT'**

பதிவு இறுதித்திகதி : 05/02/2012
கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்.
A pathway for Nursing/Medical Field
மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு-06
CMA US Curriculum
Lava Hospitals
வேலைவாய்ப்புடனான கற்கை நெறி.




What's Next ?
K.U-Education
(O/L வரை கற்றிருந்தால் போதுமானது.)
உங்கள் வாழ்வு மேம்பட கற்பீர்
MBBS வைத்திய விரிவுரையாளர்களால் பிரபல வைத்தியசாலையில் செயல்முறையுடன் கற்பிக்கப்பட்டு தொழில் வழங்கப்படும் மருத்துவ பயிற்சி நெறி.
City Guilds Qualified
பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன
**Knowledge Universe**
K.U College of Business and IT
Tel: 0776458253 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info


## கண்ணீர் அஞ்சலி

**நடராசா காசிவேந்தன் (B.Com, MA)**

(முகாமைத்துவப் பணிப்பாளர்-சமுர்த்தி மகா சங்கம், உடுவில்)



உடுவில் பிரதேசத்தின் சமுர்த்தித் திட்டத்தின் ஆரம்பகாலம் தொட்டுப் பணியாற்றிவரும் தன்னலம் அற்றசேவையாளனும் இணுவில் கிராமத்தின் மைந்தனும் எமது நண்பனும் ஆகிய நடராசா காசிவேந்தன் இறைபதம் அடைந்தமையையிட்டு ஆழ்ந்த மனவருத்தம் அடைவதுடன் அவருடைய ஆன்மா சாந்திபெற இறைவனைப் பிரார்திக்கின்றேன்.

ச.சந்திரகுமார், தலைவர்
சமுர்த்தி மகா சங்கம், உடுவில்.

(13[illegible]) (2[illegible]6)

# இரசாயனவியலுக்கு ஒரு ஆசிரியர் மட்டும்

தென்மராட்சி,ஜன.26

தேசிய பாடசாலையில் ஒன்றான சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இரசாயனவியல் பாடத்திற்கு ஒரேயொரு ஆசிரியர் மட்டுமே கடமையாற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கல்லூரியில் மூன்று விஞ்ஞான பாடப் பிரிவுகளில் 100இற்கு மேற்பட்ட மாணவர்கள் கற்கின்ற போதிலும் ஒரு ஆசிரியர் மூன்று வகுப்புகளையும் ஒரே நாளில் நடத்துவதில் சிரமங்களை எதிர்நோக்கு கின்றார்.

சிலவேளைகளில் மூன்று பிரிவுகளையும் ஒன்றிணைத்து ஆசிரியர் கற்பிப்பதால் மாணவர்கள் பூரணமாக கிரகித்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்துக் கல்லூரிக்கு இரசாயன பாடம் கற்பிக்கக் கூடிய வேறு ஆசிரியர்களை நியமிக்க அல்லது வேறு பாடசாலைகளிலிலிருந்து இடமாற்றல் செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பெற்றோர் தெரிவித்தனர்.

(ம-207)

# சிக்கன கடன்; புதிய திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் புதிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளன.

முதலீட்டுத் திட்டம், இயந்திரக் கடன் திட்டம் போன்ற திட்டங்களே இவ்வாறு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளன.இதில் இயந்திரக் கடன் திட்டத்தில் சைக்கிள், நீர் இறைக்கும் இயந்திரம், தையல் மெஷின் என்பன அடங்கும்.

சைக்கிள் கடன் கொள்விலையுடன் ஐந்நூறு ரூபா கடனாக வைத்து வழங்கப்படும். இதன்காலம் ஒரு வருட காலமாகவும் மாதம் ஒன்றுக்கு எட்டு வீத வட்டியாகவும் அமையும்.

நீர் இறைக்கும் இயந்திரக் கடன் கொள்விலையுடன் ஆயிரம் ரூபா வைத்துக் கடனாக வழங்கப்படும்.

2 வருட காலத்துக்கு 10 வீத வட்டியாக அமையும். இக் கடன்கள் யாவும் மாதாந்த தவணை அடிப்படையில் ஒழுங்காக செலுத்தப்படல் வேண்டும். மாதாந்தத் தவணையில் பணம் செலுத்தத் தவறும் போது கூட்டுத் தொகைக்கு மேலாக 2 வீதம் அதிகமாக அறவிடப்படும். கடன் செயற்பாடுகள் சமாசத்தின் கடன் நடைமுறைக்கு அமையவே இடம்பெறும்.

இயந்திரக் கடன் பெறும் நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள், சங்கங்கள் ஆகிய சமாசத்துடன் இணைந்து குறைந்த கடன் வட்டி அடிப் படையில் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் செ.இலகு நாதன் தெரிவித்துள்ளார்.

(ம-311-ரி)

# விபத்தில் நேற்று இளைஞர் காயம்

கைதடியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியைச்சேர்ந்த பரராசசிங்கம் தினேஸ் (வயது-22) என்ற இளைஞரே படுகாயமடைந்தார்.

திருநெல்வேலிச் சந்தையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடும் இவர் கொடிகாமம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டார். கார் ஒன்றும் இதன்போது சிக்குண்டது. சாவகச்சேரிப் பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டனர்.


**காணி விற்பனைக்கு**

V.M. றோட், ஆத்தியடி விதியில் 3½பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு . 077 8445445

**Personal Class**

தரம் 3 - A/L வரையான மாணவர்களுக்கு English Personal & Group Class [illegible] Spoken with Grammar
கற்க விரும்புபவர்களுக்கும் (No age Limit) வீடுகளில் [illegible]
தொடர்பு: பலாலி வீதி, கந்தர்மடம் T.P. 0772741431


## தவறிவிட்டது

தொல்புரத்திற்கும் ஆனைகோட்டைக்கும் இடையில் சின்னத்தம்பி சண்முகநாதன். (N.P.G.F-0672) இலக்க முடைய மோட்டார் சைக்கிள் வரிப்பத்திரம் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்துடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

முகவரி:சின்னதம்பி சண்முகநாதன் (தேவகி)
மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டை
தொடர்பு: 0213008059, 0777375239

## கண்ணீர் அஞ்சலி



உடுவில் பிரதேசசெயலக சமுர்த்தி மகா சங்க முகாமைத்துவப் பணிப்பாளரும். சுன் னாகம் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் திருமதி.புஸ்பலோஜினி. காசிவேந்தனின் அன்புக்கணவர்

**நடராசா காசிவேந்தன்**


அவர்களின் மறைவால் துயரும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சமுர்த்தி வங்கிச்சங்கம்,
இணுவில்.

சமுர்த்தி முகாமையாளரும்,
சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தர்களும்.

(13509)

## மரண அறிவித்தல்



**சின்னத்தம்பி கதிரவேலு**

இல. 27, அரச வீதி, நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கதிரவேலு (23.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - அம்மணிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், அருள்நாயகம் (J.P-இளைப்பாறிய பணியாளர்-நல்லூர், பல நோ.கூ. சங்கம்), ராஜேஸ்வரி, ரவீந்திரன், மகேந்திரராசா (டென்மார்க்), செல்வநாதன் (நோர்வே), காலஞ்சென்ற விஜயநாதன் மற்றும் இராகுலநாதன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நற்குணதேவி (இளை. ஆசிரியை- நல்லூர் சாதனா பாடசாலை), திருச்செல்வம், மதிவதனி, மஞ்சுளா, தயாநிதி, தர்மபாலினி, ஆகியோரின் மாமனும் Dr. முகுந்தன், Dr. சுதர்சினி, ரமேஸ் -சிவாயினி (கனடா), சிவகுமார் - திருத்தணிகா (கனடா), சதீஸ் - கனித்தா, ரமணன், தினேஸ், தனஜா, நிவேதன், அஜீவன் (டென்மார்), சந்தியா, ஆரபி, சகானா (நோர்வே), சிந்துஜா, ரவீனா, காவியா (டென்மார்க்) ஆகியோரின் பேரனும் அட்சரன், நேத்திரன், மிதுஷானி, நிஷானி, அகிஷன் (கனடா), அதிஷன் (கனடா), அக்ஷயா, அபினயா, ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 27, அரச வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (26.01.2012) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
**குடும்பத்தினர்**

(13483) (45-7-6)

## கண்ணீர் அஞ்சலி

இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், முன்பள்ளி முகாமைத்துவக் குழுவின் தலைவருமான

**நடராசா காசிவேந்தன் (B.Com, MA)**



அவர்களின் திடீர் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இளந்தாரி கோயிலடி,
இணுவில் கிழக்கு.

இணுவில் கிழக்கு கிராம
அபிவிருத்திச் சங்க
நிர்வாகத்தினர்,
முன்பள்ளி ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(13486) (46,7,10)

## பதவி வெற்றிடம்

பிரபல தொலைத்தொடர்பாடல் கம்பனியாகிய எமது நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன

1. விநியோகஸ்த விற்பனை பிரதிநிதி - 3 வெற்றிடங்கள்
   க.பொ. த. உயர் தரம் 3 பாடங்களில் சித்தி
   மோட்டார் வாகனம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
2. Dealer Point Manager - 1 வெற்றிடம்
   கணினி அறிவு அவசியம்
   க.பொ. த. உயர் தரம் 3 பாடங்களில் சித்தி
3. Back Office Staff - 1 வெற்றிடம்
   கணினி அறிவு அவசியம்
   க.பொ. த. உயர் தரம் 3 பாடங்களில் சித்தி
4. விற்பனை பிரதிநிதி - 10 வெற்றிடங்கள்
   க.பொ.த. சாதாரண தரம்

* அடிப்படை சம்பளம் 15000 ரூபாவில் இருந்து வழங்கப்படும்
* அனுபவம் விசேட தகைமைகள் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

29.01.2012 இற்கு முன்னர் சுயவிவரக்கோவையுடன் கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

முகவரி: HUTCH
127, K.K.S. ROAD, M.P.C.S. BUILDING, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவான இராமலிங்க வித்தி



யாழ்ப்பாணம், ஜன.26
தேசத்தின்மகுடம் நிகழ்வை முன்னிட்டு மாவட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆவரங் கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய அணி வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித் தியாலய அணி 25:19, 25:21 என்ற அடிப்படையில் புள்ளி கள் பெற்று 2:0 என்ற செற்கள் அடிப்படையில்வெற்றிபெற்று தேசிய மட்டப்போட்டிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## தமிழ்த் தென்றல் வென்றது

யாழ்ப்பாணம், ஜன.26
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி யாட்டத்தில் தமிழ்த் தென்றல் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

கடந்த வாரம் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் தமிழ்த் தென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வெற்றிமுரசு விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் தமிழ்த் தென்றல் விளையாட்டுக் கழக அணி 19:02 என்ற புள்ளிஅடிப்படையில்வெற்றி பெற்றது. (ம-23)

## கபடி அரையிறுதிக்கு தெரிவான அணிகள்

யாழ்ப்பாணம், ஜன.26
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டியின் கால் இறுதியாட்டங்களில் ஆண்கள் பிரிவில் சிற்றிஸ்ரார் விளையாட்டுக்கழகம், ஈகிள்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியனவும் பெண்கள் பிரிவில் வெற்றி விளையாட்டுக்கழகம் வெலிங்ரன் விளையாட்க் கழகம் ஆகியனவும் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தெரிவாகின.

பெண்களுக்கான முதலாவது கால் இறுதியாட்டத்தில் வெற்றி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணிமோதிக் கொண்டது.

இதில் வெற்றி விளையாட்டுக்கழக அணி 47:27 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரண்டாவது கால் இறுதியாட்டத்தில் வெலிங்ரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தமிழ் தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் வெலிங்ரன் விளையாட்டுக்கழக அணி 51:46 என்ற புள்ளி அடிப் படையில் வெற்றிபெற்றது.

ஆண்களுக்கான முதலாவது கால் இறுதி யாட்டத்தில் சிற்றிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் சிற்றிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 55:13 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. இரண்டாவது கால் இறுதியாட்டத்தில் ஈகிள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தோழர்கள் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் ஈகிள் விளையாட்டுக்கழகம் 54:41 என்ற புள்ளி அடிப்படையில்வெற்றி கொண்டது. (ம-231)

## சம்பியன் வென்ற நியூஸ்ரார், வெற்றி



யாழ்ப்பாணம், ஜன.26
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் மல்லாகம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் நியூஸ்ரார் விளையாட்டுக்கழகமும் பெண்கள் பிரிவில் வெற்றி விளையாட்டுக் கழகமும் சம்பியனானது.

இதில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தாரகை விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

இதில் நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் 53:33 என்ற புள்ளி அடிப் படையில் வெற்றி பெற்றது.

இதேவேளை, பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வெற்றி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வெற்றிமுரசு விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் வெற்றி விளையாட்டுக்கழக அணி 19:16 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன.26
கோப்பாய் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டி இன்று வியாழக் கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

* * *

துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட வி.க வுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை கோட்டை கட்டிய குளம் தோ. வி.க. மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ம-23)

## கிரிக்கெட் வெற்றியாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன.26
கோப்பாய் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயது பிரிவு பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் உரும்பிராய் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகியன வெற்றி பெற்றன. (ம-23)

## மருத்துவர்கள் வெளிநாடுகளுக்கு

மருத்துவக் கல்லூரிகளிலிருந்து வெளியேறி, பயிற்சிக்கால நியமனங்களைப் பெற்றுள்ள 72 மருத்துவர்கள் சுகாதார அமைச்சுக்குத் தெரியப்படுத்தாது வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக சுகாதரா அமைச்சு தெரிவிக்கிறது.

பெரும் எண்ணிக்கையான மருத்துவர்களுக்கு கடந்த மாதத்தில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்விதம் நியமனங்களைப் பெற்றிருந்த 72 மருத்துவர்கள் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்காது வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாக [illegible] தெரிவித்தார். (ம-22)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
12 - 06 - 1922



உதிர்வு
27 - 12 - 2011

### அமரர் கந்தசாமி நாகம்மா
(அரசடி, நவாலி)

எங்கள் அன்புத் தெய்வமே! எங்களின் வாழ்விற்கு
வழிகாட்டியாய் துணைநின்றாய்
சிறப்புடன் வாழவைத்தாய் - உன் மலர் முகம்
காணவில்லையம்மா - கண்கள்
உன்னைத் தேடுகின்றன - உன்னை இனி
எப்போது காண்பதம்மா?

எங்கள் குடும்பத் தலைவி கந்தசாமி நாகம்மா அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஓடோடிவந்து உதவிகள் புரிந்த உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர்வளையம் சமர்ப்பித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்க ளுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரசடி, நவாலி,
மானிப்பாய்.
(13400) (6,7,10)
குடும்பத்தினர்.

## ஆத்மசாந்திப்பிரார்த்தனை அழைப்பு



கடந்த 25.12.2011 அன்று அமரத்துவம் அடைந்த எமது இதய தெய்வம்

அமரர்

### ஆறுமுகம் தங்கம்மா

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு 2012.01.28 சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் நண்பர்கள், உறவினர்கள், அலுவலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப்பெறாதவர்களும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

கிழவி தோட்டம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
தொ.பே:021 2264656,
0212263816.

குடும்பத்தினர்
(ஆ.ராஜேந்திரன் வ.க.ப,)
வலிகாமம் கல்வி வலயம்.

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை அமிர்தலிங்கம்



பாலாவோடை, களபூமி, காரை நகரை வசிப்பிடமாகக் கொண்ட சங்கரப் பிள்ளை அமிர்தலிங்கம் நேற்று (25.01.2012) புதன் கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ் சென்ற ஆறுமுகம் மற்றும் சுந்தரம்மா தம்பதியின ரின் மருமகனும், ரஞ்சினிதேவியின் அன்புக் கணவரும், காயத்திரி, சசித்ரன் ஆகியோரின் அன்பு தந்தையும், காலஞ் சென்ற பரமலிங்கம் மற்றும் சிவமணி, [illegible]லிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திர மலர், சத்தியபாமா (கனடா), காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் மற்றும் கனகசுந்தரம் (கனடா), நல்லம்மா ஆகியோ ரின் மைத்துனரும், சூரியமூர்த்தி (சூரியன் கூல் பார், உதயன் பத்திரிகை முகவர்-பரந்தன்), தனபாலசிங்கம் (கனடா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.01.2012) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாலாவோடை,
களபூமி, காரைநகர்.
(13488) (6,10)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிலெய்டில் அனல்

**ஆஸ்திரேலிய அணி மைக்கல் கிளார்க், ரிக்கி பொண்டிங் இருவரதும் இரட்டைச் சதத்தின் உதவியுடன் 7 இலக்குகளை இழந்து 604 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.**



''சொல்லி அடிப்போமடா! அடிச்சமெண்டா நெத்தியடிதானடா'' - **இரட்டைச் சதம் அடித்த பொண்டிங், கிளார்க்.**



''இண்டைக்குத் தப்பிட்டம். நாளைக்கு...?'' - **கேள்விக் குறியோடு சச்சின், கம்பீர்.**

முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணி ஆரம்பத்திலேயே தடுமாறத் தொடங்கியது. நேற்றைய ஆட்ட நேர நிறைவில் இந்திய அணி 2 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. முன்னதாக ஆஸ்திரேலிய அணி மைக்கல் கிளார்க், ரிக்கி பொண்டிங் இருவரதும் இரட்டைச் சதத்தின் உதவியுடன் 7 இலக்குகளை இழந்து 604 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.


ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து இந்திய அணி விளையாடி வருகின்றது. நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை இந் திய அணி 3 - 0 என்ற கணக்கில் ஏற்கனவே இழந் துள்ளது. நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் அடிலெய்டில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க் கிழமை ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ் திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய ஆஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 335 ஓட்டங்களைப் பெற்றது. களத்தில் பொண்டிங் 137, கிளார்க் 140 ஓட்டங்களி னையும் பெற்றிருந்தனர்.

பலமான நிலையில் ஆஸ்திரேலிய அணி நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டத்தை ஆரம்பித்தது. இந்தியாவின் சோகம் நேற்றும் தொடர்ந்தது. எவ்வளவுதான் திட்டங்கள் போட்டு வியூகங்களை இந்திய அணித்தலைவர் சேவாக் மாற்றிக் கொண்டே இருந்தபோதும் அவை கடைசிவரை பயனளிக்கவே இல்லை. இந்தியாவின் திட்டங்களைத் தவிடுபொடியாக்கிக் கொண்டு பந்துகள் எல்லைக் கோட்டை நோக்கிப் பறப்பதிலேயே குறியாக இருந்தன.

ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே பொண்டிங்கும் கிளார்க்கும் 150 ஓட்டங்களைக் சேர்த்தனர். இந்த ஜோடி இணைப்பாட்டத்தில் 300 ஓட்டங்களைத் தாண்டியது. ஆரம்பம் முதல் அசத்தலாக ஆடிய அணித்தலைவர் கிளார்க் 255 பந்துகளில் தனது இரட்டைச் சதத்தை பூர்த்தி செய்தார். மதிய போசன இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம் ப மாகி சிறிது நேரத்தில் கிளார்க் 210 ஓட்டங்களுடன் யாதவின் பந்து வீச்சில் 'போல்டானார்'. பொண்டிங் - கிளார்க் இருவரிடையேயும் நான்காவது இலக்குக்காக 384 ஓட்டங்கள் பகிரப்பட்டன.



''சாமி சத்தியமா என்னில பிழையில்ல. இந்தப் பாழாப்போன 'பட்'டிலதான் பிழை'' - **வேகமாய் வெளியேறும் சேவாக்.**

கிளார்க் ஆட்டமிழந்த பின்னரும் பொண்டிங்கின் துடுப்பு ஆவேசமாக சுழல்வதைத் தடுக்க முடியவில்லை. பொண்டிங் 357 பந்துகளில் தனது இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். பொண்டிங் - ஹஸி இடையே 50 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் ஹஸி 25 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டானார்'. அடுத்து ஹடின் களமிறங்க மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த பொண்டிங் 221 ஓட்டங்களுடன் சகீரின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து நுழைந்த சிடில் 2 ஓட்டங்களுடன் வெளியேற 533 ஓட்டங்களுக்கு ஆஸ்தி ரேலிய அணி 7 இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் இணைந்த ஹடின் - ஹரிஸ் இருவரும் மிகச் சிறப்பாகத் துடுப் பெடுத்தாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இருவரும் ஆட்டம் இடைநிறுத்தும் வரையில் 69 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தனர். இதற்கு மேலும் இந்தியப் பந்து வீச்சாளர்களை சோதிக்கக் கூடாது என்று எண்ணி ஆட்டத்தை இடைநிறுத்தியது ஆஸ்திரேலியா. தனது முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி 157 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 604 ஓட்டங்களைப் பெற்றது. ஹடின் 42, ஹரிஸ் 35 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் அஸ்வின் 3, சகீர்கான் 2 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணிக்கு கம்பீர் - சேவாக் ஜோடி அதிரடியான தொடக்கத்தை கொடுத்தது. இருப்பினும் ஆஸ்திரேலியாவின் அபார பந்து வீச்சின் முன்னால் அவை தவிடு பொடியாகின. ஆஸி. துடுப்பாட்ட வீரர்களுக்குத் தாம் சற்றும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிப்பது போல ஆஸியின் பந்துவீச்சாளர்களைத் தம் பங்குக்குப் போட்டுத் தாக்கத் தொடங்கினார். அடிலெய்ட்டில் இவர்களின் வேகத்தால் பிற்பகலில் அனல் பறந்தது. இந்திய அணி 26 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சேவாக் 18 ஓட்டங்களுடன் சிடிலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த டிராவிட் ஓர் ஓட்டத்துடன் ஹில் பென்காஸ் பந்து வீச்சில் வழமை போல 'போல்டாகி' சாதனை படைத்து வெளியேறினார். அதுவரையும் துவண்டிருந்த இந்திய அணிக்கு டிராவிட்டின் சாதனை மட்டும் தான் சின்ன ஆறுதல். இதுவரையும் 55 தடவைகள் 'போல்டாகி' எட்ட முடியாச் சாதனையை டிராவிட் 'அசால்டாக' கடந்துள்ளார். இந்திய அணி 31 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்தநிலையில் இணைந்த கம்பீர், சச்சின் இருவரும் நேற்றைய ஆட்ட நேர நிறைவு வரையில் ஆட்டமிழக்காமல் துடுப்பெடுத்தாடினர். இந்திய அணி 21 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 61 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்துள்ளது. களத்தில் கம்பீர் 30, சச்சின் 12 ஓட்டங்களுடன் உள்ளனர்.

''சச்சின் சதத்தில் சதமடிப்பார் என்ற எதிர்பார்ப்பு இந்தப போட்டித் தொடர் ஆரம்பிக்கும் போது எல்லோரிடத்தும் இருந்தது. ஆனால் இப்போது அது இரசிகர்களிடத்தே துளியும் இல்லை. இந்திய அணியை மீட்டெடுக்க ஓரளவு ஓட்டங்களை சச்சின் பெற்றுக் கொடுத்தாலே போதும் என்ற நிலையே காணப்படுகின்றது. அணித்தலைவரை மாற்றிய போதும் ஆட்டத்தை இந்திய அணியால் மாற்ற முடியவில்லை. தொடர்ந்தும் இலக்குகளை இழக்க இந்திய அணி இன்று ஆடவுள்ளது'' என்று ரசிகர் ஒருவர் ஆதங்கத்துடன் தெரிவித்தார். (ங-15)



''எவ்வளவு தான் அடி விழுந்தாலும் வலிக்காத மாதிரி இளிச்சுக்கொண்டே இருக்க வேணும் இஷாந்த்!'' - **சொல்கிறார் யாதவ்.**



''பந்துக்கு என்மேல் என்னடி கோபம்? 'போல்டாய்' பறக்கிறதே'' - **மீண்டும் ஒருமுறை 'போல்டாகிய டிராவிட்.**

## வீழ்ந்து, எழுகிறது பாகிஸ்தான்

இங்கிலாந்தின் சுவான், புரோட் பந்து வீச்சில் போட்டுத் தாக்க பாகிஸ்தான் அணி ஆரம்பத்திலேயே தடுமாறியது. இருப்பினும் மிஷ்பா உல் ஹக் சிறப்பான அரைச்சதம் அடிக்க பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் தப்பிப் பிழைத்து 256 ஓட்டங்களை 7 இலக்குகளை இழந்து பெற்றுக் கொண்டது.

பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் டுபாயில் நேற்று புதன் கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்றைய ஆட்டநேர நிறைவு வரையில் 7 இலக்குகளை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் மிஷ்பா ஆட்டமிழக்காமல் 83, அஷாட் சபிக் 58, மொஹமட் ஹபீஸ் 31 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர்.

103 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தடுமாறிய பாகிஸ்தான் அணி மிஷ்பா, சபிக் இணைப்பின் மூலமே வலுவான நிலையை அடைந்தது. பந்து வீச்சில் இங்கிலாந்தின் சார்பில் வேகப் பந்து வீச்சாளர் புரோட் 3, சுழற் பந்து வீச்சாளர் சுவான் 3, மொன்டி பனஷார் ஒரு இலக்கினை கைப்பற்றினர். களத்தில் மிஷ்பா 83, அஜ்மல் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் உள்ளனர். நேற்றைய தினம் இங்கிலாந்து அணி 94 பந்து பரிமாற்றங்களை வீசியமை குறிப்பிடத்தக்கது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டார் மஹ்ரூப்



ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ஆஸ்திரேலிய, இந்திய அணிகளுடனான முக்கோண ஒருநாள் கிரிக்கெட் சுற்றுத் தொடருக்கான இலங்கைக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மஹேல ஜெயவர்த்தன தலைமையிலான இந்தக் குழாமில் 15 பேர் இடம்பெற்றுள்ளனர். நீண்ட காலத்தின் பின்னர் பர்வீஸ் மஹ்ரூப்பும் இந்தக் குழாமில் இடம்பெற்றுள்ளார்.

அணித்தலைவர் பதவியிலிருந்து திலகரட்ன டில்ஷான் ராஜினாமா செய்ததையடுத்து மஹேல ஜெயவர்தன புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 27 வயதான பர்வீஸ் மஹ்ரூவ் 2010 ஜூன் மாதம் இந்திய அணியுடனான ஆட்டத்தின் பின்னர் ஒருநாள் சர்வதேச ஆட்டங்களில் பங்குபற்றவில்லை.

பெப்ரவரி 5 ஆம் திகதி முதல் மார்ச் 8 ஆம் திகதி வரை இந்த சுற்றுத் தொடர் நடைபெறவுள்ளது.

இலங்கைக் குழாம் விவரம்: மஹேல ஜெயவர்தன (தலைவர்), அஞ்சலோ மத்தியூஸ் (உபதலைவர்), உப்புல் தரங்க, திலகரட்ன டில்ஷான், குமார் சங்ககார, தினேஷ் சந்திமால், லஹிரு திரிமன்னே, திஸர பெரேரா, பர்வீஸ் மஹ்ரூவ், ரங்கன ஹேரத், சச்சித்ர சேனநாயக்க, லஷித் மலிங்க, நுவான் குலசேகர, சானக வெலகெதர, தம்மிக பிரசாத்.

மாற்று வீரர் : திலான் சமரவீர.

# அஜ்மலுக்கு அக்ரம் ஆதரவு



டுபாயில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி அபார வெற்றி பெற்றது. இதில், பந்து வீசிய பாகிஸ்தான் வீரரான சயிட் அஜ்மல் பந்தை எறிகிறார் என்று இங்கிலாந்து ஊடகங்கள் தாக்குதல் தொடுத்தன. இதனை அக்ரம் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இங்கிலாந்து இதே கதையை எப்போதும் கூறி வருவது வழமைதான்.

ஒன்றுமேயில்லாத ஆடுகளத்தில் 3 நாள்களில் டெஸ்டை பாகிஸ்தான் வென்றமைக்குக் காரணம் அஜ்மலின் சிறப்பான பந்து வீச்சுத்தான்- என்று அவர் மேலும் கூறினார். (15)

# தேசிய அணியில் யாழ்.வீரர்



யாழ்ப்பாணம், ஜன.26

19 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்ட அணிக்கு நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வீரன் அ.அன்ரனி ஜெனற் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தேசிய அணிக்கு வீரர்களைத் தெரிவுசெய்யும் விளையாட்டுத்துறை அமைச்சின் 'கிரிடா சக்தி' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு வீரர் இவராவார்.

இவர் வார இறுதி நாள்களில் தேசிய அணிக்கான பயிற்சிகளைத் தேசிய பயிற்றுவிப்பாளர்களின் கீழ் மேற்கொண்டு வருகிறார். (த)

# களம் திரும்புகிறார் ஹொக்

இந்தியாவுக்கு எதிரான 'ரி-20' கிரிக்கெட் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியின் தலைவராக பெய்லி நியமிக்கப்பட்டுள்ளார். அந்தப் பதவியிலிருந்த கம்ரான் வையிட் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்திய-ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 'ரி-20' கிரிக்கெட் போட்டியில் முதல் ஆட்டம் சிட்னியில் பெப்ரவரி முதலாம் திகதியும், 2 ஆவது ஆட்டம் மெல்போர்ணில் 3 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இந்த ஆட்டங்களுக்கான ஆஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

29 வயதான ஜோர்ஜ் பெய்லி, அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். தலைவராக இருந்த கம்ரான் வையிட்டின் பதவி பறிக்கப்பட்டதுடன், அணியிலிருந்தும் அவர் நீக்கப்பட்டுள்ளார்.

2008 ஆம் ஆண்டில் சர்வதேசப் போட்டியிலிருந்து ஓய்வுபெற்ற 40 வயதான சுழற்பந்து வீச்சாளரான பிராட் ஹொக் மீண்டும் அணிக்குத் திரும்பியிருக்கிறார்.

'பிக்பாஷ்' இருபது-20 கிரிக்கெட் போட்டியில் சிறப்பாகப் பந்து வீசியமையால் அவருக்கு அணியில் இடம் கிடைத்துள்ளது.

இந்தியாவுக்கு எதிரான 'ரி-20' ஆட்டத்துக்கான ஆஸ்திரேலிய அணி வருமாறு:-

ஜோர்ஜ் பெய்லி (அணித் தலைவர்), டேவிட் வோர்னர் (துணைத்தலைவர்), டிராவிஸ் பிர்ட், டான் கிறிஸ்டியன், சேவியர் டோஹெர்த்தி, ஜேம்ஸ் பௌல்னர், அரோன் பிஞ்ச், பிராட் ஹொக், டேவிட் ஹஸி, பிரெட் லீ, மிட்செல் மார்ஷ், ஷேன் மார்ஷ், கிளின்ட் மெக்காய், மத்யூ வாடே. (15)

# இலங்கை நான்காவது இடத்தில்

ஐ.சி.சி. வெளியிட்டுள்ள ஒருநாள் கிரிக்கெட் ஆட்டங்களுக்கான தரவரிசைப்பட்டியலில், இந்திய அணி மீண்டும் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது. இலங்கை அணி நான்காவது இடத்திலுள்ளது.

சர்வதேச ஒரு நாள் ஆட்டங்களில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை, சர்வதேசக் கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) டுபாயில் நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில் இந்திய அணி 117 புள்ளிகளுடன் மீண்டும் இரண்டாவது இடம் பிடித்தது. இரண்டாவது இடத்தில் இருந்த தென்னாபிரிக்க அணி 116 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டது.

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரை தென்னாபிரிக்க அணி 3-2 என்ற கணக்கில் கைப்பற்றியபோதும், கடைசி இரண்டு ஆட்டங்களில் தோல்வியடைந்ததால், பின்னடைவைச் சந்தித்துள்ளது.

ஆஸ்திரேலிய அணி 130 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. இலங்கை அணி 111 புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் உள்ளது. (15)

## சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட தனங்கிளப்பு அறுகுவெளியில் மாடு பிடித்தலுக்கான கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தனங்கிளப்பு அறுகுவெளிப் பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து எங்களிடம் நான்கு நாள்கள் பராமரித்து ஒப்படைப்பதற்கான ஒரு மாட்டுக்கான மொத்தச் செலவு தொடர்பான கேள்வி அறிவித்தல் கோரப்பட்டுள்ளது. தங்களுக்கான கேள்வித் தொகையை தவிசாளர் சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம் என்னும் விலாசத்துக்கு 02.02.2012 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்கவும் அல்லது சாவகச்சேரிப் பிரதேச சபையில் இதற்கென ஒதுக்கப்பட்ட பெட்டியில் போடவும்.

02.02.2012 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கடிதங்கள் பார்வையிடப்பட்டு குறைந்த கேள்விக்காரருக்கு வேலை ஒப்படைக்கப்படும்.

***ஒப்பம் சி.துரைராஜா***
***தவிசாளர், சாவகச்சேரி பிரதேச சபை,***
***கொடிகாமம்.***

(C-8218)

## கண்ணீர் அஞ்சலி



உடுவில் பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்க
முகாமைத்துவ பணிப்பாளரும்
சுன்னாகம் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர்
திருமதி புஷ்பலோஜினி காசிவேந்தன்
அவர்களின் கணவருமான

**நடராசா காசிவேந்தன்**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபர்,
சமுர்த்தி முகாமையாளர்கள்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
ஊர்காவற்றுறை. (13493)

## கண்ணீர் அஞ்சலி



**சுன்னாகம் சமுர்த்தி வங்கியின்**
**முகாமையாளர்**
**திருமதி புஷ்பலோஜினி காசிவேந்தன்**
**அவர்களின் கணவரும் எமது சமுர்த்தி மகா சங்கத்தின் பணிப்பாளருமான**

**நடராசர் காசிவேந்தன்**

**அவர்களின் திடீர் மறைவையொட்டி ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் அன்னாரின் குடும்பத் தினருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.**

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.
வலயம் II சமுர்த்தி வங்கிச் சங்கம், சுன்னாகம்.

(C-8223)

# வெளியேறினார் வொஸ்னியாக்கி

ஆஸ்திரேலிய ஓப்பின் டென்னிஸ் தொடரின் காலிறுதியாட்டம் ஒன்றில் முதல் நிலை வீராங்கனையான கரோலின் வொஸ்னியாக்கியை கடும் போராட்டத்துக்கு மத்தியில் முன்னாள் முதல் நிலை வீராங்கனையான கிம் கிளிஸ்டர்ஸ் வெற்றிகொண்டார்.

மற்றொரு பெண்கள் பிரிவு காலிறுதியாட்டத்தில் மூன்றாம் நிலை வீராங்கனையான விக்டோரியா அஸரென்கா வெற்றிகொண்டார். ஆண்கள் பிரிவில் பெடரர் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார்.

இந்த ஆண்டின் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துப் பெற்ற முதலாவது டென்னிஸ் தொடரான ஆஸ்திரேலிய ஓப்பின் தொடர் மெல்போர்ணில் நடைபெற்றுவருகிறது. இத்தொடர் மிகவும் பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

இதில், நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு காலிறுதியாட்டம் ஒன்றில், முதல் நிலை வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வொஸ்னியாக்கி, முன்னாள் முதல் நிலை வீராங்கனையும் தற்போது பதினோராவது நிலையில் உள்ளவருமான பெல்ஜியத்தின் கிம் கிளிஸ்டர்ஸை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தின் முதல் சுற்றை 6-3 என்ற கணக்கில் கிம் கிளிஸ்டர்ஸ் வெற்றிகொண்டார். இதையடுத்து இரண்டாவது ஆட்டத்தில் வெகுண்டெழுந்த வொஸ்னியாக்கி கடும் சவால் விடுத்தார்.

பெரும் பரபரப்பாக நடந்த இரண்டாவது செற்றை கடும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் வெற்றிகொண்ட கிளிஸ்டர்ஸ், 6-3, 7-6 என்ற செற் கணக்கில் வெற்றிகொண்டு அரையிறுதிக்கு முன்னேறினார்.

ஏற்கனவே, காலிறுதியாட்டத்தில் சீனாவின் நா லீயை, கிம்கிளிஸ்டர்ஸ் வீழ்த்தியிருந்தார்.

கரோலின் வொஸ்னியாக்கி இதுவரை கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துப் பெற்ற பட்டங்கள் எதையும் வெல்லவில்லை. இந்தத் தொடரிலும் அவரால் அந்தப் பட்டத்தை வெல்லமுடியவில்லை. பரிதாபமாக தொடரை விட்டு வெளியேறினார்.

இதேவேளை, நேற்று மாலை நடைபெற்ற ஆண்கள் பிரிவு காலிறுதியாட்டம் ஒன்றில், [illegible] நிலை வீரரான பெடரர் 6-4, 6-3, 6-2 என்ற கணக்கில் ஜுவன் மார்டினை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

## கண்ணீர்க் காணிக்கை

யா/சில்லாலை றோ.க.த.கலவன் பாடசாலையில்
ஆசிரியராகக் கடமையாற்றும் திருமதி.சி.பத்மாம்பிகை
அவர்களின் அன்புச் சகோதரன்

**செ.இராசரத்தினம்**

அவர்கள் 22.01.2012 அன்று டென்மார்க்கில் சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது இதயபூர்வமான கண்ணீர்க் காணிக்கைகளைச் செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/சில்லாலை றோ.க.த.க.பாடசாலை,பண்டத்தரிப்பு

(13492)

## கண்ணீர் அஞ்சலி



வட்டுக்கோட்டை மின்பாவனையாளர் சேவை நிலையப் பணிமனையில் பணிபுரியும் கந்தசாமி பாலசுப்பிரமணியத் தின் அன்பு மைத்துனர்

*நடராஜா காசிவேந்தன்* (B.COM,MA)

முகாமைத்துவ பணிப்பாளர், சமுர்த்தி மகாசங்கம், உடுவில் அவர்கள் 22.01.2012 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு துயரம் அடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*இ.மி.ச., வட்டுக்கோட்டை*

மின் அத்தியட்சகரும், சக ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்

### *தேவதாஸ் விவேகானந்தன்*



யாழ்ப்பாணம் கோப்பாயைப் பிறப்பிடமாகவும், கல்வயலைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தேவதாஸ் விவேகானந் தன் (25.01.2012) புதன் கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தேவதாஸ் மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் அருளம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், சதானந்தன், விபுலானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிரகாஸ், பிரதீபன், லோகேஸ் (கட்டார்), கௌசல்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், செந்தில் நாய்கியின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்வயல்,*
*சாவகச்சேரி.* (11570)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பியில் மயங்கிய சாரதி; பறிபோனது சொகுசு வாகனம்

வாடகை வாகனமொன்றின் சாரதிக்கு கோப்பியில் மயக்க மருந்தைக் கலந்து கொடுத்துவிட்டு 45 இலட்சம் பெறுமதியான சொகுசு வாகனமொன்று கடத்தப்பட்டுள்ளது. கொழும்பு, பொறளையிலேயே இந்த வாகனக் கடத்தல் நடைபெற்றுள்ளதாக பொறளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது:-

வெலிக்கடைப் பிரதேசத்தில் வாடகை வாகனச் சேவையை தனியார் நிறுவனமொன்று நடத்திவருகின்றது.

குறித்த நிறுவனத்திடம் தொலைபேசி அழைப்பொன்றின் ஊடாக தான் ஒரு மருத்துவர் என்று அறிமுகம் செய்து கொண்டார் ஒருவர். தனது தேவைக்கு எனக் கூறி வாடகை வாகனமொன்றை அவர் குறித்த நிறுவனத்திடமிருந்து வரவழைத்துள்ளார்.

அதற்கமைய கடந்த 21ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு வாகனத்துடன் சென்ற சாரதி குறிப்பிட்ட நபர் கொடுத்த முகவரிக்குச் சென்றுள்ளார். அங்கு கொழும்பு ''கோல் பேஸ்'' ஹோட்டலில் உள்ள வெளிநாட்டவர் குழுவொன்றையும் அழைத்துச்செல்ல வேண்டியிருப்பதால் அவர்களிடமிருந்து தொலைபேசி அழைப்பு வரும் வரையில் சற்றுப் பொறுத்திருக்குமாறு சாரதிக்குத் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு காத்திருந்த சாரதிக்கு அவர்கள் கோப்பி வழங்கி உபசரித்துள்ளனர். அதை அருந்திய பின்னர் சாரதி மயங்கி விழுந்தார். அவர் கண்விழித்தபோது நிட்டம்புவ பிரதேசத்தில் கண்டி வீதியின் ஓரமாக கிடத்தப்பட்டிருந்தார். இது குறித்து சாரதி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

நிட்டம்புவ ஊடாகக் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாகக் கருதப்படும் மேற்படி வாகனத்தையும் சந்தேக நபர்களையும் பொலிஸார் தேடி வருகின்றனர். (ங-22)




பாராட்டி வாழ்த்துகின்றோம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் செயலாள ராகக் கடமையாற்றி சாவகச்சேரி நகரசபைக்கு செயலாளராக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள

**திரு.சு.புத்திசிகாமணி**

அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதோடு வட்டுக்கோட்டைப் பிரதேச சபை உப அலு வலகத்தின் பொறுப்பதிகாரியாக் கடமையாற்றி வலி.மேற்கு பிரதேச சபைத் தலைமையகத்தின் செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள

**திருமதி சாரதா உருத்திரசம்பவன்**

அவர்களை முரளி கிருஷ்ணா ஞாபகார்த்த திருநாவுக்கரசு சனசமூக நிலையத்தின் சார்பாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாண்டவெட்டை, சுழிபுரம். (13494) நா.டினோபன் உப செயலாளர்.



கண்ணீர் அஞ்சலி



உடுவில் பிரதேச சமுர்த்தி மகா சங்க முகாமைத்துவப் பணிப்பாளரும் சுன்னாகம் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் திருமதி புஷ்பலோஜினி காசிவேந்தனின் அன்புக் கணவருமான

**நடராசா காசிவேந்தன்**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம் வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி (C-8227) சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.



கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 02 ★ 08 ★ 1942



இறப்பு 25 ★ 01 ★ 2012

குருத்துவம்:- 20.11.1971

அமரத்துவம் அடைந்த எமது பங்கின் முன்னாள் பங்குத் தந்தை -மிருசுவில் (1993-1998)

**அருட்திரு இராசசிங்கம் பீற்றர் துரைரெட்ணம்**

அடிகள் எமது பங்கில் ஆற்றிய அளப்பரிய பணிகளை நன்றியுடன் நினைவு கூருகின்றோம். அடிகளின் ஆன்மா இறை சன்னிதானத்தில் அமைதியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புனித காணிக்கை அன்னை ஆலயம் தவசிகுளம், மிருசுவில். பங்குத் தந்தையும் பங்கு மக்களும்


## கடல் உணவு உற்பத்தி கடந்த வருடம் ஏறுமுகத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்.மாவட்டத்தில் 2011ஆம் ஆண்டில் 24 ஆயிரத்து 230 மெற்றிக் தொன் கடல் உணவு உற்பத்தி செய்யப்பட்டதாக மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் புள்ளிவிவரத் தரவு மூலம் தெரியவருகிறது.

1990ஆம் ஆண்டின் பின்னர் கிடைத்த கடலுணவு உற்பத்தியின் வருடாந்த அளவுகளிலும் பார்க்க கடந்த வருட உற்பத்தியின் அளவு அதிகம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் 1983ஆம் ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடும்போது கடந்த வருடத்தின் உற்பத்தியின் அளவு அரைப் பங்கு மட்டுமே ஆகும். 1983ஆம் ஆண்டில் 48 ஆயிரத்து 677 மெற்றிக் தொன் கடலுணவு யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

இது 1984 இல் 23 ஆயிரத்து 157 மெற்றிக் தொன்னாக சடுதியாகக் குறைவடைந்தது. பின்னர் 1989 இல் 25 ஆயிரத்து 7 மெற்றிக் தொன்னாக இது அதிகரித்தது. போர் உக்கிரம் கொண்டதால் 1990 ஆம் ஆண்டிலிருந்து கடலுணவு உற்பத்தியின் அளவு குறைவடையும் போக்கை புள்ளிவிவரங்கள் மூலம் அது தானிக்கமுடிந்தது.

இது பின்னர் 2003 மற்றும் 2004 இல் 21 ஆயிரத்து 206 மெற்றிக் தொன்னாக அதிகரித்தது. தற்போது 2011 இல் கடலுணவு உற்பத்தி 24 ஆயிரத்து 230 மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடற்றொழில் செய்து வந்த குடும்பங்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளமை, கடற்றொழிலாளர்களுக்குத் தேவையான கடற்றொழில் உபகரணங்கள் கிடைத்துள்ளமை, பல நாள் கொள்கலன்கள் பயன்படுத்தும் போக்கு அதிகரித்துள்ளமை ஆகிய காரணங்களாலேயே கடலுணவு உற்பத்தியின் அளவு அதிகரித்துள்ளது என்று யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரன் தெரிவித்தார். (ங-14)

## விடுதலைப்புலி உறுப்பினர் கைது

மன்னார் இலுப்பைக் கடவை பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் என்று சந்தேகிக் கப்படும் ஒருவர் கடந்த திங்கட்கிழமை கைது செய் யப்பட்டுள்ளார்.

மத்திய மாகாண தீவிர வாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட நபர் தீ வி ர வா த செயற்பாடுகளில் ஈடுபட்டவர் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் கண்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர் பில் மேலதிக விசாரணை களில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ச)


பாராட்டி வாழ்த்தி வரவேற்கின்றோம்



வலிகாமம் மேற்குப் பிரதேச சபைச் செயலாளராக அரும்பணியாற்றி சாவகச்சேரி நகரசபை செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள மதிப்புக்குரிய

**திரு.சுப்பிரமணியம் புத்திசிகாமணி**

அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்தி எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.



மற்றும் பதவி உயர்வு பெற்று எமது பிரதேச சபையின் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள மதிப்புக்குரிய

**திருமதி.சாரதா உருத்திரசம்பவன்**

அவர்களையும் அகமகிழ்ந்து வரவேற்கின்றோம்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம். (13495) உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.



கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனக் கணக்காளர் திரு. ஆனந்தநடராசா கனகசபை அவர்களின் பாசமிகு சகோதரன்

**ஆனந்தநடராசா சிதம்பரநடராசா**

அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு துயரடைகின் றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன் பணிமனை 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C-8220) நிர்வாகப் பணிப்பாளரும் பணியாளர்களும்.


# மரண அறிவித்தல்கள்

## அருட்திரு.பீற்றர் துரைரெட்ணம்



வசாவிளான் உத்தரிய மாதா கோயிலடி யைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கத் தோலிக்க மறைமாவட்ட குருவுமாகிய அருட் திரு.பீற்றர் துரைரெட்ணம் அடிகளார் 25.01.2012 புதன்கிழமை காலை இறைபதமடைந்தார்.

அடிகளார் வசாவிளானைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இளைப்பாறிய அதிபர் இரா யப்பு இராஜசிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அருமைப் புதல்வனும், றெஜினா (இத்தாலி), திரேசம்மா (கனடா -வன்கூவர்), இம்மானுவேல் (மட்டக்களப்பு), காலஞ்சென்ற லூயிஸ் அல்பிரம் மற்றும் பிலோமினா (பத்தாவத்தை), லூட்ஸ் (கனடா), பேர்னடேற் (வேவி-பத்தாவத்தை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், பரராஜ சிங்கம் மற்றும் சகுந்தலாநாயகி (கொழும்பு), நேசமலர் (கனடா), எட்வேட்ராஜா (பத்தாவத்தை), கருணாதிராசா (கனடா), விக்ரர் இம்மானுவேல் (பத்தாவத்தை) ஆகியோரின் அன்பு மைத் துனரும், அருட்திரு. ஜேம்ஸ் சிங்கராயர் (அதிபர், புனித அந் தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), அருட்திரு. எட்விநாதன் (பகுதித் தலைவர், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்), அருட்திரு. அன்ருதவராஜசிங்கம் (கனடா - மொன்றியல்), அருட்சகோதரி. வேர்ஜி (H.C) ஆகியோரின் மாமனாரும், காலஞ் சென்ற அருட்சகோதரி மரிய புருடென்சியா (A.C), அருட்ச கோதரி மரிய பரமேஸ் (A.C Lourds Convent) ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும் ஆவார்.

அடிகளாரின் இரங்கல் திருப்பலி யாழ்.மரியன்னை பேரா லயத்தில் 26.01.2012 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம் பெற்று, யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **அருட்திரு ஜேம்ஸ் சிங்கராயர்.** (மருமகன்)

ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## திருமதி மனோன்மணி இரத்தினசிங்கம்



அச்சுவேலி தெற்கு, நாவலம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி இரத்தினசிங்கம் நேற்று (25.01.2012) புதன் கிழமை காலமானார்.

அன்னார் கதிரவேலு- கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்தம்பி-செம்பி தம்பதியரின் பாசமிகு மருமகளும், இரத்தினசிங்கத்தின் (மெக்கானிக் கிளி) அன்பு மனைவியும், மங்களேஸ்வரி, இந்திரலிங்கம் (குலம்), காலஞ்சென்ற தெய்வலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், லிங்கேஸ்வரி, சந்திரகுமார்(அருணகிரி), இந்திரகுமார்(அருணன்), சௌந்திரி ஆகியோரின் அன்புத் தாயும், சுந்தரலிங்கம் (குவைத்), பாமா, உதயகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு, முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சௌந்தரி மெக்கானிக் ஷொப்,
காட்டுமலை கந்தசுவாமி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

தகவல்: சி.இரத்தினசிங்கம் (மெக்கானிக் கிளி)- கணவர்.

## சதாசிவம் கனகசபை (ஆச்சாரியார்)

[உரிமையாளர்- இரும்புத் தொழிலகம், அந்தோனியார் கோயிலடி, மானிப்பாய்]



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் கனகசபை (ஆச்சாரியார்) நேற்று (25.01.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் -இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் -ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும், மனோகரனின் (இரும்புத் தொழிலகம்-மானிப்பாய்) அன்புத் தந்தையும், யோகலட்சுமியின் அன்பு மாமனும், சுதர்ஜனன், கிரிஜா (நோர்வே), நீரஜா, சிந்துஜா, பானுதன், ரதி, றஜீவன், நிதிபாலன், பிரகாஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும், சாயிதன், மதீசன், டிலக்ஷி, சிமேகா, மிதுசாளினி, அக்ஷயன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.01.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூத்தவிநாயகர் கோயிலடி,
சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி, பொலிஸ் அதிகாரங்களை தமிழ் மக்களுக்கே கோரவில்லை – பஸில்

1 »

பாக அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு மக்களுடன் எனக்கு நெருங்கிய தொடர்பிருந்ததால், அவர்களின் பிரச்சினைகள் என்னவென்பதை நான் நன்கு அறிவேன். புலிகள் இருந்த காலத்தில் நானே இப்பிரதேசங்களுக்கு உணவு, மருந்துப்பொருள்கள் ஆகியவற்றை விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றிருந்தேன்.

வடக்கு, கிழக்கு மக்கள் தங்களுக்கு காணி அதிகாரத்தையோ அல்லது பொலிஸ் அதிகாரத்தையோ தரும்படி கோரவில்லை. அரசியல் கட்சியொன்றே அதைக் கோருகின்றது. காணி இல்லாதவர்கள் காணி தரும்படியும், மற்றுமொரு சாரார் சுமுகமாக வாழ்வதற்கு பாதுகாப்பையுமே கோருகின்றனர். அவற்றை வழங்குவதற்கு அரசு தயாராகவே உள்ளது.

தெரிவுக்குழுவினூடாகவே பிரச்சினைகள் பரிசீலிக்கப்படவேண்டும். இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இது தொடர்பில் தனது நிலைப்பாட்டை உறுதியாகத் தெளிவுப்படுத்தியுள்ளார்.

இன்று நாட்டில் சகல ஆளுமையும் அதிகாரமும் கொண்ட அதிஉயர் பீடம் தான் நாடாளுமன்றம். எந்த வகையில், எந்த வழியில், எவர் மூலமாக ஒரு தீர்வு வந்தாலும் அதனை அங்கீகரித்து சட்டவல்லமை கொடுப்பது நாடாளுமன்றம்தான். எனவே தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகச் சகல அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கி நாடாளுமன்றத் தெரிவுக்குழு உருவாக்கப்படவேண்டும் என்பதே ஜனாதிபதியின் நோக்கம்.

இதன்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்கு கொண்டு ஆக்க பூர்வமான ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும். அதன் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு சகல தரப்பினரது இணக்கப்பாட்டுடன் நிரந்தரமான தீர்வைக்காண முடியும்.

முழு அரசையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்தக் கருத்துகளை நான் தெரிவிக்கவில்லை. இது எனது தனிப்பட்ட கருத்தாகும். அதற்கான சுதந்திரம் எனக்கு உண்டு எனக் கருதுகின்றேன் - என்றார். (உ-2)

## மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 26

'உரிய மருந்துவர்கள் இல்லாமல் தனியார் பல்வைத்திய நிலையங்கள்' என்ற தலைப்பில் நேற்று உதயனில் வெளியான செய்தி தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் மருத்துவ ஆய்வுகூடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் விளக்கமளித்துள்ளனர்.

அந்த விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மேற்படி செய்தியில் மருந்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் மட்டும் நடத்தப்படுகின்ற தனியார் பல்வைத்திய நிலையம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையானது யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர்களாகிய எமக்கு பெரும் களங்கத்தை ஏற்படுத்தி உள்ளது. எமது தொழில்துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் எவரும் எந்தவொரு தனியார் பல்வைத்திய நிலையத்தையும் நடத்தவில்லை - என்றுள்ளது.

## ஊடக சுதந்திரம் இலங்கைக்கு 163

1 »

ஆண்டுக்கான இந்தப் பட்டியலில் இலங்கைக்கு 163வது இடமே கிடைத்துள்ளது. கடந்த ஆண்டில் இலங்கை 158வது இடத்தில் இருந்தது. இலங்கையில் போர் தீவிரமாக இடம்பெற்ற 2009ஆம் ஆண்டில் 162வது இடத்தில் இருந்து 2012 இல் பின்தள்ளப்பட்டுள்ளது.

ஊடகங்கள் மீதான கெடுபிடிகள், தாக்குதல்கள், இணையத் தளங்கள் மீதான நேரடியான கட்டுப்பாடுகள், தணிக்கைகள் காரணமாகவே இலங்கை இந்தப் பட்டியலில் பின்தள்ளப்பட்டதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தப் பட்டியலில் முதலாவது இடத்தை பின்லாந்தும் நோர்வேயும், மூன்றாவது இடத்தை எஸ்தோனியாவும், நெதர்லாந்தும் பிடித்துள்ளன. 179 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில் கடைசி இடத்தை எரித்திரியா பெற்றுள்ளது.

## பண்டத்தரிப்பில் நேற்றுப் பரபரப்பு இரு மனித எலும்பு எச்சங்கள் மீட்பு

1 »

இந்த இரு எலும்புக்கூடுகளும் இளவாலைப் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

சில மாதங்களுக்குள் இறந்தவர்களுடைய எலும்பு எச்சங்களாக இவை இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றபோதும், முழுமையான உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்பே அதனை உறுதிப்படுத்த முடியும் என்று அதிகாரிகள் கூறினர்.

கிணற்றில் நீர் வற்றி விட்டதால் அப்பகுதி விவசாயிகள் அதனைத் துப்புரவு செய்தனர். கிணற்றினுள் இறங்கியவர்கள் அதற்குள் மனித மண்டையோடுகளைக் கண்டனர்.

உடனடியாக இளவாலைப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். மல்லாகம் நீதிவான் கே.கஜநிதிபாலன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார். அவரது பணிப்பின் பேரில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டன.

இரண்டு மண்டையோடுகளும் எலும்பு எச்சங்களும் மீட்கப்பட்டன. ஆண்களின் உள்ளாடைகளும் மேலாடையும் கூடக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இராணுவத்தினர் பயன்படுத்துவது போன்ற தோற்றமுடைய பச்சை நிறத்திலான துணியும் கிணற்றிலிருந்து கிடைத்துள்ளது.

ஒரு மண்டையோட்டினுள் சிதைவடையாத நிலையில் மூளை காணப்பட்டதாகவும் அதிகாரிகள் கூறினர்.

எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் அனைத்தும் நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டன. (உ-15)

## காணாமற்போன யுவதி கொல்லப்பட்டாரா?

1 »

யுவதியின் மண்டையோடு எலும்புகள் என்பன மீட்கப்பட்டுள்ளன. குறித்த இடத்துக்கு வேட்டைக்குச் சென்ற சிலர் அப் பகுதியில் ஆடைகள் மற்றும் காலணி என்பவற்றைக் கண்டுள்ளனர்.

உடனடியாகவே இது குறித்து பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. மதியவேளை சம்பவ இடத்துக்குச் சென்ற சாவகச்சேரிப் பொலிஸார், சாவகச்சேரி மாவட்ட நீதிபதி, சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் தடயங்களை ஆராய்ந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

மண்டையோட்டுடன் குறிக்க யுவதி அணிந்திருந்த ஆடைகளும் மீட்கப்பட்டன. அத்துடன் குறித்த பெண்ணின் உள்ளாடைகளில் காணப்பட்ட தடயங்களைக் கொண்டு அவர் பலரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின்போது சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த யுவதி கடந்த வருடம் நவம்பர் மாதம் 29ஆம் திகதி வங்கி ஒன்றில் கடன் பெறுவதற்குச் செல்வதாகத் தெரிவித்து காலையில் வீட்டில் இருந்து [illegible] சென்ற பின்னர் காணாமற்போனதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-15-4-131-207)

# பருத்தித்துறையில் 17 வயது மாணவி கடத்திச் செல்லப்பட்டுப் படுகொலை

1 »

கோயிலடிக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் இருந்தே அவரது சடலம் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாணவி தனது வீட்டுக்கு அண்மையில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு பாலியல் இம்சைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னரே கொல்லப்பட்டுள்ளதாகச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு உடனடியாக விரைந்த பருத்தித்துறைப் பொலிஸாரும் இராணுவத்தினரும் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். மாணவியின் சடலம் நேற்று இரவு வரை சம்பவ இடத்திலே இருந்ததாகக் கூறப்பட்டது. மாணவி கடத்தப்பட்டுப் பாலியல் இம்சைக்கு உட்படுத்தப்பட்டாரா என்பதனை உறுதிப்படுத்த முடியவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரியிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது மாணவியின் சடலம் மீட்கப்பட்டதை உறுதிப்படுத்திய அவர் மாணவி பாலியல் இம்சைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொல்லப்பட்டாரா என்பதை இப்போது உறுதியாகக் கூறமுடியாது எனத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொல்லப்பட்ட மாணவியின் உறவினர் ஒருவர் உதயனுக்குத் தகவல் தருகையில் ''மாணவி டிலக்சனா அவரது வீட்டுக்கு மிக அருகில் வைத்தே கடத்தப்பட்டுள்ளார். சக்கோட்டைப் பழைய வேதக் கோயிலடிக்கு அருகில் அவரது வீடு உள்ளது. வீட்டில் இருந்த மாணவியின் தாயும் தகப்பனும் அலுவல் நிமித்தம் வெளியே சென்று விட்டனர். இந்த வேளையில் மாணவி அயலில் உள்ள ஆலயம் ஒன்றில் வழிபாட்டில் ஈடுபட்டு விட்டு வீட்டுக்குத் திரும்பினார். மாலை 6.30 முதல் மாலை 6.45 மணி வரையான இடைப்பட்ட நேரத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்க வேண்டும். வீட்டுக்கு மிக அருகில் வைத்து மாணவியை யாரோ கடத்திச் சென்றுள்ளனர். கடத்தப்பட்ட அவர் அருகில் உள்ள ஆள்களற்ற வீடொன்றில் வைத்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். மாணவியின் உடலெங்கும் நகக் கீறல் காயங்கள் காணப்பட்டன. அவரது ஆடைகளும் கலைந்திருந்தன. அவர் பாலியல் இம்சைக்கு உட்படுத்தப்பட்டாரா என்பது தெரியாது.

அலுவல் முடிந்து வீடு திரும்பிய தாயும் தகப்பனும் மகளைக் காணாது தேடியுள்ளனர். இந்த வேளையிலேயே அவரது சடலம் அருகிலுள்ள வீடொன்றில் இருந்தமை தெரியவந்தது. இதனை அடுத்து அப்பகுதியில் பெரும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது. சம்பவத்தை கேள்வியுற்று பொலிஸாரும் படையினரும் அங்கு வந்து குவிந்தனர்.'' என்றார்.

மாணவி பாலியல் இம்சைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொல்லப்பட்டாரா என்ற கோணத்தில் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். எனினும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் நேற்றிரவு 10.30 மணிவரை கைது செய்யப்படவில்லை எனவும் பொலிஸார் கூறினர். (த-319)

## மக்களின் கோரிக்கையையே கூட்டமைப்பு பிரதிபலிக்கிறது

1 »

கும் வகையில் கருத்து வெளியிடும்போதே செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மக்கள் பொலிஸ், காணி அதிகாரங்களைக் கோரவில்லை என்றும், அவர்கள் காணி மற்றும் சுமுகமாக வாழக்கூடிய வகையிலான பாதுகாப்பு ஆகியவற்றையே கேட்கின்றனர் என்றும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கருத்து வெளியிட்டிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான் பொலிஸ், காணி அதிகாரங்களைக் கேட்கின்றனர் என்ற தொனியில் அமைச்சர் பஸில் கருத்து வெளியிட்டார்.

இது குறித்துக் கேட்டபோது செல்வம் மேலும் கூறியவை வருமாறு:-

மாகாணசபைகளுக்கு கட்டாயம் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். அதிகாரங்கள் வழங்கப்படாவிட்டால் அவை கையாலாகாத சபையாகவே செயற்படவேண்டியிருக்கும்.

பொலிஸ், காணி அதிகாரங்கள் மாகாணசபையின் கட்டுப்பாட்டில் இருந்தால்தான் அது முழுமைபெறும். இல்லையேல் அது முழுமை பெறாது.

மாகாணசபை என்பது ஓர் அரசு. அதற்கென்று சில அதிகாரங்கள் அவசியம். குறிப்பாக, காணிகள் அபகரிக்கப்படும்போது அதனைக் கைகட்டி வேடிக்கை பார்க்க முடியாது. காணி அதிகாரங்களை முழுமையாகக் கையாளக்கூடிய வகையில் அதிகாரப்பரவலாக்கல் அவசியம். அதேபோன்றுதான் பொலிஸ் அதிகாரமும்கூட.

எமது மக்களுக்கு காணி அவசியமாக இருக்கலாம். ஏன், அதனை அவர்கள் அரசிடம் கோரியிருக்கலாம். எனினும், மக்களுக்குத் தேவையான அதிகாரங்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது மக்கள் பிரதிநிதிகளின் கடமை. அதனைத்தான் நாம் செய்கின்றோம்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் நாங்கள். எனவே, மக்களின் கோரிக்கைகளைப் பிரதிபலிக்கும் உரிமை எமக்குள்ளது. நாம் எமது மக்களின் ஆணையைப் பெற்றவர்கள். அவர்களுக்கு விசுவாசமாகத்தான் செயற்படுவோம் - என்றார். (உ-சி)

# சர்வதேச போர்க்குற்ற விசாரணை அமெரிக்கா உடன் வலியுறுத்தாது

1 »

பயணத்தை ரத்துச் செய்திருந்தார். ஜனாதிபதியின் நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு, போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறத் தவறியதே அவரது இந்த முடிவுக்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவற்றை அடுத்து ஜெனீவாவில் இலங்கைக்குக் கடும் நெருக்கடி இருக்கும் என்ற எதிர்பார்ப்புப் பரவலாக உள்ளது. ஆனால், இலங்கைக்கு எதிராகச் சர்வதேச போர்க்குற்ற விசாரணை ஒன்றைக் கோருவதற்கான எந்த ஒரு முயற்சியையும் ஜெனீவா கூட்டத் தொடரில் அமெரிக்கா ஊக்குவிக்காது என்று வோஷிங்ரன் செய்திகள் திட்டவட்டமாகக் கூறுகின்றன.

''போர்க்குற்ற விசாரணை ஒன்று வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் எந்த ஒரு சமயத்திலும் குரல் கொடுக்காத நிலையில், அத்தகைய ஒரு விசாரணையை அமெரிக்கா வலியுறுத்தக்கூடாது என்பதே ராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளதும் ஆலோசகர்களதும் பரிந்துரை'' என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

''ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அடுத்த ஜெனீவா கூட்டத் தொடரில் அதிகபட்சமாக, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு உடனடியாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்ற அழுத்தம் மட்டுமே வழங்கப்படும். இதுவே தற்போதைய நிலைமை'' என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

எனினும், ''தமிழர் தரப்பிலும் மனித உரிமைகள் தரப்பிலும் தொடர்ச்சியான அழுத்தங்களைக் கொடுக்கும் பட்சத்திலும், சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு அதிக நாடுகளின் ஆதரவைப் பெறும்பட்சத்திலும் அமெரிக்காவின் முடிவு [illegible] ர்க்காவிலிருந்து செயற்படும் தமிழ் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

''போர்க்குற்றச்சாட்டுக்களை வலியுறுத்தும் குரல்கள் தாயகத்திலிருந்தும் அதிகளவில் எழுப்பட்டாலேயே எமது முயற்சி விரைவில் சாதகமாகக்கூடும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற விசாரணை ஒன்றை மேற்கொள்ள அமெரிக்காவை நம்பி இருந்தால் அது மிக நீண்டகாலச் செயற்பாடாகவே இருக்கும் என்று [illegible] இராஜ[illegible] ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொன்னாலைக் கடலில் அகற்றப்பட்ட சிறகு வலைகள்

யாழ்ப்பாணம், ஜன.26
பொன்னாலைப் பாலத்தில் இருந்து 50 மீற்றருக்குள் வீசப்பட்டிருந்த மூன்று மீனவர்களினது ஐந்து சிறகு வலைகள் நேற்றுமுன்தினம் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் அகற்றப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டக் கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரன் தலைமையிலான திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் அதிகாலை நேரில் சென்று அங்கு போடப்பட்டிருந்த சிறகு வலைகளை அகற்றியுள்ளனர்.

பொன்னாலைப் பிரதேசத்தில் உள்ள கடற்றொழில் சமாசங்களின் உதவியுடனேயே சிறகு வலைகளை அகற்றியுள்ளதாகத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரன் கூறி னார்.

பொன்னாலைப் பாலத்தில் இருந்து 50 மீற்றருக்குள்ளும், பண்ணை வீதியில் இருந்து 15 மீற்றருக்குள்ளும் சிறகு வலைகள் பயன்படுத்தக் கூடாது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

போடப்பட்டுள்ள சிறகு வலையை அகற்றுவதற்கும் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் சிறகு வலைகள் பொன்னாலைப் பகுதியில் இருந்து அகற்றப்பட்டுள்ளன.

சிறகு வலைகள் பயன்படுத்திய மீனவர்கள் மூவரும் மன்னிப்புக் கேட்டதன் பிரகாரம் அந்த வலைகள் மீளவும் மீனவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பண்ணைப் பகுதியில் வீதியோரமாகப் போடப்பட்டிருந்த சிறகு வலைகளை மீனவர்களால் இன்னமும் அகற்றப்படாமல் உள்ளன.

உடனடியாக மீனவர்கள் அந்த வலைகளை 15 மீற்றருக்கு அப்பால் போட வேண்டும் எனவும் இல்லையேல் அவை அகற்றப்படுவதுடன் மீனவர்களுக்கு எதிராக நடவடிக்கையும் எடுக்கப்படும் என்றும் கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கூறினார். (ம-14)

## ஈரானில் குழப்பம் ஏற்பட்டால் அதனால் இலங்கைக்கும் பாதிப்பு

### அமைச்சர் பஸில் தெரிவிப்பு

அமெரிக்காவின் நடவடிக்கையால் ஈரானில் அசாதாரண நிலை ஏற்படுமாயின், அது எமது நாட்டுக்கும், பொருளாதார ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். எனினும், அதனைச் சமாளிக்கக் கூடிய வகையில் நாம் முன்னேற்பாடுகளைச் செய்துவருகிறோம் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கும், ஈரானுக்குமிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையால் ஈரானில் ஏதாவது அசம்பாவிதங்கள் இடம்பெற்றால், அவை எமது நாட்டு பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துமா எனக் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

ஈராக்குக்கு எதிராக தாக்குதல் நடத்தப்பட்டபோதும், எமது நாட்டுப் பொருளாதாரத்தில் அது தாக்கத்தை ஏற்படுத்தியது.

அங்கு ஏற்பட்ட அசாதரண நிலைமை காரணமாக இலங்கையர்கள் பலர் வேலைவாய்ப்புகளை இழந்து நாடு திரும்பினர்.

எனவே, தற்போது நீங்கள் கூறுவதுபோல் ஈரானில் பாரதூரமானதொரு நிலை ஏற்பட்டால், அதுவும் எமது பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். - என்றார்.

## சிறுவர்களின் முன்மாதிரி" மின்சார சபை முட்டுக்கட்டை

யாழ்ப்பாணம், ஜன. 26
தமது கிராமத்து சனசமூக நிலையத்துக்கு ஒளியூட்டுவதற்கு பாடுபட்ட சிறுவர்களின் முன்மாதிரியான செயற்பாட்டுக்கு மின்சார சபையினரின் முன்கோப நடவடிக்கை நேற்று மாலை முட்டுக்கட்டை போட்டுள்ளது

இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

அரியாலை சிறிகலைமகள் சனசமூக நிலையம் மின்சாரசபைக்கு உரிய காலத்தில் மின் கட்டணத்தை செலுத்தவில்லை என்று கூறி அதன் மின் இணைப்பு மூன்று வருடங்களுக்கு முன்னர் துண்டிக்கப்பட்டது. அதன்பின்னர் இருளிலேயே சனசமூக நிலையம் இருந்துவந்தது.

இந்த நிலையில் தமது பிரதேச சனசமூக நிலையம் தொடர்ந்தும் இருளில் மூழ்கியிருக்கக் கூடாது என்று எண்ணினர் இந்தப் பகுதிச் சிறுவர்கள்.

இதனால் கடந்த வருடம் சிறுவர்கள் 'கரோல்' நிகழ்ச்சி மூலம் வீடு வீடாகச் சென்று நிதி திரட்டி நிலுவையாக இருந்த மின் கட்டணத்தையும், மூன்று வருடத்துக்கான மின் இணைப்பு வாடகையையும் மின் சார சபையில் செலுத்தினர். இதன்பின்னர் குறித்த சனசமூக நிலையம் ஒளிபெற்றுவிடும் என்று சிறுவர்களும் மக்களும் காத்திருந்தனர்.

வழமையான இழுத்தடிப்புக்குப் பின்னர் நேற்று மாலை குறித்த சனசமூக நிலையத்துக்கு வந்த மின் சார சபை ஊழியர்கள் மின் இணைப்பு வேலைகளில் ஈடுபட்டனர். அதன்போது ஒரு பத்திரத்தில் சனசமூக நிலைய நிர்வாகத்தைச் சேர்ந்த ஒருவரிடம் கையொப்பம் வாங்கினர். அந்தப் பத்திரத்தில் 'புதிய மின்மானி பொருத்தப்பட்டது' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் கடைசி வரைக்கும் மின் மானி பொருத்தப்படவே இல்லை. இது குறித்து சனசமூக நிலைய நிர்வாகிகள் கேட்டபோது மின்சார சபையினருக்கு வந்ததே கோபம். உடனடியாக மின் இணைப்பை மீண்டும் துண்டித்து விட்டு ''தலைமை அலுவலகத்துக்கு வந்து கதைத்தால் தான் இனி உங்களுக்கு மின்சாரம்'' என்று கூறிச் சென்றுவிட்டனர்.

சிறுவர்கள் தமது கிராமத்தில் உள்ள சனசமூக நிலையத்துக்கு ஒளியூட்டபட்ட சிரமங்களை மின்சார சபையினர் கணக்கெடுக்காமல் தொடர்ந்தும் சனசமூக நிலையத்தை இருளில் மூழ்க வைத்துவிட்டதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ங)

## சடலம் கிடைத்தது; நகைகள் எங்கே?

### நீதிமன்றில் நேற்று முறையீடு

யாழ்ப்பாணம், ஜன.26
உடைந்த போத்தலால் குத்தி கொலை செய்யப்பட்ட குடும்பப் பெண்ணின் உடலில் இருந்த 3 பவுண் பெறுமதியான நகைகளை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் உரியவர்களிடம் ஒப்படைக்கவில்லை என்று யாழ். மேல் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆனைக்கோட்டையில் அமிர்தவதனி என்பவரை அவரது கணவர் உடைந்த போத்தல் ஒன்றினால் குத்திக் கொலை செய்தாரெனத் தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்த பெண்ணின் சடலத்தை மீட்ட மானிப்பாய் பொலிஸார் சடலத்தையும் அதிலிருந்த நகைகளையும் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். எனினும் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்த வைத்தியசாலையினர் அதிலிருந்த 3 பவுண் பெறுமதியான நகைகளை உரியவர்களிடம் ஒப்படைக்கவில்லை. 'நகைகள் எங்கே?' என்று அந்தப் பிரிவுக்கு கேட்டால், பொறுப்பான உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டார் என்று வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமிர்தவதனியைக் கொலை செய்ததாகக் கூறப்படும் அவரது கணவர் தனது மூன்று பிள்ளைகளையும் கைவிட்டுச் சென்று விட்டார். இந்த மூன்று பிள்ளைகளையும் அமிர்தவதனியின் பெற்றோரே பராமரித்து கல்வி புகட்டி வருகின்றனர். இதனால் அமிர்தவதனியின் நகைகளை விரைவில் பெற்றுத் தந்தால் அந்த மூன்று பிள்ளைகளுக்கும் அது பேருதவியாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொலைச் சந்தேக நபர் கொலைச்சம்பவத்தின் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைபடுத்தப்பட்டு பிணை அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இவர் மீதான குற்றப்பத்திரம் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து கிடைத்த உத்தரவுக்கமைய இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே நகைகள் வைத்தியசாலையில் இருந்து மீளப்பெற்றுத் தருமாறு உயிரிழந்த பெண்ணின் பெற்றோர் நீதிமன்ற நீதிவான் ஜெ. விஸ்வநாதனிடம் தெரிவித்தனர். இந்த வழக்கு அடுத்த தவணைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ங-4)

City & Guilds English!
புதிய பிரிவு ஆரம்பம் : 28 .01 .2012
● குறுகிய காலத்தில், குறைந்த கட்டணத்துடன் சர்வதேச அங்கீகாரமுள்ள இக்கற்கை நெறியை கற்று ஆங்கிலத்தில் சரளமாக உரையாட ஓர் அரிய சந்தர்ப்பம்.
● City & Guilds நிறுவனத்தினால் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களின் நேரடி வழிகாட்டல்
● எமது நிறுவனத்திலேயே பரீட்சைகள் யாவும் நடைபெறும்
A1- EXAM -Sponsor/Settlement Visa மூலம் வெளிநாடு செல்ல உள்ளவர்களுக்கானது
City & Guilds நிறுவனத்தின் A1 பரீட்சையானது மற்றைய ஆங்கில கற்கை நெறிகளுடன் ஒப்பிடும் போது மிகவும் இலகுவானதாக இருப்பதுடன் இது British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இக்கற்கை நெறியானது திருமணமாகி வெளிநாடு செல்ல உள்ளவர்களுக்கு (Sponsor, Settlement Visa), மிகவும் முக்கியமான ஒரு கற்கை நெறியாகும்.
B1- EXAM - Student Visa மூலம் வெளிநாடு செல்ல உள்ளவர்களுக்கானது
B1 பரீட்சையானது British High Commission ஆல் அங்கீகரிக்கப் பட்டது என்பதுடன் IELTS - 4.5 புள்ளிக்கு ஒப்பானதாகவும் உள்ளது. வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு உயர்கல்வியை மேற்கொள்வதற்காக உள்ள மாணவர்கள் Student Visa வினை இலகுவாக பெற்றுக் கொள்ளக் கூடியதாக B1 கற்கை நெறி அமைந்துள்ளது.
INSTITUTE OF INFORMATICS STUDIES
100 Clock Tower Road,Jaffna
T.P : 021 222 2831 Fax : 021 222 6933
E-mail : iis @iis.edu.lk

CHEMISTRY ⇨ S. VASU
NIGHT CLASS Inorganic ⇨ Sat, Sun 7.15 - 8.15pm
Organic ⇨ Mon, Tue 7.15-8.15pm
Physical ⇨ Wed, Thu 7.15-8.15pm
★ சகல பிரிவு மாணவர்களும் கலந்துகொள்ளலாம்.
★ வெளிமாவட்ட மாணவர்களுக்குச் சிறப்பு சலுகைகள்.
★ பூரண பாடத்திட்டத்துடன் அதிகளவு பயிற்சிகள்.
ஆரம்பம்:- 28.01.2012 சனிக்கிழமை 7.15pm
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

சட்டமாணிக்கற்கை யாழ்ப்பாணத்தில்
முதல் தடவையாக
LL.B(U.K)
➤ இலங்கை மற்றும் சர்வதேச அங்கீகாரம்
➤ க.பொ.த(உயர்தரம்) 2 பாடங்களில் சித்தி
➤ நுழைவுப்பரீட்சை இல்லை
நாங்கள் உங்களை சட்டத்தரணிகளாக்குகிறோம்.
வழிகாட்டிக் கருத்தரங்கும் விரிவுரையும்
திகதி : 28.01.2012, 29.01.2012
சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்
காலை 11.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை.
இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி (பட்டப்படிப்புக்கள் பிரிவு)
போதனா வைத்திய சாலை முன்பாக,
இல.484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்பாணம்.
T.P. : 0777 246 723

தொழிற்பயிற்சிகள்
ELECTRONICS சகல இலத்திரனியல் பொருள்கள் இயங்கும் முறை, பழுதுகள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம் 10 மாதம்
MOBILE PHONE REPAIRING
திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும் காலம் 3 மாதம்
AIR- CONDITIONING
குளிர்சாதனங்கள் இயங்கும் முறை, பழுதுகள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம் 6 மாதம்
சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பும் பெற்றுக்கொடுக்கப்படும். மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம் 28.01.2012 சனி 9.30
குறிப்பு:- GCE O/L சித்தியடையாத மாணவர்களும் பயிற்சிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.
சிங்கள வகுப்புக்கள்
சிங்கள மொழியில் சரளமாகப் பேச எழுத வாசிக்க.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 28.1.2012 சனி 4.00pm (காலம் 10 மாதம்)
பிரிவு: 1 மாலை 3 மணி, பிரிவு:11 மாலை 4.00 மணி
உத்தியோகஸ்தர்கள் பல்கலைக்கழகம் செல்ல உள்ள மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆர்வமுடையவர்கள் அனைவரும் பயில அரிய வாய்ப்பு.
விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
கிளை: 92/1, இராமநாதன் வீதி, (கலட்டிச்சந்தி அருகில்) யாழ்ப்பாணம். T.P.: 0215670345
இல.45, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயில் முன் வீதி) யாழ்ப்பாணம். T.P.: 0778249949, 0718561654
குறிப்பு:-
பல்கலைக்கழக மாணவர்களின் நலன் கருதி இல. 92/1, இராமநாதன் வீதி, (கலட்டிச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சிங்கள வகுப்புகள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் பி.ப. 3 மணிக்கு நடைபெறும்.

SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE
ஆங்கிலம் - புதிய பிரிவு ஆரம்பம் (26.01.2012 இன்று)
182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் → பிரிவு 1 : காலை 9.00 - 10.00; பிரிவு 2 : காலை 11.00 - 12.00
NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி → பிரிவு 1 : மாலை 2.00 - 3.00; பிரிவு 2 : மாலை 3.00 - 4.00
ராஜமாணிக்கம் மண்டபம் அருகில், பருத்தித்துறை வீதி, அச்சுவேலி → பிரிவு 1 : மாலை 4.30 - 5.30
சிங்களம் - புதிய பிரிவு ஆரம்பம் (26.01.2012 இன்று)
182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் → பிரிவு 1 : காலை 10.00 - 11.00
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

இரசாயனவியல்
2014 A/L பிரிவு II
ஆரம்பம் 26.01.2012 (வியாழன்) 5.30pm
DAY CLASS 2012 A/L (பிரிவு II)
ஆரம்பம் 28.01.2012 (சனி) 5.00 pm
N.கலா
83/19, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

வான் விற்பனைக்கு


இன்று 22½ லட்சம் உங்கள் கையிலிருந்தால் G.K ஆங்கில இலக்கமுடைய சகல வசதிகளையும் Central Lock (Full option) கொண்ட டொல்பின் வான் ஒன்றுக்கு சொந்தக்காரர் ஆகலாம். மிகுதிப் பணம் பினான்ஸ் முறையில் செலுத்தும் வாய்ப்பு உண்டு. வாகனத்தை யாழ். நகரில் பார்வையிடலாம். உங்களிடம் உள்ள இன்னொரு வாகனத்திற்கு மாற்றம் செய்யவும் முடியும். TELE- ZAHIR 0770230101

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org